www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஒக்.17-23,1999
ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 331

## தேர்தல் ஆண்டுக்கு தேயுத்த பட்ஜெட்!

## தேர்தலுக்கு முன்பாக திடீர் திருப்பங்கள்!

## அம்மாவின் சவால்!



## ரஜினி ஏன் பதுங்கினார்?

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com

# முரசம்

## போர் ஜெட்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

'கைப்புண்ணுக்குக் கண்ணாடி
தேவையில்லை' என்பார்கள்!

மிலேனியம் ஆண்டிலும்
விடாது போர் புரிய
ஆயுதங்களைக் குவிக்க
அரசாங்கம் ஆயத்தமாகியுள்ளது!

'பட்ஜெட்'டில்
பாதுகாப்புச் செலவினத்துக்காக
விண்ணை முட்ட
நிதி ஒதுக்குவதில்தான்
கண்ணும் கருத்துமாக உள்ளனர்!

எனவே, வரப்போவது
பட்ஜெட்டல்ல,
போர் ஜெட்!

தமிழ் பேசும் தரப்பை
பேரம் பேச முடியாதளவுக்கு
பலவீனப்படுத்திவிட்டே
போரை நிறுத்துவதுதான்
அரசாங்கத்தின் நோக்கம்!

'தேர்தலுக்கு முன்பாக
பேச்சு நடக்கலாம்.

'தேர்தலை சுலபமாக நடத்த
போர் நிறுத்தம் செய்யப்படலாம்!'
என்றெல்லாம் சிலர்
ஆருடம் கூறிவருகின்றனர்!

சில பத்திரிகைகளில்கூட
அப்படியான செய்திகள்
வெளியாகத் தவறவில்லை!

இவ்வாறான ஆருடங்கள்
அரசாங்கத்தின் குணாம்சம் பற்றிய
தெளிவின்மையால்தான்
கூறப்பட்டு வருகின்றன!

யுத்த வெற்றிகள்தான்
இன்றைய அரசாங்கத்தின்
தேர்தல் மூலதனம்!

இதனையும் விட்டால்
வெறுங்கையுடன்தான்
தேர்தல் அரங்கில் நிற்க வேண்டும்!

'இன்று போய், நாளை வருக'
என்று வாக்காளர்கள்
விடையளித்து விடலாம்!

எனவே, யுத்தத்தை
கைவிடும் நிலையில்
அம்மையார் அரசாங்கம்
இல்லை என்பது தெளிவு!

பேரினவாத முகாமுடன்
சமரசமாகவும், பணிவாகவும்,
அவற்றின் அபிலாசைகளுக்காகவும்
செயற்பட்ட
முன்னைய அரசாங்கங்கள் போலவே
அம்மையார் ஆட்சியும்
நகர்ந்து கொண்டிருக்கிறது!

பேரினவாதத்தைத்
திருப்தி செய்யாத
எந்த அரசாங்கமும்
ஆட்சியில் தொடரவும் முடியாது!

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
வேண்டாம் என்பதும்,
வடக்கு-கிழக்கைப் பிரிக்கும்
பொதியில் உள்ள ஷரத்தும்
பேரினவாதத்தின்
அபிலாசைகளையே எதிரொலிக்கின்றது!

புதுக்குடியிருப்புத் தாக்குதலும்
கோணகலத் தாக்குதலும்
அரசாங்கத்தின் தராசில்
எவ்வாறு எடைபோடப்பட்டன
என்பது நாமறிந்ததே!

பேரினவாத எடைக்கற்களை
கொண்டுதான்
இனப் பிரச்சனையும்
யுத்தமும், விளைவுகளும்
எடை போடப்படுகின்றன!

இத்தனைக்குப் பின்பும்
கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேடும்
தமிழ்க் கட்சிகளை
என்ன செய்வது?

எதிர்வரப்போகும்
பட்ஜெட்டை
பாராளுமன்றத்தில் உள்ள
தமிழ் பேசும் கட்சிகள்
ஒன்றுபட்டு எதிர்த்து நிற்குமா?

பட்ஜெட்டில்
பாதுகாப்புச் செலவீனத்தை மட்டும்
எதிர்த்து வாக்களித்துவிட்டு,
ஒட்டு மொத்தமான 'பட்ஜெட்'
வாக்கெடுப்புக்கு விடப்படுகையில்,
ஆதரித்து வாக்களித்து
மக்களை முட்டாள்களாக்குதல்
தமிழ்க் கட்சிகள் சில கையாளும்
அரசியல் விளையாட்டு!

இந்த விளையாட்டை விடுத்து
இம்முறையாவது
ஒட்டு மொத்தமான பட்ஜெட்டை
எதிர்த்து வாக்களிக்க
தமிழ் பேசும் கட்சிகள்
முன்வந்தாக வேண்டும்!

தமிழ் பேசும் தரப்பை
பலவீனமாக்கும்
பெரும் யுத்தத்துக்கு
நிதி ஆதாரம் கொடுப்பதே
எதிர்வரும் பட்ஜெட்டின்
முக்கியமான பணியாகும்!

இத்தகைய பட்ஜெட்டை
மொத்தமாக நிராகரிக்க
முன்வராத கட்சிகள்
தமிழ் பேசும் தரப்புக்கு
எதிரான போரில்
தொடர்ந்து பங்காளிகளாக
இருக்கப் போகின்றனவா?

வெறுமனே வாயளவில்
'யுத்தம் ஒழிக' என்று
கூறிக் கொண்டிருப்பது
பயன் அற்றது!
'மந்திரத்தால் மாங்காய் விழாது!'

சமாதான முழக்கமிடும்
குழுக்களும்,
பட்ஜெட்டை எதிர்த்து
குரல் கொடுப்பதோடு,
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமே
இங்கு தேவை என்பதை
வலியுறுத்த முன்வரட்டும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## அன்பே சிவம்

எல்லாம் பிரம்மம் எங்கும் பிரம்மம் என்று உணர வேண்டும். அதனால்தான் பகவான் கீதையில் சொன்னார்: "எவன் என்னை எங்கும் பார்க்கிறானோ, என்னிடத்தில் எல்லாவற்றையும் பார்க்கிறானோ அவனுக்கு நான் காணாமற் போவதில்லை. அவனும் எனக்குக் காணாமற் போவதில்லை" என்று. இதன் காரணமாக எல்லோரும் நாமாகவிருப்பதால் நாம் யாருக்கும் தீங்கிழைக்க மாட்டோம்.

நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தின் காரணமாகவும் அதன் வாசனை நம்மிடம் ஒட்டிக் கொள்கிறது. பிறகு அந்த வாசனைகளின் ஏவுதல்களின்படி நாம் காரியம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே வாசனைகள் சேராமல் இருக்க வேண்டுமானால் நாம் பற்றற்று காரியங்கள் செய்ய வேண்டும். பலனை எதிர்பார்க்காமல் செய்ய வேண்டும்.

எல்லா தெய்வங்களும் பகவான் ஒருவன்தான். அதனால் எவருக்கு எந்தத் தேவதை பிடிக்கிறதோ, அதனையே வழிபட்டுய்யலாம். வீணே அலைபட்டு உழலத் தேவையில்லை. நாம் எப்பொழுதும் கடவுள் ஞாபகமாகவே இருக்க வேண்டும். அதற்கு ஓர் எளிய வழி அவன் நாமத்தைச் சொல்வதுதான். சொல்லும் செயலும் அன்பானால் அங்கே பகவான் வெளிப்படுவான். அன்பே சிவமல்லவா?

"நீ எந்த உருவில் என்னை வணங்குகிறாயோ நான் அந்த உருவில் வந்து காட்சி அளிப்பேன்!" என்கிறார் பகவான். அதனால் எல்லா மதமும் சம்மதம் என்று இருக்க வேண்டும். பிற மதங்களை நாம் ஒரு போதும் தூஷிக்கக் கூடாது.

தொகுப்பு: அ.அரசரெத்தினம்- சேனையூர்-06, மூதூர்.

# ஆன்மீகம்



## சுவனத்தின் பேரரசி வள்ளல் பாத்திமா (ரலி)

பாத்திமா (ரலி) அவர்கள் உண்மையில் தாங்களே ஏழையாயிருந்தனர். அந்நிலையிலும் அவர்கள் ஏழைகளையும், அனாதைகளையும் கண்டு மனம் இரங்கினர். அவர்கள் வந்தவருக்கெல்லாம் வாரி வழங்கினர். இரந்தோர்க்கெல்லாம் இல்லையெனாது ஈந்து மகிழ்ந்தனர்.

அவர்களின் வள்ளல் தன்மையை எவ்வாறு விவரிப்பது? அவர்களின் திருமண நாளில் தந்தையார் அவர்களுக்கு ஓர் அழகிய திருமண உடையை வாங்கித் தந்தனர். அவர்களுக்குத் திருமணம் நடந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்வுடையை அவர்கள் கழற்றி ஓர் ஏழைக்குத் தானமாக வழங்கி விட்டனர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "திருமண ஆடை எங்கே?" என்று கேட்ட பொழுது மகளார் விவரத்தைக் கூறினர்.

"வேறு ஆடையை நீங்கள் வழங்கியிருக்கக் கூடாதா?" என்று நபியவர்கள் கூறிய பொழுது,

"உங்களுக்கு விருப்பமானவற்றையே பிறருக்கு வழங்குமாறு தாங்கள் தாமே கூறினீர்கள். அதனால்தான் எனக்கு விருப்பமான அவ்வாடையை வழங்கி விட்டேன்!" என்றனர். அதுகேட்டு எம்பெருமானார் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உள்ளம் பூரித்தார்கள்.

பாருங்கள் சகோதரர்களே! பாத்திமா (ரலி) அவர்களின் வள்ளன்மையை!

அனுப்பியவர்: சரீனா ஜெய்னுலாப்தீன்-ஏறாவூர்-02.

### புரிகிறதா?



கோண 'கொலை'
கண்டு குமுறும்
'உங்களுக்கு
புது குடியழிப்பு
சோகம் புரிகின்றதா!

சுகு செல்வராஜ்-கரோலினா, வட்டவளை.

### எச்சரிக்கை

உள்ளே புலிகளென்று
பள்ளியிலும் குண்டெறிவார்
பலியானோர் புலிகளென
பத்திரிகையில் தந்திடுவார்!

இர்.சபாபதி-திக்வளை தோட்டம், ஆலிஎல.

### இரண்டாயிரத்தி

வருக!
வருக!!
யாவருக்கும்
புகலிடப்
முகாமுக்குள்!

கவிப்பிரியன்- நுவைஸ்.
ஏ.மஜீத், நேரியகுளம்.

### வந்திடும் கிபீர்

கூட்டத்தில் கூடி நின்று
கூடிப் பிறற்றிடவும்
எங்களுக்கு நாதியில்லை...
வந்திடுமே கிபீர்!

கே.எஸ்.தர்மகுலசிங்கம்-
ஒந்தாச்சிமடம்.

### ஏன்?

மெக்குமிருக்குது
ஒரு மனம்
இது தெரியாத அரசுக்கு
ஏன் சிறுவர் தினம்

இ.சுகந்தி-கொழும்பு-06.

## கவிதைப் போட்டி இல.328

பரிசுக்குரிய கவிதை

### அ(இ)லட்சியம்

வெளிநாட்டில் கையேந்தி
வெடிகுண்டு வாங்குங்கள்
திருநாட்டில் கையேந்தி-நாம்
தெருவோரம் திரிகின்றோம்.

லிங்கராஜா கிரிசாந்தி-
மட்/புனித சிசிலியா பெண்கள்
பாடசாலை, மட்டக்களப்பு.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### அரசு

ஐ.நாவே
தலையிடாதே
பணம் அனுப்பு
ஆயுதம் அனுப்பு
இராணுவம் அனுப்பு
இவர்களும் சாக
நாங்களும் சாக
தீர்ந்திடும் பிரச்சினை

ம.திருவரசராசா-வவுனியா.

### தருவீர்களா?

பெற்றவர்கள் முகவரியை
தொலைத்து விட்ட நாங்கள்
புதிய தொரு முகவரியை
தேடுகிறோம் தருவீர்களா?

ராணி சாந்தலிங்கம்-மட்/
குருக்கள்மடம்.

### தமிழர்கள்

அகதிகளாய்
மட்டுமல்ல
எங்களை
அநாதைகளாயும்
ஆக்கிவிட்டார்கள்.

சிவராம்-வவுனியா.

### புகையாத நெருப்பு!

எரிகுடலில் பற்றி எரியும்
நெருப்புக்குப் புகையுண்டோ?

ச.மகாலிங்கம்-வெலிமடை.

### மாற்றம் எதுவுமில்லை பாப்பா

காலை எழுந்தவுடன் தவிப்பு-பின்பு
காக்கி உடையினரின் முறைப்பு!
மாலை முழுதும் பய விழிப்பு-இதில்
மாற்றம் நமக்கு இல்லை பாப்பா!

க.திருமால் அமிர்தகழி- மட்டக்களப்பு.

### அகதிகள்

ஐந்தாண்டுச்
சாதனைப்
பட்டியலில்
எங்களையும்
சேர்த்துவிடுங்கள்

என்-வவுனியா.

## கவிதைப் போட்டி இல.331



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 23.10.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.331
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

அன்பு முரசுக்கு;

கோணகல குடியேற்ற வாசிகள்மீதான தாக்குதல் தொடர்பான நாரதரின் கண்ணோட்டம் சிறப்புற இருந்தது. புதுக்குடியிருப்பு தாக்குதலை வெளியுலகம் மெல்லத்தானே கண்டித்தது. அப்பாவி மக்கள் உயிரிழப்புக்கள் கவலைக்குரியன. அதேநேரம் திட்டமிட்ட குடியேற்றவாசிகளால் தமிழ் மக்கள் தொடர்ந்து துன்புறுத்தப்படுவதையும் மறக்கக்கூடாது. எல்லாவற்றையும் கண்டித்துப் பேசுவது எளிது. ஆனால் நடைமுறையில் தமிழ் மக்களது துயர்களை வெளிப்படுத்த என்ன வழி? இராணுவ பாதுகாப்புடன் தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் குடியேற்றங்களை தடுக்க என்ன வழி என்றும் கண்டிப்பவர்கள் கூறியாக வேண்டும்.

எம்.சொர்ணலிங்கம், காரைதீவு.

### நேட்டோவின் குண்டுகள்

இனிய முரசுக்கு:

அன்று போர் என்றால் போர் என ஜே.ஆர் ஜெயவர்த்தனா கூறியதற்கும், இன்று குடி மக்கள்மீது குண்டு போட்டுவிட்டு நேட்டோ நாடுகளே பிழை விடுவதில்லையா என்று கூறியதற்கும் இடையே வித்தியாசம் இல்லை. நேட்டோ நாடுகள் தம் நாட்டு மக்களின் தலையில் குண்டுகள் போடுவதில்லை. அந்நிய நாட்டு மக்கள் மீதே குண்டுகள் போட்டுள்ளன. எனவே வன்னி மக்களை அந்நிய நாட்டு மக்களாகவே இலங்கை அரசும் நினைத்திருக்கிறது. அன்று ஜே.ஆரும் அதே தொனியில்தான் பேசியிருந்தார். இனி மேலாவது அரசாங்கத்துக்கு முறையிடும் பழக்கத்தை தமிழ்க் கட்சிகள் கைவிடுமா?

பே.தயானந்தன், யாழ்ப்பாணம்.

### 56 துப்பாக்கிகள்

முரசே!

அம்பாறை கல்லோயா குடியேற்றவாசிகளுக்கு ஆயுதங்கள் எப்போதோ வழங்கப்பட்டுள்ளன. கோணகல தாக்குதல் நடந்தபோதுகூட 56 துப்பாக்கிகள் அவர்களிடம் இருந்தன. இதனை பொலிஸ் அதிகாரியே கூறியுள்ளார். எனவே ஆயுதம் தரித்த குடியேற்ற கிராமம்மீதே தாக்குதல் நடந்துள்ளது. அதில் சாதாரண மக்கள் பலியானது துரதிஷ்டமே. ஆயுதங்கள் கொடுத்தும், முகாம்கள் நிறுவியும் பாதுகாக்கப் படும் குடியேற்றங்களை ஆட்சியாளர் தொடரும் போது இத்தகைய விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டுவிடுகின்றன.

மு.பாலகிருஷ்ணன், மட்டக்களப்பு.

### நாடகம்

முரசே!

தொல்லை தவிர்ப்புக் குழுவின் நாடகத்துக்கு முக்கியத்துவம் தருவது தமிழ் மக்களை ஏமாற்றத் துணைபோகும் செயலே. ஆரம்பத்திலேயே இக்குழு பற்றி முரசு கூறியதையே பல மாதங்கள் சென்ற பின்னர் யாவரும் உணர்ந்து கூறுகின்றனர். பொலிஸ் பதிவு முறை பற்றி தொல்லை தவிர்ப்புக் குழு உருவான நாள் முதலாய் பிரஸ்தாபிக்கப் படுகிறது. தீர்வு காண்பதுபோல செய்திகளும் வரும். மறுபடி பேசப்படும் இது நல்லதொரு நாடகமே!

கு.இராமநாதன், கொழும்பு-06.

அன்பு முரசாரே!

தகவல் பெட்டியும், சிந்தியா பதிலும், இராஜகுமாரனின் திருமறையும் நான் ஒரே மூச்சில் விடாது படித்து முடித்துவிடுவேன். மூன்றுமே முக்கனிகள் என்றால் தகும்.

இ.வசந்தமலர், கொழும்பு-12.

### முரசின் பாணியில்

'முரசின்'பாணியே முரசுக்கு முற்பட்ட பத்திரிகையாளர்களாலும் இப்போது பின்பற்றப்படுகிறது. முரசின் ஆக்கங்களது பாணியிலேயே ஆக்கங்கள் வரத் தொடங்கியுள்ளன. இது பாராட்டத்தக்கதே. ஆனால் ஒரு குறை. முரசு சினிமாவுக்கு இரு பக்கங்கள் ஒதுக்குவதால், சினிமாவுக்கு மரியாதையாக்கும் என்று ஏனையோரும் பல பக்கங்களை ஒதுக்குகின்றனர். 'முரசு' சினிமா பக்கத்தை குறைத்தால் என்ன?

வ.சகாயம், கனடா.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

# வாசக(ர்)சாலை



### உஷார் அலசல்

முரசே!

மொழித்திணிப்பு பற்றி இராஜதந்திரியார் தந்த உஷார் அலசல் பாராட்டத்தக்கதே. நமக்கு தேவை அரசியல் தீர்வே தவிர, இப்படியான சுற்றிவளைப்பான இன, மொழி அழிப்புக்களல்ல. சிங்களம் தேவையானவர்கள் படித்துக் கொள்ளட்டும். அதனை பாடசாலைகளில் புகுத்தி தமிழை படிப்படியாக பின்னே தள்ளி குழியில் புதைக்க அனுமதிக்கக் கூடாது.

இ.இராசநாயகம், முல்லைத்தீவு.

### மொழித் திணிப்பு

சிங்கள மாணவர்கள் தமிழ் படிப்பது என்பது கண்துடைப்பே. தமிழ் மாணவர்களிடம் சிங்களத்தைத் திணிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்பதை இராஜதந்திரி அம்பலமாக்கினார். தமிழ்க் கட்சிகள் தூங்குவது போன்று நடித்துக் கொண்டிருப்பதால், தமிழ் மொழிக்கும் ஆபத்து வருவதை எதிர்க்கவில்லை. தமிழ் பேசும் மாணவர்களை விழிப்பூட்டி எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டியது நம் கடமையாகும்.

சி.வடிவேற்பிள்ளை, மட்டக்களப்பு.

முரசுக்கு, வாழ்த்துக்கள்!

மோனிக்கா தொடர் விறுவிறு. 'இடி அமீன்' என்ற பெயர் வைத்தவர்கள் வாழ்க. பெயருக்கு பொருத்தமாகவே இருக்கிறார்.

மி.சுசி, வவுனியா.

அன்பின் 'முரசே'

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் ராஜேஸ் குமார் எழுதும் 'கையில் சிக்கிய மின்னல்', 'சிந்தியா பதில்', 'அதிசயம் ஆனால் உண்மை' ஆகியவை படு சூப்பர்.

ஐ.எப்.பஸானா,
புத்தளம்.

### மாலை விருந்தல்ல

'தான் பிரீன்' அயர்லாந்து போராளியா? நம்மவர் போன்ற உணர்வுதான் ஏற்படுகிறது. போராளிகளது மன உறுதிக்கு சான்றான பல சம்பவங்கள் நம் மனதை நெகிழவைக்கின்றன. நான் மாசேதுங் எழுதிய பல நூல்களைப் படித்திருக்கிறேன். தான் பிரீனின் கதையைப் படிக்கும்போது, மாசேதுங் கூறிய 'புரட்சி என்பது மாலை விருந்தல்ல' என்னும் கருத்து எத்தனை உண்மை என்று தெரிகிறது.

ஆ.மயில்வாகனம், சுன்னாகம்.

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து உண்மைகளும் சிறந்தவையே! அதில் 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி. வரை', 'எக்ஸ்ரே ரிப்போட்', 'காதிலை பூ கந்தசாமி' போன்றவை ரொம்பப் பிரமாதமாக உள்ளன.

இ.ஜெகதீஸ்வரன்,
வரணி.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.


படிப்பகம்

www.padippakam.com

# இன முரண்பாடுகள் மேலும் சிக்கலாகும்
# அரசே இதற்கு பொறுப்பேற்க வேண்டும்
## பொது மக்கள் மீதான தாக்குதல்! புலிகள் எச்சரிக்கை!

"போர்க்களத்தில் ஏற்படும் பேரிழப்புகளுக்கு பதிலடியாக தமிழ் மக்களது குடியிருப்புக்களைத் தாக்குவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும். இல்லையெனில் தமிழ்-சிங்கள இன முரண்பாடு மேலும் சிக்கலானதாக மாறும். இதன் விளைவுகளுக்கான பொறுப்பை அரசே ஏற்க வேண்டியிருக்கும்" இவ்வாறு விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு விமானத்தாக்குதலின் பின்னர் தற்போது வெளியாகியுள்ள 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"போர்க்களத்தில் படைகள் பேரிழப்பைச் சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இராணுவ இழப்புக்கு பதிலடியாக, தமிழரது குடியிருப்புக்கள்மீது பழிவாங்கும் தாக்குதல்கள் நடத்தப்படுவது வழமையாகும்.

1983 திருநெல்வேலி கண்ணிவெடித் தாக்குதலில் 13 படையினர் பலியாகினர். அதற்குப் பழிவாங்கும் முகமாக மாபெரும் இன ஒழிப்புத் தாக்குதலை அன்றைய ஜே.ஆரின் அரசாங்கம் தமிழ் இனத்தின்மீது ஏவியது.

1985இல் பொலிகண்டியில் இராணுவ வண்டி ஒன்றின்மீதான தாக்குதலில் 9 படையினர் பலியாகினர். இதற்குப் பதிலடியாக அப்பகுதி சனசமூக நிலையம் ஒன்றில் 25ற்கும் மேற்பட்ட தமிழர்களை அடைத்து வைத்து சுட்டுக் கொன்றனர்.

இதே போன்று யாழ் தேவி இராணுவ நடவடிக்கையை புலிகள் இயக்கம் முறியடித்த போதும், பூநகரி தளம்மீது புலிகள் பெரும் தாக்குதல் நடத்தியபோதும் வான் தாக்குதல்கள் நடத்தி தமிழ் மக்கள் மீது பழி தீர்க்கப்பட்டது.

முல்லைத்தீவு தளம் புலிகளின் கையில் வீழ்ந்தபோது, படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டுக்குள் பாரிய அளவில் வேட்டை நடந்தது. இவ்வாறு பல உதாரணங்களைக் கூறலாம்.

தமிழ் இனத்தின்மீது சிங்கள அரசும், அதன் படைகளும் நடத்திவரும் இந்த நடவடிக்கைகள் அடிப்படையில் இன அழிப்புப் பரிமாணத்தைக் கொண்டவை.

இலங்கைத் தீவில் இருந்து தமிழ் இனத்தை பூண்டோடு துடைத்தெறியும் சிங்கள பௌத்த பேரினவாத நிலைப்பாட்டின் செயல்முறை வடிவம் அது.

இவ்வகைச் செயல்கள் மூலம் தமிழர் மண்ணில் அவலத்தை விதைத்து, அதன் மூலம் தமிழ் மக்களை அடிபணியச் செய்வித்து, அவர்களது தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை நிலைகுலையச் செய்ய சிறீலங்கா அரசு முயல்கிறது.

இனக் கொலைப் பரிமாணத்தைக் கொண்ட இந்த அவல விதைப்புச் சித்தாந்தம் புலிகள் இயக்க தலைமையில் நடைபெறும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் செல்லாக் காசாகவே இருந்து வருகிறது.

அதேசமயம் இந்தவகை படுகொலைகள் தமிழ்-சிங்கள இனமுரண்பாட்டை மேலும் சிக்கலான நிலைக்கே இட்டுச் செல்லப் போகின்றன. இந்த விபரீதத்துக்கான விளைவை சிறீலங்கா அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்!" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## வவுனியா நகரில் குண்டு வெடிப்பு!
### சதிச் செயல் என்கிறார்கள் புலிகள்

வவுனியா நகரில் 09.10.99 அன்று மாலை கைக்குண்டு ஒன்று வெடித்தது. மாலை 6.50 மணியளவில் இக் கைக்குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

பொது மக்களைக் குறியாக வைத்தே மாடிக் கட்டடத்தில் நின்று குண்டை எறிந்துள்ளனர். 'படையினருக்கோ, பொலிசாருக்கோ குறிவைக்கப்பட்டதற்கான சாத்தியம் எதுவும் காணப்படவில்லை.

"வவுனியா பஸ் நிலைய கடைத் தொகுதியின் மாடிப் பக்கம் நின்றே குண்டை எறிந்துள்ளனர். தப்பியோட நினைப்போர் மாடியில் நின்று எறியமாட்டார்கள். இறங்கும்போது பிடிபட்டுவிடலாம். எனவே புலிகளோ வேறு இயக்கத்தினரோ கைக்குண்டை எறிந்திருக்க முடியாது" என்று மக்களே பேசிக் கொள்ளத் தொடங்கிவிட்டனர்.

ஏற்கனவே மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் மக்கள் கூடும் இடங்களில் மர்மமான கைக்குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அங்கு புலிகளின் நடமாட்டம் அதிகமான சந்தர்ப்பங்களிலேயே இவ்வாறு குண்டுகள் வெடிக்கப்பட்டன.

புலிகள்மீது அதிருப்தியை ஏற்படுத்தி, அவர்களது நடமாட்டங்கள் பற்றிய தகவல்களை மக்களிடம் பெறுவதற்கு தோதாகவே இவ்வாறு நடக்கிறதோ? புலிகளது எதிரிகள் செய்கிறார்களோ? என்று மக்கள் சந்தேகம் தெரிவித்தனர். தற்போது அதேபோன்றுதான் வவுனியா நகரிலும் மக்களை பாதிக்கக்கூடிய விதமாக கைக்குண்டு எறியப்பட்டுள்ளது.

இதற்கிடையே இக் குண்டு வெடிப்பு தொடர்பாக புலிகளின் செய்திக் குறிப்பு ஒன்றில், 'திட்டமிட்ட நாசவேலை' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் பஸ் வண்டிகளில் குண்டுகள் வெடிப்பதாகவும், தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான பிரசாரங்கள் தீவிர மடைந்து வருவதாகவும் புலிகள் தமது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர். ■

## இந்தியத் தேர்தல் முடிவுகள்
### தலையீடு இல்லை! அனுதாபம் உண்டு!

(நமது அரசியல் நிருபர்)

இந்தியத் தேர்தல் முடிவுகள் இலங்கையில் உள்ள தமிழர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. யாழ் குடாநாட்டிலும் மக்கள் பெரும் மகிழ்வுற்றதாக அங்கிருந்து வெளியாகும் 'உதயன்' நாளிதழ் தெரிவித்துள்ளது.

சோனியா காந்தி பதவிக்கு வந்தால் தனது கணவர் ராஜீவின் பாதையில்தான் நடப்பார். அக் கொள்கையால் இங்கு பயன் கிட்டாது. அது மட்டுமன்றி சோனியா இங்கு எத்தகைய அனர்த்தம் நிகழ்ந்தாலும் பாராமுகமாகவே இருப்பார் என்றே பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள் கருதுகின்றனர்.

இதன் காரணமாகவே பாரதிய ஜனதாவின் வெற்றியை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

பாரதிய ஜனதாவோடு கருணாநிதி, வை.கோ., டாக்டர் ராமதாஸ் ஆகியோர் கூட்டணி அமைத்திருப்பதாலும் அந்த அணி மீது இலங்கை தமிழர்கள் நாட்டம் கொள்ள காரணமாக அமைந்தது.

இலங்கை முழுவதும் உள்ள தமிழர்கள் மட்டுமன்றி, உலகெங்கும் உள்ள தமிழர்களும் பாரதிய ஜனதா கூட்டணியின் வெற்றியையே எதிர்பார்த்திருந்தனர். முடிவுகளை அறிந்ததும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

இதேவேளை கொழும்பு சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் பல பாரதிய ஜனதா வெற்றி பெற்றதையிட்டு தங்கள் அதிருப்திகளை வெளியிட்டுள்ளன.

பாரதிய ஜனதா பதவிக்கு வந்துள்ள போதும், இங்கு இனப்பிரச்சனையில் உடனடியாக தலையிடும் என்றோ, பகிரங்கமாகக் கருத்துக் கூறப்படும் என்றோ எதிர்பார்க்க இயலாது.

ஆயினும் அந்த அணியில் வை.கோ., டாக்டர் ராமதாஸ் போன்றோர் இருப்பதால் இலங்கை இனப்பிரச்சனையில் அனுதாபமான பார்வை இருக்கும். விரோதமான போக்கு இருக்காது. இங்கு யுத்தத்தில் அரசாங்கத்துக்கு உதவி செய்யவும் பாரதிய ஜனதா அரசாங்கம் முன்வரமாட்டாது.

தமிழ் நாட்டில் புலிகளுக்கு சார்பாக பேசுபவர்களுக்கு ஆதரவு கிடையாது என்பதை இம்முறையும் பொய்யாக்கியுள்ளனர் வை.கோ, டாக்டர் ராமதாஸ் ஆகியோர். இவர்கள் பகிரங்கமாக தமிழ் ஈழக் கோரிக்கையை ஆதரித்து விஞ்ஞாபனம் வெளியிட்டிருந்தனர். ■

## பெண்கள் எழுச்சி தினம்
### தீச்சுடர் ஏந்தி ஊர்வலம்

வன்னியில் தமிழீழப் பெண்கள் எழுச்சி தினம் 10.10.99 அன்று அனுஷ்டிக்கப்பட்டது. புலிகள் இயக்கத்தில் முதலில் பலியான இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் நினைவு நாளே எழுச்சி தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இந்தியப் படையினருடனான மோதலில் மாலதி பலியானார். இம்மோதல் கோப்பாய் பகுதியில் நடைபெற்றது. எழுச்சி தினத்தை முன்னிட்டு புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள வன்னி, மட்டக்களப்பு, திருமலை பகுதிகளில் பல நிகழ்வுகள் நடைபெற்றன.

வன்னியில் 19ம் கட்டைச் சந்தியில் இருந்து முழங்காவில் மாவீரர் கலையகம் வரை ஊர்வலம் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் பெண்கள் நாதஸ்வரம் வாசித்து சென்றனர். கையில் தீச்சுடர் ஏந்தியவாறும் பெண்கள் அணிவகுத்துச் சென்றனர். மாவீரர் கலையகத்தில் நாச்சிக் குடா மகாவித்தியாலய அதிபர் திருமதி தேவி தனபாலசிங்கம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பில் கடுக்காமுனையில் இருந்து அம்பிலாந்துறைவரை மாபெரும் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. பாடசாலை மாணவர்கள் உட்பட பெரும் திரளானோர் கலந்துகொண்டனர். ●

## மாகாணசபை எரிபொருள் நிலையம்
### அம்பலமாகிறது துஷ்பிரயோகம்

(திருமலை நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெருமளவிலான மோசடிகளும் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றுள்ள விடயம் அம்பலமாகியுள்ளது.

சுமார் நான்கு வருடங்களாக இவை தொடர்ந்துள்ளதாகவும், சுமார் பத்துலட்சம் ரூபாய் வரையிலான மோசடிகள் இடம்பெற்றுள்ளதாவும் முரசுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது பற்றிய ஆரம்ப விசாரணைகள் தொடக்கப்பட்டுள்ள போதிலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரணைகளுக்குச் சமூகம் கொடுக்க விரும்புகிறார்களில்லை என்றும் தெரியவருகிறது.

மாகாண சட்டவியற் பிரிவால் இவ் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. எனினும் சம்பந்தப்பட்டோரில் ஒத்துழைப்பின்மையால் தொடக்கநிலை விசாரணைகூட இழுபட்டுச் செல்வதாக மாகாணசபை அதிகாரியொருவர் முரசு நிருபரிடம் கவலை தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மக்களின் சொத்துக்களை யார் வேண்டுமானாலும் சூறையாடலாம் என்ற நிலையில் யாரை நோவது? ●

## சம உரிமை கேட்பது நியாயமா?
### ஐ.தே.கட்சி பிரமுகர் கேள்வி

"இந்த நாட்டின் ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாப்பதற்காக படையினர் தமது உயிரையும் உறுப்புக்களையும் தியாகம் செய்கின்றனர். ஆனால் ஒருசிலர் அத்தியாகிகளின் மனோதிடத்தைச் சீர்குலைய வைக்கும் விதத்தில் போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை என்றெல்லாம் கூறிவருகிறார்கள். இந்த நாட்டில் வசிக்கும் சிறுபான்மையினர், பெரும்பான்மையினரைப் போல் சமமான உரிமைகள் தங்களுக்கும் வேண்டும் என்றும் கூக்குரலிட்டு வருகிறார்கள். சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் போன்று சம உரிமை கோருவது நியாயமாகுமா?"

ஐ.நா.சபையில் சிறீலங்காவின் தூதுவராக முன்னர் இருந்தவரும் ஐ.தே.கட்சியின் செயற்குழு உறுப்பினருமான பேராசிரியர் ஸ்டான்லி கல்பகே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

தேசிய ஒருங்கிணைப்புக்குழு அண்மையில் 'அரசியல் யாப்புக்கான மாற்று யோசனைகள்' என்ற பொருளில் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கிலேயே அவ்வாறு கூறினார்.

பேராசிரியர் கல்பகே தொடர்ந்து பேசுகையில், "போரை நிறுத்திவிட்டு சமாதானத்துக்காகப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு முற்பட்டால் நாளை பிரபாகரனுக்காக நாட்டைப் பிரித்து ஒரு பகுதியை அவருக்குக் கொடுத்தே ஆகவேண்டும். பிரபாகரன் சமாதானம் என்ற பெயரில் தனது தனி நாட்டுக்கான கனவை ஒரு போதும் விடப்போவதில்லை," என்று தெரிவித்தார். ■

## மலையகத்தில் பலத்த கண்காணிப்பு—ரயில்கள்மீதும் ஒரு கண்

(கண்டி நிருபர்)

நானுஓயாவில் ரயில் தண்டவாளத்தை தகர்த்து ரயிலை கவிழ்த்துவிட எடுக்கப்பட்ட முயற்சியை அடுத்தும், மலையகத்தில் அடிக்கடி இடம் பெறும் குண்டுவெடிப்புக் காரணமாகவும் மத்திய பிரதேச பிரதி பொலிஸ்மா அதிபரும் ஊவா பிரதேச பிரதி பொலிஸ்மா அதிபரும் புலனாய்வுப் பணிகளை நேர்த்தியாக தொடர பணிப்புரை விடுத்துள்ளனர்.

வடக்கிலும் கிழக்கிலும் இருந்து மலையகத்திற்கு நுழையும் தமிழ் இளைஞர்கள் மீதான கண்ணோட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கண்டி, நுவரெலியா, பதுளை, கம்பளை, மாத்தளை, அட்டன் போன்ற இடங்களில் இந்தக் கண்காணிப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து புறப்படும் மலையக இரவு ரயில்கள்மீதும் புலனாய்வுப் பிரிவின் கண்ணோட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ■

## பஸ் சாரதி கைது!
### நடத்துநர் தலைமறைவு!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு போக்குவரத்துச் சாலை பஸ் சாரதி மா.சிவலிங்கம் என்பவர் சமீப சில நாட்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்தார்.

அவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டிருப்பது பின்னர் தெரியவந்தது. மட்டக்களப்பில் சமீபத்தில் நடந்த பாரிய கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல் தொடர்பாக உளவுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்தே இவர் கைதாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு நகரில் இருந்து புலிகளின் நிர்வாகத்தின் கீழுள்ள பதுளை வீதிப் பகுதியிலேயே இவர் சேவையில் ஈடுபட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர், கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மேலும் இரண்டு நடத்துநர்கள் தலைமறைவாகியுள்ளனர். அவர்களும் புலிகளின் பகுதியிலேயே பஸ் நடத்துநர்களாக கடமையாற்றியவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பஸ் சாரதிகள், நடத்துநர்கள் தங்களுடன் கொண்டு செல்லும் பொதிகளை சோதனைச் சாவடியில் உள்ள பொலிசாரும், இராணுவத்தினரும் வழக்கமாகச் சோதனை இடுவதில்லை.

இந்த சாதகத்தைப் பயன்படுத்தி யார் கண்ணிலும் படாமல் இவர்களே புலிகளிடமிருந்து வெடிபொருட்களைக் கொண்டு வந்து நகருக்குள் உள்ள புலிகளிடம் சேர்ப்பிக்கின்றனர் என்று சீருடைத்தரப்பார் இப்போது சந்தேகிப்பதாகக் கூறப்படுகிறது. ●

## கண்டு பிடித்தவர் மீது தாக்குதல்!

(மட்டக்களப்பு நிருபர்)

கொழும்பிலிருந்து காத்தான் குடிக்கு வந்து சேர்ந்த 62-7749 இலக்க சொகுசு பஸ்ஸில் வைக்கப்பட்டிருந்த நேரக் குண்டுப் பொதி கண்டு பிடிக்கப்பட்டது.

இது பற்றித் தெரியவருவதாவது: 11.10.99 அன்று காலை 10 மணியளவில் இந்த பஸ் ஆரையம்பதியை அடைந்தபோது, சகல பயணிகளும் இறங்கி விட்டனர். தனது பாதணியைத் தொலைத்த முஸ்லிம் இளைஞர் மாத்திரம் அதைத் தேடிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு பொதி அவரது கண்ணில் பட்டிருக்கிறது. அதைத் தூக்கி வந்து பஸ் சாரதியிடமும், நடத்துநரிடமும் கொடுத்திருக்கிறார்.

அவர்கள் பிரித்துப் பார்த்தபோது அதனுள்ளே வயர், பெற்றரி, குண்டு என்பன இருப்பதைக் கண்டு மரண பயத்தோடு தூரத்தே எறிந்து விட்டு ஓடோடி வந்து அருகிலிருந்த பொலிஸாருக்கு அறிவித்தனர். பொலிஸார் வருவதற்கிடையில் குண்டு வெடித்துவிட்டது. இக்குண்டு வெடிப்பினால் அதிஷ்டவசமாக எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

சம்பவத்தைக் கேள்விப்பட்ட அங்கிருந்த ரெலோ இயக்கத்தினர் குண்டைக் கண்டு பிடித்த இளைஞனைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனை அறிந்த பொலிஸார் மேலதிக விசாரணை செய்து முஸ்லிம் இளைஞனை விடுவித்தனர். குண்டைக் கண்டு பிடித்து பாரிய இழப்பைத் தடுத்த இளைஞன் மீது ரெலோவினர் தாக்கியதைப் பொலிஸார் கண்டித்தனர். ■

## தமிழ்க் கைதிகள் மோதல்
### வேடிக்கை பார்க்கும் காவலர்கள்

களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகளிடையே ஏற்படும் மோதல்களை வேடிக்கை பார்க்கும் சம்பவங்கள் சமீப காலமாக அதிகரித்துள்ளன.

"தமிழர்தானே உள்ளே இருந்து அடிபட்டுக் கொண்டு அழிந்தாலென்ன வெளியிலிருந்து செத்தாலென்ன?" என்று சில சிறைக் காவலர்கள் ஒதுங்கியிருப்பதாகவும் அறிய முடிகிறது.

களுத்துறைச் சிறைச்சாலையின் தாங்கள்தான் சிரேஷ்ட கைதிகள் எனக் கூறிக் கொண்டு ஏனைய சிறைக் கைதிகளை இம்சைப்படுத்தி வந்த ஒரு குழுவினர் கடந்த 25.09.99 அன்று பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

ஏனைய கைதிகளின் உடமைகளைப் பறித்துக் கொள்ளல், தமது அட்டகாசத்திற்கு ஒத்துழைப்பு வழங்காதவர்கள்மீது விஷமம் பண்ணுதல், சிறைச்சாலையில் உண்ண, உடுக்க, உறங்க முடியாதவாறு தடுத்தல், தமக்கு வேண்டாதவர்களைக் கழிவறைப் பக்கம் ஒதுக்கி வைத்தல் போன்ற தீய செயல்களில் ஈடுபட்டு வரும் இவர்கள் தங்களை றாசிக்குழு ஆதரவாளர்கள் என்று கூறிக் கொள்கின்றனராம்.

அன்றைய சம்பவத்தில் ஓர் இளைஞர் இந்தக் குழுவினரால் பலமாகத் தாக்கப்பட்டார். கரம் போட், எஸ்லோன் பைப், கற்கள் கொண்டு தாக்கத் தொடங்கினர். பின்னர் அங்கிருந்த படையினர் ஓடி வந்து கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்து குழப்பத்தைத் தடுத்தனர். ஆனால் சிறைச்சாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் "தமிழர்கள் அடித்துக்கொண்டு சாகட்டும்!" என்று முணுமுணுத்துக் கொண்டு வேடிக்கை பார்த்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குழப்பத்தையடுத்து பாதிக்கப்பட்ட 65 பேரும் இராணுவத்தினரின் கண்காணிப்பிலுள்ள 'எஃப்' பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

'டி' பிரிவில் உள்ள தேவன் (சிவானந்தம்) என்பரே அட்டகாசக் கும்பலின் தலைவர் என்று தெரியவருகிறது. குழப்பத்தை விளைவித்தவர்கள் என்று கண்டறியப்பட்ட ஆறு பேர் தனிப் பிரிவொன்றில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## "சிங்களவருக்கு நிலம் இல்லை"
### வீரவிதான பிரமுகர் கொதிப்பு

(கண்டி நிருபர்)

"தோல்வியை தழுவாத சிங்கள இனம் இன்று விரைவில் தோல்வியை எதிர்கொண்டு செல்லும் இனமாகத் திகழ்கின்றது. இது எதைப் போன்றதென்றால் கூலிக்கு வீட்டில் இருந்தவன் வீட்டு உடைமையாளனையே வெளியே இழுத்துப் போட்டது போன்ற நிலையாகும்"

இப்படிக் கூறியிருக்கிறார் சிங்கள வீரவிதான அமைப்பின் பிரசாரச் செயலாளரும் இணைப்பு அதிகாரியுமான கலாசூரி சதிஸ் சந்திர எதிரிசிங்க.

கம்பளை கீரப்பனை பௌத்த மத்திய நிலையத்தில் கடந்த வாரம் நடைபெற்ற வீரவிதான பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மல்வத்தை பௌத்த பீடத்தின் நிருவாக உறுப்பினர் வண அலுத்கம தம்மானந்த தேரர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அங்கு எதிரிசிங்க தொடர்ந்தும் கூறியதாவது, "மலையகத்தில் பிரேதத்தைப் புதைக்கக்கூட 50 ஆண்டுகள் வாழ்ந்தவருக்கு வழியில்லை. டி.எஸ்.சேனாநாயக்க காலத்தில் குடியேற்றப்பட்ட மூன்றாவது பரம்பரையினர்க்கு ஒரு துண்டு காணியும் இல்லை. என்றாலும் காணியும் வீடும் தொண்டாவின் முயற்சியில் இப்பகுதி தமிழ் மக்களுக்குக் கிடைக்கின்றன. பொதி நடை முறைக்கு வந்தால் நாட்டின் பாதியும் கடலின் 4/5 பங்கும் சிங்களவருக்கு இல்லாமல் போகும்' என்று ஆவேசமாக உரையாற்றினார். ■

www.padippakam.com

# தேர்தலை எதிர்கொள்வது எப்படி?

## அமைச்சர் மத்தியில் அச்சம்!

எதிர்வரும் தேர்தல்களில் எந்த முகத்தைக் கொண்டு வாக்காளர்களை அணுகுவது என்பது ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள்-முக்கியமாக அமைச்சர்கள் மத்தியில் எழும் பூதாகர மான கேள்வியாகும்.

கடந்த பொதுத் தேர்தலின்போது பொ.ஜ.முன்னணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் கொடுக்கப்பட்ட வாக் குறுதிகள் எதனையும் பதவிக்கு வந்த இந்த 5 வருடங்களில் நிறைவேற்ற எத்த கைய நடவடிக்கையும் எடுக்கப்படாதிருக் கும்போது, வாக்காளர்களிடம் சென்று எவ்வாறு வாக்குச் சேகரிக்க முடியும்? என்று பல முக்கிய அமைச்சர்களே கவலை அடைகின்றனர்.

கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. வழக்கமாகத் தலைமை தாங்கும் ஜனாதிபதி சந்திரிக்கா குமார துங்க அமெரிக்கா சென்றுள்ளமையினால் அமைச்சர்கள் தங்களுக்குள் வெகு தாராள மாக மேற்படி சிக்கல் தொடர்பாகக் கருத்துக்களை வெளியிட வாய்ப்புக் கிடைத்தது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஓர் அமைச்சர் தன்னுடன் 1994ம் ஆண்டுத் தேர்தலை ஒட்டி பொதுஜன முன்னணி விஞ்ஞாபனத்தின் பிரதி ஒன்றைக் கொண்டு வந்தாராம். இதில் தெரிவிக்கப்பட்டிருந்த சரத்துக்களை ஒவ்வொன்றாகப் படித்து அமைச்சர்கள் விமர்சித்தனராம்.

"வேலையற்ற இளைஞர்களுக்கு மாதா மாதம் ஆயிரத்தி ஐநூறு ரூபா வழங்கப்படும் என்றொரு வாக்குறுதியும் விஞ்ஞாபனத்தில் இடம் பெற்றுள்ளது. ஆனால் அதனை ஒட்டி இதுவரை எவருமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இவ்வாறிக்கும்போது இன்றைய இள வட்டங்களின் வாக்குகள் எமக்கு எவ்வாறு கிடைக்கப்போகின்றன?" என்று மற்றுமோர் அமைச்சர் விசனப்பட்டாராம்.

# ஆள்வோர் கவனம் திரும்புமா?

## பழி வாங்கப்பட்டோர் பரிதவிப்பு

(கண்டி நிருபர்)

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியல் பழி வாங்கல்களுக்கு உள்ளான 6000 ஆசிரியர்கள் தமக்கு இன்னும் விமோசனம் கிடைக்கவில்லையே என அங்கலாய்க்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலும் அடுத்த பொதுத் தேர்தலும் அண்மித்துவிட்ட இவ்வேளையில் 1994ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த இன்றைய ஆட்சியாளர்கள் முழு விசாரணைகளின் பின்னர் நியாயம் வழங்க தெரிவாகிய 6000 ஆசிரியர்களுக்கு எத்தகைய பதிலைக் கூறப்போகிறார்கள் எனவும் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

அரசியல் பழிவாங்கல் தொடர் பாகத் தெரிவிக்கப்பட்ட 30 ஆயிரம் முறைப்பாடுகளில் 20 ஆயிரம் பேர் மாத்திரமே பரிசீலனைக்குத் தெரிவாகி னர். அவற்றிலும் 6 ஆயரம் பேர் மாத்திரம் அரசியல் பழிவாங்கலுக்கு உரித்துடையவர் எனவும் இது பற்றி விசாரணை செய்த குழு சிபார்சு செய்திருந்தது.

# புதிய ஒலிபரப்பு

தனியார் வானொலிச் சேவையான (பிபிசி) இலண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாப னம் தனது சிற்றலை ஒலி பரப்பை அக்டோபர் முதலாம் திகதி முதல் இலங்கை, இந்தியா உட்பட தெற்காசிய நாடுகளுக் கும், பர்மா, சிங்கப்பூர், மலேசியா உட்பட கிழக்காசிய, தென் கிழக் காசிய, தூரகிழக்கு நாடுகளுக் கும், மொரீசியஸ், டொமினிக்கன் குடியரசு, தென்னாபிரிக்க, கிழக்காபிரிக்க, மத்திய கிழக்கு நாடுகளுக்கும், தினமும் ஒரு மணிநேரம் விரிவுபடுத்தியுள்ளது.

இந்த நிகழ்ச்சி இலங்கை நேரம் காலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை சிற்றலை 16 மீட்டர்பாண்ட் 17.495 கிலோ ஹேர்ட்ஸ் (SW 16 17.495KZH) அலைவரிசை யில் ஒலிபரப்பாகிறது. இந்த சிற்றலை ஒலிபரப்பில் மும்மொழிச் செய்திகள் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) ஒலிபரப்பா கிறது.

இத்துடன் சனி, ஞாயிறு தினங் களில் அவுஸ்திரேலிய இன்பத்தமிழ் ஒலி வானொலி, இலங்கை சக்தி FM என்ப வற்றுடன் இணைந்து ஒரு மணி நேர நிகழ்ச்சியும் நடத்தி வருகின்றது. இந் நிகழ்ச்சி ஐக்கிய இராச்சிய நேரம் பகல் 12.00 முதல் 1.00 வரை ஒலிபரப்பாகி வருகின்றது.

# திணிப்புக்கு எதிர்ப்பு

(நமது நிருபர்)

தமிழ் பேசும் மாணவர்கள் மத்தியில் சிங்களத்தைத் திணிக்கும் அரசாங்கத்தின் முடிவுக்கு பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட உள்ளது.

தமிழ் பேசும் மாணவர் அமைப்புக்கள் மூலமும், அரசியல் ரீதியாகவும் எதிர்ப்புத் தெரிவிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இனப்பிரச்சனைக்கு அரசியல்தீர்வு காண்பதை விடுத்து இவ்வாறான இனரீதியான தனித்துவ சீர்குலைப்புக் களில் அரசாங்கம் ஈடுபட முயல்வதாக தமிழ் ஆசிரி யர்கள் பலரும் கருத்துக் கூறியுள்ளனர்.


## ஜேர்மன்-தமிழ் அகராதி

☆ 30 ஆயிரத்திற்கும் அதிகமான ஜேர்மன் மொழிச் சொற்களுக்கான தமிழ் மொழிச் சொற்கள்.
☆ இலக்கண விளக்கம்.
☆ புதிய அணுகுமுறையிலான சரியான உச்சரிப்பு விளக்கம்.
☆ மாதிரிக்கடிதங்கள்.

தொடர்பு கொள்ளவும்-
K.Chandrasegaran (Swiss) 01/461 57.49, 01/241 16 30
Natel 079/285 83 09, Kanonengasse 19,8004 Zurich
V.Sivanesarajah (Swiss) 01/492 02 61
தமிழ் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.


# 3ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு ❖❖❖ 07 ☆ 04 ☆ 1998



உதிர்வு ❖❖❖ 29 ☆ 08 ☆ 1999

## செல்வி மாதினி பிரபாகரன்

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இலண்டனில் வசித்தவருமாகிய செல்வி மாதினி பிரபாகரன் 29.08.1999 அன்று இலண்டனில் காலமானார். இவர் திரு.திருமதி பிரபாகரன்-கிருஷ்ணா தம்பதியினரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்ற திரு.திருமதி சச்சிதானந்தம் பறுபதம், திரு.திருமதி சின்னத்துரை இராசலட்சுமி ஆகியோரின் பேத்தியும், காலஞ்சென்ற திரு.திருமதி செபமாலை பொன்னம்மா, சுந்தரம் தெய்வானை ஆகியோரின் பூட்டியும், திரு.திருமதி ஸ்ரீதரன் (மக்கள் வங்கி, நெல்லியடி) மல்லிகாதேவி, சி.ஜெயந்திமலர் (இலங்கை மின்சார சபை) திரு.திருமதி நவநீதபாலன் ஜெயந்திரூபி (சுவிஸ்) காலஞ்சென்ற சி.வசந்தி, திரு.திருமதி சந்திரகுமார் துரைமதி (ஹொலண்ட்) ஆகியோரின் பெறா மகளும், திரு.திருமதி க.மகேந்திரராசா (காணிப் பதிவகம், பருத்தித்துறை) ஸ்ரீ நந்தனா ஆகியோரின் அன்பு மருமகளும், முகுந்தன், திருபிகா, நிரோஷிகா, ரமணன், நித்தியா, நயோமி, மிஷாம் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், மயூரன், மனோராஜ், மதிரதன், மனோஜன், நிதர்சன், சர்மிலன், சஞ்சிதா ஆகியோரின் அன்பு மச்சாளும் ஆவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: க.மகேந்திரராசா. ஸ்ரீமஹால், அல்வாய்.
பிரபாகரன். இலண்டன். 00181-578.1689




## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

*அஸ்மா *வீசிங் *தொய்வு *முட்டு *இழுப்பு *இளைப்பு *மாய்ச்சல் *மூச்சுத்தட்டல் *மூச்சடைப்பு *மண்டைச்சளி *நெஞ்சுச்சளி *தடிமன் *இருமல் *கச்கல் *கனகடி *மூக்கடைப்பு *பீனிசம *தலைவலி *தும்மல் *நாசிஅரிப்பு *மூக்கால்நீர்வடிதல் *மூக்கினுள் சவ்வு வளர்தல்.

போன்ற குணங்களுக்கு காஸ், பம், ஊசிகள், சேலைன் என்று பாவித்தும் சுகம் கிடையாத பல ஆயிரக் கணக்கான நோயாளிகள் நாட்டின பல பாகங்களில் இருந்து வந்து உடலுக்குப் பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகள் மூலம் முழுக் குணமடைந்து செல்கிறார்கள். கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல், குளித்தல் போன்ற பல ஆலோசனைகளுடன் (அவரவர் தாய் மொழிகளில்) சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்

டாக்டர் சூறாஜ் சோமசுந்தரம் Ph.Dr(Ind);M.B.B.Scu (Cey)
அஸ்மா சிகிச்சை நிபுணர் Govt. Reg. No : A 1553 (1970)

பார்வை இடப்படும் இடங்கள

| | |
|---|---|
| 25, சில்வெஸ்டர் வீதி,கல்கிசை மவுண்ட்லேவினியா-(கொழும்பு) (பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஒடியன் தியேட்டர் காலி வீதி) இவ்விடத்தில் பழைய நோயாளர் களும் மற்றும் பதிவு செய்த புதிய நோயாளர்களும் செவ்வாய்-வியா ழன்-சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 12.00மணி வரையும், தினமும் மாலையில் 4.00 மணி முதல் 7.00மணி வரையும் பார்வையிடப்படுவர். தொலைபேசி இல : 074-201582 | 44A, பாடசாலை அவெனியு, புகையிரத நிலைய(ஸ்ரேஷன்) வீதியூடாக,தெகிவளை.(கொழும்பு) (பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் தெகிவளைச்சந்தி) இவ்விடத்தில் தொலைபேசி மூலம் பதிவு செய்யப்பட்டு நேரம் பெறப்பட்ட புதிய நோயாளர்கள் மட்டுமே திங்கள்-புதன்-வெள்ளிக் கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையும் இதே நாட்களில் இரவில் 9.00 மணி முதல் 10.30 மணி வரையும் பார்வையிடப்படுவர். தொலைபேசி இல : 728767 |

தற்சமயம் தினமும் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் தூர மாவட்டத்திலுள்ள புதிய நோயாளர்கள் நான்கு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பெற்று பிரயாணத்தை ஆரம்பிக்கவும்.

அவசர தொலைபேசி இலக்கம்: 078-650516
E-mail - drsuraj @eureka.lk



CIMA ASIAN TAKE AWAY

Indische Spezialitated

இந்திய-இலங்கை அறுசுவை உணவுகளை சுவைத்து மகிழ்ந்திட நாடுங்கள்
CIMA ASIAN TAKE AWAY
Kanonengasse 19, 8004 Zurich. Zurich Kaserne யின் பின்புறம்

தினசரி சைவ-அசைவ உணவுகள்

புரியாணி
தண்டூரி வகைகள்
சப்பாத்தி

கொத்து ரொட்டி
நாண்
சமோசா மற்றும்

அனைத்துவகை தமிழ் உணவுகள்

Take away & Party Service
CIMA ASIAN TAKE AWAY
Kanonengasse-19,
8004 Zurich.
Tel: 01/241 16 30 Natel 079/ 285 83 09



## அமெரிக்க விசாவுக்கு லொத்தர்

03.11.99க்கு முன் விண்ணப்பப்பத்திரம் அமெரிக்காவில் கிடைக்க வேண்டும். கடந்த வருடம் எம் கை ராசியினால் ஒன்பது குடும்பங்கள் அமெரிக்கா சென்றுள்ளார்கள் என்பதை பெருமையுடன் அறியத் தருகிறோம்.

இலவச விண்ணப்பத்திற்கு,

STUDIO CHHAYA
40-1/1, Galle Road,
Colombo-06.
T.P.:- 594492


# திதியும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்

தோற்றம் 31 ❖ 12 ❖ 1941



மறைவு 05 ❖ 10 ❖ 1998

## செல்லத்துரை செல்வேந்திர ராஜ்

(பிறப்பிடம்-தொண்டமானாறு, வசிப்பிடம்- ஆரையம்பதி)

எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு சென்றாலும்
எம் நினைவுகள் என்றும்
உங்களோடு
என்றும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.
என்றும் மறவா நினைவுகளுடன்

மனைவி யோகநாயகி,
மகன்மார் சிறிஸ்கந்தராஜா,
சிறீமோகன்ராஜ், மகள்
சிறீமோகனரஜனி.
இராசதுரை கிராமம்,
ஆரையம்பதி.03
தகவல்: ஏ.சசிகுமார்.

# 1ம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 27 ❖ 01 ❖ 1959



மறைவு 27 ❖ 09 ❖ 1998

திதி
15.09.1999

## அமரர் மதியாபரணம் மகேசன்

உரிமையாளர் (ரேவதி ஜுவல்லறி) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எங்கள் குடும்பத்தின் தலைவனாய் பாசத்தோடும், பரிவோடும் வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆகிடினும உங்கள் நினைவுகள் என்றும் எம் உள்ளங்களில் நீங்காத நினைவுகளாக நிலைத்து நிற்கும், தெய்வமே உங்கள் பாதக் கமலங்களுக்கு எங்கள் சிரம் தாழ்ந்தி வணங்கும் இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லூரானை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்: தாய், மனைவி, சகோதரர்கள், நண்பர்கள்.
வளாகவீதி, திருநெல்வேலி.


## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை
கொழும்பில் ஒக்டோபர் 20 முதல் 27 வரை சந்திக்கலாம்
Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388
கல்முனை நவம்பர் 06,07ம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329
கடிதத்தொடர்பு:- Resident T.P. 065-24019
Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

(27.09.1999)

தோற்றம்: 07.03.1982 மறைவு: 27.09.1998

## சீ. பூங்கௌரி



சின்னப் பூவே நீ
சிறகடித்துப் பறந்ததெங்கே?
எங்கள்
நெஞ்சம் பிளந்திருக்க
இதயம் வெடித்திருக்க
உந்தன் நினைவுகளில்
இன்னும் நாம் உயிரோடு

கருகுதடி எம் ஈரல் கருகுதடி
பூ உந்தன் நெஞ்சினிலே
குண்டு பாய்ந்த
செய்தி கேட்டு.

ஓ உயிரே!
எம் உலகே
எம்மை விட்டு
எங்கு சென்றாய்?
கருக்கல் வேளையில்
கடைக்குப் போக
அம்மா துணை கேட்டாயே

காலன்
உன்னைக் கூப்பிடுகையில்

எமை அழைக்க மறந்ததென்ன
நம்பமுடியவில்லை
இன்னும் எம்மால் நம்பமுடியவில்லை
பால்மணம் மாறா உன் பூமுகம்
எம் மனதில் பதிந்திருக்க
வழிதெரியாத விழிகளோடு
படலையை பார்த்திருக்கின்றோம்!
வா எங்கள் கண்மணி.

உன பிரிவின் துயரில்,
அம்மா, அம்மம்மா,
தங்கைமார், பூங்கா,
லோசி,

தகவல்:- பெரியப்பா
கந்தையா, அண்ணா
சுதாகரன்.
0181 509 2092. (UK)

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஊடுருவும் தாக்குதல்களும் படைத்தரப்பின் ஆச்சரியங்களும்!

விடுதலைப் புலிகளது டாங்கி எதிர்ப்புப்படையணி படைத்தரப்புக்கு சவாலாக மாறியுள்ளது.

இது தொடர்பாக படைத் தரப்பு கூறிவரும் வியப்பான கருத்துக்களை கடந்த சில வாரங்களாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் இக்பால் அத்தாஸ் எழுதி வருகிறார்.

ஆனையிறவு இராணுவ தளப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு டாங்கிகள் செப்டம்பர் 24ம் திகதி பகல் 10.30 மணிக்கு தகர்க்கப்பட்டன. இதனையிட்டே படைத்தரப்பு கூறிவரும் வியாக்கியானங்களை இக்பால் அத்தாஸ் வெளியிட்டுள்ளார்.

ஆனையிறவு தளப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட டாங்கிகளை புலிகள் தகர்ப்பது என்றால், தளப் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகும். குறிப்பிட்ட பொறுப்பான அதிகாரிகள்மீதும் விசாரணைகள் வரும்.

ஆகவே புலிகள் நீண்டதூரத்தில் இருந்து, நீண்டதூர ஏவுகணையால் டாங்கிகளை தகர்த்துவிட்டதாக ஒரு கதை சொல்லப்பட்டுள்ளது.

ஆனையிறவு தளத்துக்குள் நீண்ட தொலைவில் இருந்து செலுத்தக்கூடிய ஏவுகணை புலிகளிடம் இருந்தால் தளத்தில் ஒரு டாங்கியைக்கூட நிறுத்தி வைக்க முடியாது. அதுதவிர வன்னிச் சமருக்காக கொண்டு சென்று குவிக்கப்பட்டுள்ள டாங்கிகள் பலகூட தரையில் நிறுத்திவைக்க முடியாமல் போயிருக்கும்.

தரையில் இருந்து தரைக்கு ஏவக்கூடிய டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் புலிகளிடம் இருக்கலாம் என்று படைத்தரப்பு தகவல்களை வைத்து அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

வன்னிச் சமர்க்களம் சமவெளி, வெட்ட வெளி பகுதிகளில் நடக்கும் போர் அல்ல. பெரும்பாலான சண்டைகள் காட்டுப் பகுதிகளைச் சார்ந்தவை.

எனவே நீண்டதூரத்தில் இருந்து குறி வைத்து டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை செலுத்த முடியாது. குறியும் வைக்க முடியாது. மரங்கள் தடுக்கும். காப்பரண்கள் குறுக்கிடும். இவ்வாறு பல சிக்கல்கள்.

வளைகுடாப் போரில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை வன்னியில் பயன்படுத்த முடியாது. புவியியல் சூழல்கள் வேறானவை.

டாங்கிகளை தகர்க்கக்கூடிய குறும்தூர டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள்தான் வன்னிச் சமரில் புலிகளால் பயன்படுத்தப்படுகின்றன.

ரணகோஷ 04 கட்டம் இரண்டு நடவடிக்கையில் புலிகளது டாங்கி எதிர்ப்புப் பிரிவினர் திறம்பட செயற்பட்டனர். தங்கள் உயிரைப் பணயம் வைத்து டாங்கிகளை நெருங்கி வந்து டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளால் தாக்கினர். இதனால்தான் அச் சண்டையில் புலிகள் தரப்பில் உயிரிழப்பும் அதிகமாக இருந்தது.

புலிகளது தியாகங்கள், துல்லியமான உளவறிதல்கள், படைத்தள பாதுகாப்பு ஓட்டைகள், சமர் பின்னடைவுகள் என்பவற்றை மறைக்க புலிகளிடம் நவீனரகமான விதம் விதமான ஆயுதங்கள் இருப்பதால்தான் வித்தை காட்டுகிறார்கள் என்று படைத்தரப்பு கூறுகிறது.

தள்ளாடி முகாம்மீது புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தியபோது பல குழல் பீரங்கி பாவிக்கப்பட்டதாக படைத்தரப்பு சந்தேகித்தது. விடத்தல் தீவில் இருந்து அதனை பயன்படுத்தியதாகவும் கூறப்பட்டது.

ஆனால் பல குழல் பீரங்கியின் சுடுதூரம் விடத்தல் தீவுக்கும் தள்ளாடி முகாமுக்கும் இடையிலான தூரத்தைவிட குறைவானது.

அந்த தூரத்தை எட்டக்கூடிய பல குழல் பீரங்கியின் பெரியரகம் புலிகளிடம் இருந்தால் தள்ளாடி முகாமை தாக்கவே தேவையில்லை. கொழும்புவரைகூட ஷெல் ஏவி அச்சுறுத்தலாம்.

ஆனையிறவுத் தளப்பகுதிக்குள் நிறுத்தப்பட்டிருந்த இரு டாங்கிகளே தகர்க்கப்பட்டன.

இவ்வாறான தாக்குதல்கள் இதற்கு முன்பும் பலமுறை நடத்தப்பட்டுள்ளன.

கரும்புலி அணிகள் படையினரின் பாதுகாப்பான தளங்களுக்குள் ஊடுருவி இலக்குகளை அழிக்கும் தாக்குதல்களே இவையாகும்.

பலாலி இராணுவ தளத்தின் மையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமானங்கள்மீது கரும்புலிகள் ஊடுருவித் தாக்கியிருக்கின்றனர்.

கரும்புலிகள் தாக்குதல் என்றால் கரும்புலிகளாக செல்வோர் பலியாவது என்று மட்டும்அர்த்தமல்ல. இலக்கு ஒன்றை ஆயுதத்தால் அழிக்க முயல்வது. முடியாதபோது தம்மைத் தாமே அழித்துக்கொண்டு இலக்கை அழிப்பது. இத்தகைய தாக்குதல்களுக்கும் கரும்புலி அணிகளே அனுப்பி வைக்கப்படும்.

ஆயுதங்களால் இலக்கை அழிக்க முடிந்தால், கரும்புலி அணி உயிரோடு தளம் திரும்பும். பிறிதொரு தாக்குதலுக்கு தயாராகும்.

படை முகாம்களில் உள்ள ஆட்டிலெறிகளை அழிக்கவும் கரும்புலிகள் அனுப்பப்படுவதுண்டு. அவற்றில் வெற்றிபெற முடியாமல் கரும்புலிகள் பலியாகியும் உள்ளனர்.

ஆனையிறவு தளத்தில் நிறுத்தப்பட்ட டாங்கிகள் வெடித்ததுக்கு புலிகள் இதுவரை உரிமை கோரவில்லை.

ஆனால் புலிகள் தாக்கியிருந்தால் கரும்புலிகள் ஊடுருவித்தான் தாக்கியிருக்க வேண்டும்.

நான்கு கிலோ மீட்டருக்கு அப்பால் நின்றே ஆனையிறவு தளத்தின் உள் நின்ற இரு டாங்கிகளுக்கு ஏவுகணை எய்யப்பட்டதாகவும் ஊகம் கூறப்படுகிறது. இது வேடிக்கையான ஊகம்.

ஆனையிறவு தளப்பகுதி தற்போது மேலும் பெருப்பிக்கப்பட்டு பரந்த பிரதேசமாக உள்ளது.

ஆனையிறவு தளத்தை சுற்றி காவல் வேலிகள் மறைத்து நிற்கின்றன. காப்பரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. தளத்தின் வெளியே நின்று பார்த்தால் உள் நகர்வுகள் தெரியவே தெரியாது.

அப்படியிருக்க நான்கு கிலோமீட்டர் தூரத்தில் இருந்து குறிபார்ப்பது எப்படி? டாங்கிகள் நிற்பதை காண்பது எப்படி? ஏவுகணையை ஏவினால்கூட அது டாங்கியை நெருங்க முன்பே இடையே உள்ள முகாம் வேலிகளில் மோதி வெடித்துவிடும். இந்த சாதாரண விஷயத்தைக்கூட கருத்தில் கொள்ளாது ஊகங்கள் கூறப்பட்டுள்ளன.

ஒருவேளை ஆட்டிலெறிகள் போல தரையில் இருந்து தரைக்கு ஏவப்படும் ஏவுகணைகளும் உயர்ந்து வளைந்து போய்விழும் என்று கருதப்பட்டிருக்கலாம். அது தவறு.

தரையில் இருந்து தரைக்கு ஏவப்படும் ஏவுகணை நேர் கோட்டில்தான் பயணம் செய்யும். அதனால்தான் இதன் உபயோகம் வன்னிக் களத்துக்கு தோதானதல்ல. வெட்ட வெளியான பரந்த போர்க்களங்களுக்கே உகந்தது.

எனவே படைத்தரப்பின் தகவலை அடிப்படையாகக் கொண்ட ஊகங்கள் தவறாகிவிட்டன. புலிகள் தளத்தில் உள்ளே ஊடுருவித்தான் தாக்கியிருக்கிறார்கள்.

எனவே, டாங்கியை காணும் தூரத்தில் புலிகள் இருந்தால்தான் தாக்குவது சாத்தியம். காணும் தூரத்தில் புலிகள் இருக்க வேண்டுமானால் உள்ளே ஊடுருவி நகர்ந்து வந்திருக்கிறார்கள். அப்படி வர முடிந்த பின்னர் அங்கிருந்து தாக்குவதற்கு ஆர்.பி.ஜி.கூட போதுமானது.

ஆனால் ஆர்.பி.ஜி.யும் பாவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஏவுகணையால் நீண்ட தூரத்தில் இருந்து தாக்கியதாகக் கூறும் படைத்தரப்பினர் இன்னொரு தகவலையும் கூறிவிட்டனர். அது முன்னைய கூற்றுக்கு நேர்மாறாக இருக்கிறது.

நிர்மூலமான இரு டாங்கிகளுக்கு அருகாமையில் வயர் சுருள்கள் கிடந்துள்ளன. ஏவுகணையால் தாக்கினால் வயர் சுருள் ஏன் வருகிறது. எனவே டாங்கியை நெருங்கி குண்டை பொருத்தி வயர் இழுத்துச் சென்று எட்டத்தில் நின்று வெடிக்கவைத்துவிட்டு, வந்த வழியே புலிகள் திரும்பிச் சென்றுவிட்டனர் என்றும் கருதலாம்.

அதுமட்டுமன்றி பயிற்சியில் ஈடுபட்டிருந்த படையினர் மத்தியிலும் ஷெல் ஏவப்பட்டுள்ளது. இது ஆட்டிலெறி ஷெல் அல்ல. மொட்டார் ஷெல். எனவே தளப்பகுதிக்குள் இலக்குக்கு குறுகிய தூரத்தில் இருந்தே புலிகள் செயற்பட்டிருக்கிறார்கள்.

ஷெல் வெடித்ததும் இரு படையினர் மூர்ச்சையாகினர். அவர்கள் அதிர்ச்சியில் மூர்ச்சையானதை, மயக்கத்தில் மூர்ச்சையானதாக கருதப்பட்டது. அதனால் வெடித்த ஷெல்லை ஐரோப்பா நாடு ஒன்றுக்கு அனுப்பி அது நச்சுக்குண்டா என்று பரிசோதித்துப் பார்த்திருக்கிறார்கள்.

டாங்கி வெடித்ததும் பயிற்சியில் உள்ள படையினர் தம்மைப் பின்தொடராது தடுக்க புலிகள் ஷெல்லை ஏவி படையினரை தற்காப்பு நிலைக்கு தள்ளியிருக்கலாம். அந்த கால அவகாசத்தில் தளப்பகுதியைவிட்டு வெளியேறியிருக்கலாம்.

சில மாதங்களுக்கு முன்னரும் இத் தளப் பகுதியில் குண்டு ஒன்று வெடித்தது. தளத்துக்கு பொறுப்பான சரத்முனசிங்கா காயமடைந்ததாகவும் செய்தி வந்தது. படைத்தரப்பு அதுபற்றி எதனையும் கூறவில்லை.

முன்பு ஒலுமடுப் பகுதியில் தரையிறங்கிய ஹெலியை தாக்கியழிக்கச் சென்ற கரும்புலி அணி படைத்தரப்பின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் பலவற்றை இரவோடு இரவாக நீண்ட தூரம் கடந்தே காத்திருந்து தாக்கியமை குறிப்பிடத்தக்கது.

30.12.97 அதிகாலை 3.30 மணிக்கு மாங்குளத்தில் இருந்து புறப்பட்ட கரும்புலிகளின் விசேட அணி, 02.01.98 காலை வரை படையினரின் அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் பற்றைக்குள் பதுங்கிக் கிடந்தது.

பல மினிமுகாம்கள், கம்பித் தடைகள், முட்கம்பி வேலிகள், பொறிக் கிடங்குகள் என்பவற்றை இலாவகமாகக் கடந்து சென்று காத்திருந்தனர்.

அந்த கரும்புலி அணியினர்தான் 02.01.98 அன்று எம்.17 ஹெலியை தாக்கியழித்துவிட்டு உயிர்ச்சேதம் இன்றி தளம் திரும்பினார்கள்.

இலகு ரக உந்துகணையாலும், ரி.81 ரக எல்.எம்.ஜியாலும் ஹெலி தாக்கப்பட்டது.

தாக்குதல் நடைபெற்றது சாதாரண பகுதியல்ல. ஜயசிக்குறுய் களக் கட்டளைத் தலைமையகம் அமைந்திருந்த பகுதியில்தான் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனையிறவு தளம் போன்றே பாதுகாப்பான பகுதி அது. அதுவும் நண்பகல் 1.26 மணிக்கே தாக்குதல் நடந்தது.

பகல் நேரமாக இருந்தும்கூட தாக்குதலை முடித்துக்கொண்டு படையினரின் தேடுதலில் அகப்படாது நீண்டதூரம் கடந்து திரும்பியிருந்தது கரும்புலிகள் அணி.

அதேபோன்று ஆனையிறவு தளத்திலும் பகல் 10 மணியளவில்தான் டாங்கிகள் இரண்டும் நிர்மூலமாகியுள்ளன.

பாதுகாப்பான படைப்பிரதேசங்களுக்குள் ஊடுருவதோ, தாக்குவதோ, சேதம் இன்றி தளம் திரும்புவதோ புலிகளுக்கு புதுமையல்ல.

இனிமேல் மேலும் ஊடுருவும் தாக்குதல்கள் தீவிரமாகப் போகின்றன. தமது பாதுகாப்பான இராணுவப் பிரதேசங்களுக்குள் புலிகள் ஊடுருவியதை ஒப்புக்கொள்ள படைத்தரப்பு தயங்கிக் கொண்டிருக்க, புலிகள் இராணுவப் பிரதேசங்களுக்குள் இறங்கத் தொடங்கிவிட்டன.

விரைவில் படைத்தரப்பின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் புலிகளது தாக்குதல்கள் பரவலாக ஆரம்பமாகும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

ஊடுருவும் தாக்குதல்கள் இரண்டு விதமாக மேற்கொள்ளப்படும்.

ஒன்று, படையணிகள்மீது புலிகள் பதுங்கியிருந்து நடத்தும் தாக்குதல்கள்.

இரண்டு, படைப்பிரதேசத்துக்குள் உள்ள இலக்குகளை அழிக்கும் கரும்புலிகளது விசேட அணிகளது தாக்குதல்கள். இத் தாக்குதல்களில் இராணுவ தளபாடங்கள், கனரக வாகனங்கள், பீரங்கிகள் போன்றவையும் இலக்காக இருக்கும்.

இன்னொன்றையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். புலிகளது டாங்கி எதிர்ப்புப் படையணியின் பிரதான ஆயுதமாக ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சர்களே உள்ளன. எனினும் நவீனரக டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களும் நீண்டகாலமாக புலிகளிடம் உள்ளன. இவை விலை காரணமாக குறிக்கப்பட்ட அளவில்தான் உள்ளன. தோளில் தாங்கிச் செல்லக்கூடிய டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களே புலிகளால் பாவிக்கப்படுகின்றன.

ரசியா, பல்கேரியா போன்ற நாடுகளில் டாங்கி எதிர்ப்பு ஆயுதத்தை புலிகள் வாங்கியிருக்கலாம் என்று படைத்தரப்பு சந்தேகிக்கிறது.

ஆனால் புலிகளே தம்மிடமுள்ள டாங்கி எதிர்ப்பு ஆயுதத்தை வெளியிட்டுள்ளனர். அது ரசியாவினுடையதல்ல. சுவீடனில் தயாரிக்கப்பட்டது.

அதுபற்றிய விளக்கத்தை பெட்டிச் செய்தியில் பார்க்கவும். அதன் பின்புறம் பிரபாகரனின் முகம் பொறித்த வர்ண இலச்சினை புலிகளால் ஒட்டப்பட்டுள்ளது.

—★—

மன்னார் கடற்பரப்பில் கடற்புலிகள் பலத்த இழப்பு ஒன்றை சந்தித்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து புலிகளுக்கு தேவையான மருந்துப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொண்டு வருவதில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்குமே மோதல் மூண்டதாக தகவல்.

மன்னார் கடற்பரப்பில் புலிகளின் சில படகுகள் வந்துகொண்டிருப்பதைக் கடற்படையினர் கண்டுள்ளனர்.

பொருட்களை ஏற்றிவந்த படகுகளும், அவற்றுக்கு பாதுகாப்பாக வந்த படகுகளுமே கடற்படையினரின் ராடர் திரையில் விழுந்துள்ளன.

கடற்புலிகள் தரப்பில் அதிக எண்ணிக்கையான படகுகள் இல்லை என்பதாலும், அவை வந்துகொண்டிருப்பது இந்தியாவில் இருந்துதான் என்று ஊகித்ததாலும், கடற்படைச் சண்டைப் படகுகள் விரைந்தன.

கடற்படைப் படகுகள் தம்மை நோக்கி வருவதைக் கண்டதும், பொருட்களோடு வந்த படகுகளை வேறு மார்க்கமாகச் செல்லுமாறு அனுப்பிவிட்டு, கடற்புலிகளது தாக்குதல் அணியினர் கடற்படையினரை எதிர்கொண்டனர்.

கடற்புலிகளது துணைத் தளபதியான லெப்டினன்ட் கேணல் நிரோசன் இச் சண்டையை வழிநடத்தினார்.

அதிகாலை 1.30 மணியளவில் இச் சண்டை ஆரம்பமானது. இரு தரப்புக்கும் இடையே கடும் சண்டை நடந்தபோதும் கடற்படையினரின் கைகளே மேலோங்கின.

கடற்புலிகளது படகு ஒன்று கடற்படையினரின் தாக்குதலால் பற்றி எரிந்தது. அப்படகில் இருந்த கடற்புலிகளும் பலியாகினர்.

இன்னொரு கடற்புலிகளின் படகு தாக்குதலால் சேதமானதால், கடலில் தத்தளித்தது. அப்படகில் இருந்த கடற்புலிகளும் பலியாகினர்.

தமது தளத்தில் இருந்து கடற்புலிப் படகுகள் உதவிக்கு விரைய முன்பாகவே கடற்படையினர் தமது தாக்குதலை முடித்துக் கொண்டனர்.

இரண்டு படகுகளிலும் இருந்த பதினைந்து கடற்புலிகள் பலியானார்கள். இவர்களில் சண்டையை வழிநடத்திய நிரோசன் கடற்புலிகளது துணைத்தளபதி. நன்றாகப் பாடக்கூடியவர். கடற்புலி முகாம்கள் இவரது பாடல்களால் களை கட்டும்.

கடற்சண்டைகள் பலவற்றில் நிரோசன் பங்குகொண்டவர். கிளாலி தளம் மீதான தாக்குதல் உட்பட 10.08.99 இல் புல்மோட்டை கடற்பரப்பில் நடைபெற்ற கடற்சமரிலும் நிரோசன் முக்கிய பங்கு கொண்டவர் என்று கூறப்படுகிறது.

நிரோசனுடன், மேஜர் ஜெயராஜ், மேஜர் நகுலன், மேஜர் செல்லையா, மேஜர் சேந்தன், லெப்டினன்ட் பொற்கோ, கப்டன் இளநிலவன், லெப்டினன்ட் பாவேந்தன், லெப்டினன்ட் நாகமணி, லெப்டினன்ட் தமிழ் நம்பி, இரண்டாம் லெப்டினன்ட் இசைவாணன், இரண்டாம் லெப்டினன்ட் மாறன், வீரவேங்கை முதல்வன், வீரவேங்கை செம்பியன், வீரவேங்கை இளையவன் ஆகியோரும் பலியாகினர்.

இச் சண்டை கடற்படையினருக்கு பெரும் வெற்றியே. கடற்படை தரப்பில் டோரா இரண்டு சேதமானதாகத் தெரிகிறது. உயிர் சேதம் ஏதும்இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

இச் சண்டையில் தமது துணைத் தளபதியை இழந்த புலிகள் அதற்கு பதிலடி ஒன்று கொடுப்பதற்கு முனைப்புக் காட்டப் போகிறார்கள்.

நாரதர்

## கார்ல் குஸ்ரவ் எம்2 84மி.மீ. டாங்கி எதிர்ப்பு துப்பாக்கி

சுடு குண்டின் விட்டம் : 84 மி.மீ
தயார் நிலையில் முழு எடை : 14.2 கி.கி
ஏவுகருவியின் நீளம் : 113 சென்டி மீட்டர்
ஆகக் கூடிய சுடுதூரம் : 700 மீட்டர்
சுடு குண்டின் உச்சவேகம் : 330மீட்டர்/செக்கன்.
ஊடுருவும் தன்மை : 440மி.மீ. கனத்திற்கு மேல்.
தயாரிப்பாளர் : போ்போர்ஸ்நிறுவனம், சுவீடன்.



ஒருவரால் மட்டும் இயக்கப்படக்கூடிய முதன் முதலில் தயாரிக்கப்பட்ட டாங்கி எதிர்ப்புக் கருவி இதுதான். இரண்டாவது உலகப் போரின்போது உபயோகிக்கப்பட்டது. தற்போது மிக நவீனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது உலகில் பல பாகங்களிலும் இராணுவத்தினரால் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. டாங்கி எதிர்ப்பு ஆயுதமாக உபயோகிக்கப்பட்டாலும், ஹெலிகொப்டர்கள், யுத்தக் கப்பல்கள் போன்றவற்றையும் வேறு பல கவச வாகனங்களையும் தாக்கவும் உபயோகிக்கப்படுகின்றது.

இதனை தோளில் வைத்து இயக்க வேண்டும். ஒருவரால் இயக்கப்பட்டாலும் இன்னொருவரின் துணையால் கருவியின் பின்புறம் திறந்து சுடு குண்டினை உட்செலுத்துவதன் மூலம் மிக விரைவாகவும் திறமையாகவும் செயற்படுத்தலாம். சுடு குண்டு ஷெல் போன்று கன்ன வடிவில் காணப்படும். சன்னம் வெடித்துக் கிளம்பும் போது அதனுள்ளிருந்து கிளம்பும் வாயு கருவியின் பின்புறமாக வெளியேறுவதால் இயக்குபவருக்கு உதைப்புத் தாக்கமிருக்காது.

இதன் சுடுகுண்டு சுடப்படும்போது அதன் சன்னம் துப்பாக்கிக் குழலிலிருந்து குண்டு புறப்படுவதுபோன்றே சுழன்று சுழன்று நேர் பாதையில் செல்லும். இலக்குத் தவறாது. இங்கு புலிகள் இயக்க உறுப்பினர் தோளில் தாங்கியிருப்பதும் இதுதான்.

## அதிரடி அய்யாத்துரை



***சுவிஸில் கழக*** மாணிக்கத்துக்கு கண்ணீர் அஞ்சலி செய்துள்ளனர் முன்னாள் கழகத்தினர். ஆனால் இந்நாள் கழகத்தினர் இங்கு எந்த அஞ்சலியும் செய்யவில்லை. கழக மாணிக்கத்தில் என்னதான் பிழைகள் இருந்தாலும், கழகம் அவருக்கு நன்றி சொல்லத்தான் வேணும். வவுனியாவில் கழகத்தை நிலைப்படுத்தி வைத்ததில் அவர் பங்கு பெரும் பங்கல்லோ!

***தமிழ்க்கட்சி*** முன்னாள் முதலவருக்கு 'சமிட் பிளேஸில்' அட்டகாசமான தங்குமிடம் ஏற்பாடு செய்து தரப்பட்டுள்ளது. வி.ஐ.பிகள் மட்டுமே தங்கும் உயர்தரமான பாதுகாப்புப் பகுதி இது என்பதால்தான் அங்கு இடம் கொடுக்கப்பட்டதாம். இப்போது அங்கு வெகுஜோராக கட்சி வேலைகள் நடக்கிறதாம். இதனால் அவரது எதிர்த்தரப்புக்கு வயிறு பற்றி எரிகிறதாம்.

***பொலிஸ் பதிவு*** கேட்கக்கூடாது என்று தொல்லை தவிர்ப்புக் குழு பணிப்பாம். இவைக்கு பணிக்க என்ன அதிகாரம் கிடக்கு! சும்மா கணக்கு விடுகினம். இந்தச் செய்திபோட்ட பத்திரிகை ஒன்றின் நிருபர்களிடமே பதிவுத் துண்டு கேட்டனராம் சீருடையினர். செய்தியாளர் அட்டைக்குக்கூட மரியாதை கொடுக்கவில்லையாம்.

***அம்மணிதான் அமோக*** வெற்றி பெறுவார், அப்படி இல்லையானாலும் கூட்டணி ஆட்சிக்காயினும் தலைமை தாங்குவார் என்று நம்நாட்டு அதிகாரத்தரப்பினர் நம்பியிருந்தவையாம். டமில் கட்சிகள் சிலவற்றுக்கும் அப்படியொரு கணிப்புத்தானாம். இறுதியில் எல்லாமே தப்புக்கணக்காகிப் போனதும், விழுந்தும் மீசையில் மண்படாத மாதிரி வாழ்த்து அறிக்கைகளை 'ரீல்' கணக்கில் சுற்றி விட்டிருக்கினம்.

***கொழும்பில் இராணுவம்*** பொன்விழா கொண்டாடினாலும் கொண்டாடியது, கொழும்பு மாநகரத் தந்தை தலையில் கைவைத்தபடி இருக்கிறாராம். காலிமுகத்திடலில் ஆயிரம் கோடி ரூபாவில் வளர்த்த புதுப் புத்தரைகளையெல்லாம் டாங்கிகள் உழுதுபோட்டுப் போய் விட்டனவாம். ஆறு நாள் ஒத்திகை. ஒரு நாள் அணிவகுப்பு. பசுமையெல்லாம் பஞ்சாய்ப் பறந்தாச்சாம். கோல்பேஸில் டாங்கி புகுந்ததுக்கே இந்தக் கவலை என்றால், வடக்கில் எத்தனை குடிமனைகள், வயல் நிலங்களுக்குள்ளே எல்லாம் புகுந்து போயிருக்கினம், அது எப்படியிருக்கும் என்றும் நினைத்துப் பார்க்கிறது நல்லதன்றோ!

***உள்ளூரில் ஏட்டிக்குப்*** போட்டியாக பல தனியார் தமிழ் வானொலிகள். இதைவிட வெளிநாடுகளில் இருந்தும் பல தமிழ் வானொலிகள் இங்கும் கேட்கின்றன. பி.பி.சியில் இருந்து பிரிந்து ஐ.பி.சி வந்தது. இப்போது அதிலிருந்து பிரிந்து ரி.பி.சி. என்னும் தனியார் வானொலி வந்துள்ளது. இதற்கு ஈ.என்.டி.எல்.எவ். இயக்கத்தில் முக்கியஸ்தராக இருந்த ராம்ராஜ்தான் நிர்வாக இயக்குநர். எப்படியோ தேமதுரத் தமிழோசை வானலையை நிரப்பட்டும். ஆனால் நம் நாட்டில் சில தனியார் வானொலிகளில் தேமதுர ஓசைக்குப் பதிலாக தேயும் தமிழ் ஓசைதான் கேட்குது!

***பிரிட்டிஷ் இராஜதந்திரி*** கொழும்பு வந்தபோது தமிழ்க்கட்சி பிரதிநிதிகளைச் சந்தித்தது தெரியும்தானே? சந்திப்பில் கிண்ணமும், அன்னமும் பரிமாறிக்கொண்டுதான் அளவளாவல் நடந்ததாம். அதனை குமாரர் மட்டும்தான் ஆட்சேபித்தாராம். "இப்படி கவனம் திசைதப்பிக் கொண்டிருக்கும்போது நாம் சிரத்தையாகக் கூறுவது செவியில் ஏறுமோ?" என்று சற்றுக் கோபமாகவே கேட்டுவிட்டாராம்.

***யாழ் பல்கலைக்கழகம் வெள்ளிவிழாக்*** கொண்டாடியுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் யாது எனில், இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களில் யுத்த அனர்த்தம் தவிர்ந்த வேறெந்தக் காரணங்களாலும் இடை நிறுத்தப்படாத ஒரே ஒரு பல்கலைக்கழகம் யாழ் பல்கலைக்கழகம்தான். ஏனையவை வேலை நிறுத்தங்கள், அரசியல் தலையீடுகள் என்று அடிக்கடி இடை நிறுத்தப்படுவதுண்டு. ஆகவே அர்த்தமுள்ள கொண்டாட்டம்தானே!

***இவ்வாரப் பொன்மொழி:***

> "குருடன்
> முடவனைத் தூக்கிக்கொண்டால்
> இருவரும்
> முன்னே போகிறார்கள்!"

www.padippakam.com

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

சர்வதேச பத்திரிகையாளர் குழு ஒன்று யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள நிலமைகளை நேரடியாகக் கண்டறிந்தது.

அக் குழுவில் சென்ற ரைம்ஸ் ஒ.்.ப் இந்தியா' பத்திரிகையின் செய்தியாளர் அஷ்வனி தல்வார் 1992 ஏப்ரல் 06ம் திகதி வெளியான அப் பத்திரிகையில் தனது அனுபவங்களை விபரித்திருந்தார்.

கட்டுரைக்கு இடப்பட்டிருந்த தலைப்பு, 'யாழ்ப்பாணத்தில் நடப்பது புலிகளின் ஆட்சி தான்'.

தற்போது (1999) யாழ் குடாநாடு படையினரின் ஆட்சியின்கீழ் இருக்கிறது. புலிகளது ஆட்சியின்கீழ் இருந்தபோது யாழ் குடாநாட்டு நிலை எப்படியிருந்தது, புலிகளது நிர்வாகம் எப்படி இருந்தது என்பதை அறிந்து கொள்ள இத் தகவல்கள் ஓரளவு உதவும்.

அஷ்வனி தல்வார் தனது அனுபவத்தை பின்வருமாறுதான் விபரிக்கிறார்:

"யாழ்ப்பாண நகரத்துக்குள் செல்லும் போது 'தமிழ் ஈழ ஆய்வு மையம்' என்ற அலுவலகத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும்.

அந்த அலுவலகத்தில் கம்பிரமான நீலநிறச் சீருடையில் தமிழீழ காவல் துறை என்ற பெயர் பொறிக்கப்பட்ட பாட்ஜுகள் அணிந்து காவல் துறையினர் நிற்கிறார்கள்.

புலிகளின் ஆட்சி தொடங்கும் பகுதி நொச்சிமோட்டை என்பதாகும். பொது மக்களை வரவேற்கும் அறிவிப்புப் பலகையோடு, மக்களுக்குப் போதிய வசதிகளில்லாத அசௌகரியத்துக்கு மன்னிப்புக் கேட்டும், ஒரு இலட்சியத்துக்காகப் போராடும்போது இத்தகைய விலைகளைக் கொடுக்க வேண்டி உள்ளதாகவும் அறிவிப்புப் பலகைகளில் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் பற்றாக் குறையாக உள்ள பொருட்களை வெளியே வாங்கிவந்து விற்பனை செய்வதற்கு தினமும் நூற்றுக் கணக்கான வியாபாரிகள் புலிகளின் ஆட்சிப் பகுதிக்குள் நுளைகிறார்கள்.

ஒவ்வொருவரும் நுழைவாயிலில் ஸ்ரீலங்கா பணம் ருபா 100 புலிகளிடம் செலுத்த வேண்டும். நிரந்தரமாக யுத்தத்துக்கு அஞ்சி வெளியேறுபவர்கள் பத்தாயிரம் ருபா புலிகளுக்கு நிதியாகக் கொடுக்க வேண்டும்.

புலிகளின் ஆட்சி நடக்கும் பகுதிகளில் அரசாங்க இயந்திரத்தின் பெரும் பகுதி செயல்படுகிறது. ஆனால் புலிகளது உத்தரவுப்படி அவர்கள் செயற்படுகிறார்கள்.

## "கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரை ஒரு இளம் பெண் நள்ளிரவில் நடந்து போகலாம்"

## புலிகள் ஆட்சி

பொருளாதாரத் தடை அமுல்படுத்தப்படுகிறது. எனினும் சிறீலங்கா அரசு இடைக்கிடையே கப்பல்கள் மற்றும் லொறிகள் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அனுப்புகிறது.

அரசாங்க செயலகம், அஞ்சலகம், மருத்துவ மனைகள் ஆகியவை கடுமையான பிரச்சனைகள் இடையே செயற்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மருத்துவமனை ஊழியர்கள் மருந்து பெறுவதற்கு கொழும்பு செல்வதானால் இராணுவ அனுமதி பெற வேண்டும்.

அவ்வாறு வாங்கி வரும்போது இதற்கான ஒப்புதல் படிவங்களில் சிறு தவறுகள் எழுத்துப் பிழைகள் இருந்தால்கூட சோதனைச் சாவடியில் மருந்துகளை இராணுவத்தினர் பறிமுதல் செய்து விடுவார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக விடுதலைப்புலிகள் தமிழ்ப் பகுதிகளை தங்களது ஆட்சியின் கீழ் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கத்தின் கருவூலத்திற்குப் போய்க் கொண்டிருந்த வரிப்பணம் இப்போது புலிகளிடம் போய்க் கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாண தீபகற்பத்துக்குள் படகுச் சேவைகளையும் புலிகளே நடத்துகிறார்கள்.

பொருட்களின் விலைவாசிகள் மிக அதிகமாகப் போய்விடாமல் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டு ஒழுங்கு படுத்தப்படுகின்றன. தவறுகள் நடக்காது கண்காணிக்கப்படுகிறது.

புலிகள் வானொலிச் சேவை நடத்துகிறார்கள். உள்ளூர் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி சுய தேவைப் பொருளாதாரத்தைக் கட்டி எழும்புவதற்கான ஆலோசனைகளைக் கூறுமாறு பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் உற்சாகப் படுத்தப்படுகின்றனர்.

'திறமையான சுயநிர்வாகத்தை நடத்தக் கூடிய சூழ்நிலைகளை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம்" என்கிறார் புலிகளது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

தமிழ் ஈழ காவல்துறையை உருவாக்கியுள்ளதால், அடுத்த கட்டமாக தமிழீழ நீதித்துறையை உருவாக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளதாகப் பாலசிங்கம் கூறுகிறார்.

தமிழ் ஈழக் காவல்துறை உருவாக முன்பாகவே புலிகள சட்டம், ஒழுங்கு அமைப்பை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வந்தனர்.

இப்போது யாழ்ப்பாண மக்களுக்கு திருட்டுப் பயமோ, வேறு பயமோ பெரியளவில் கிடையாது. குற்றங்கள் மிகவும் குறைந்து போய்விட்டன.

புலிகளின் ஆட்சியில் குற்றங்களுக்கு கடுமையான தண்டனைதான்.

உதாரணமாக பாலியல் வல்லுறவுக் குற்றத்துக்கு மரண தண்டனை வழங்கப்படுகிறது. 'ஒரு இளம்பெண் நள்ளிரவில் எந்தப் பயமும் இல்லாமல் இங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு நடந்தே செல்லலாம்' என்கிறார் கிளிநொச்சியில் உள்ள ஒரு அதிகாரி.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு திருட்டு, கொள்ளைப் பயம் இல்லாவிட்டாலும் இராணுவத் தாக்குதல் பயம் இருக்கிறது.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கான ஆனையிறவு பாதையை புலிகள் மூடிவிட்டார்கள்.

வழக்கமாகச் செல்லக்கூடிய பூநகரிப் பாதையை கடந்த அக்டோபர் மாதம் இலங்கை இராணுவம் கைப்பற்றிக் கொண்டது. அப்போதிருந்து இப்பாதைக்கும் தடை வந்துவிட்டது.

எனவே ஒழுங்கமைவு இல்லாத சாலைப் போக்குவரத்தையே பயன்படுத்த வேண்டி இருக்கிறது. மிக நீண்ட தூரப்பாதை இது.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் செல்ல மோட்டார் சைக்கிளில் என்றால் ஒன்றரை மணிநேரம் தேவை.

மோட்டார் சைக்கிளில் செல்வோருக்கு புலிகள் 200 ருபா வசூலிக்கிறார்கள். இவ்வாறு ஆனையிறவு கிழக்குப் பகுதியில் உள்ள படகுத் துறைவரை செல்லலாம்.

அங்கிருந்து படகுகள் மூலம் யாழ் குடாநாட்டுக்குள் நுழையவேண்டும். இதன் பயண நேரம் இரண்டு மணித்தியாலயங்கள். இந்தப் பயணம் ஆபத்தானது.

எந்த நேரத்திலும் இப்பகுதியில் இலங்கை இராணுவத்தின் விமானக்குண்டு வீச்சு நடக்கலாம். நூற்றுக் கணக்கான மக்கள் நாள் தோறும் தமது உயிர்களைப் பணயம் வைத்தே பயணத்தை மேற்கொள்கிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்பிருந்த மிக மோசமான நிலை இப்போது ஓரளவு குறைந்துள்ளது. இப்போதும் கண்மூடித்தனமாக இலங்கை இராணுவம் வீசும் ஷெல், குண்டு வீச்சுக்களுக்கு அப்பாவி மக்கள் பலியாகி வருகிறார்கள்.

ஆனாலும் கடந்த காலத்தின் மிக மோசமான நிலை இப்போது இல்லை. யாழ்ப்பாண மக்கள் நல்ல தரமான வாழ்க்கை வாழ்ந்தவர்கள். இப்போது வாழ்க்கைத் தரம் குறைந்து விட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக மின்சாரம் கிடையாது. தொலைபேசி வசதி கிடையாது.

காரைப் பயன்படுத்துபவர்கள் இப்போது சைக்கிளில் போகிறார்கள். தமிழ்ப் பகுதிகளில் பெற்றோலைப் பயன்படுத்த அரசு தடை விதித்துள்ளது. பயன்படுத்தவிட்டால் புலிகள் தங்கள் வாகனங்களுக்கு பயன்படுத்திக் கொள்வார்கள் என்று அச்சம்.

ஆனாலும் ஒரு லீட்டர் பெற்றோல் ஆயிரம் ருபா முதல் இரண்டாயிரம் ருபாவரை விற்கப்படுகிறது. ரேடியோவுக்கு பயன்படுத்தும் பற்றரி நூறு ருபாய்.

யாழ்ப்பாணத்தில் ஒரு சில பகுதிகளில் மட்டும் மின்சார வெளிச்சம் தெரிகிறது. அதில் ஒன்று தமிழ் நாளிதழான உதயன அலுவலகம்.

டீசல் மண்ணெண்ணை போன்றவற்றைக் கலந்து பயன்படுத்தும் ஜெனரேட்டர்கள் மூலம் அச்சக இயந்திரம் இயக்கப்படுகிறது.

தமிழ்ப் பகுதிகளில் பத்திரிகைகள் வெளிவர அரசாங்கம் தடைசெய்துள்ளது. அதனால் அச்சக இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளன.


நெவில்

## தாக்குதல்

இந்த நிலையில் யாழ் குடாநாடு முழுவதையும் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்திக் கைப் பற்றப்போவதாக கடந்த அக்டோபர் மாதம் முதல் இலங்கை அரசாங்கம் அறிவித்து வருகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள சில தீவுகள் இப்போது இலங்கை இராணுவத்திடம் உள்ளன. அங்கே இராணுவம் முகாம்களை அமைத்திருக்கிறது.

கடந்த சில மாதங்களாக இராணுவம் ரி.55 ரக டாங்கிகளையும், ரி.85 ரக டாங்கிகளையும் மற்றும் நவீன ஆயுதங்களையும் வாங்கிக் குவித்து வருகிறது.

முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகளது முகாம்கள்மீது தாக்குதல்கள் நடத்தி வருகிறது.

யாழ் குடாநாடுமீது தாக்குதலை இராணுவம் ஆரம்பித்தால் மக்களுக்கு கடுமையான உயிர்ச்சேதம் இருக்கும் என்று அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

யாழ் குடாநாட்டில் இப்போது பத்து இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். புலிகளும் மிக உறுதியாகவே உள்ளனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றக்கூடிய எண்ணிக்கையான ஆட்பலம் இப்போது இராணுவத்திடம் இல்லை" இவ்வாறு தான் கண்ட நிலவரங்களை விபரித்திருந்தார்.

## மேதின மோதல்

1992 மேதின நாளில் சுவிஸ் சூரிச் நகரில் புலிகளால் மேதின ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

அப்போது சுவிஸ் கிளைக்கு புலிகளது பொறுப்பாளர் ந.முரளிதரன். மேதின ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக பெருந்தொகையான தமிழ் மக்கள் திரண்டிருந்தனர். அப்போது இன்னொரு குழுவினரும் பதாதைகளோடு அங்கு சென்றனர். மொத்தம் 12 பேர் அக் குழுவில் இருந்தனர்.

தாம் புளொட் இயக்கப் பிரதிநிதிகள் என்றும், தாமும் ஊர்வலத்தில் பங்குகொள்ளப் போவதாகவும் அவர்கள் கூறினர்.

அப்போது ஏற்பட்ட தர்க்கத்தில் புளொட் உறுப்பினர்களை தாக்குவதற்கு கூட்டத்தினர் முற்பட்டனர்.

ஊர்வலத்தை குழப்பவே அவர்கள் அங்கு வந்துள்ளதாக நினைத்த கூட்டத்தினர் அவர்களை தாக்கியதால், வந்த பன்னிரண்டு பேரும் அவ்விடத்தை விட்டுச் தப்பிச் சென்றனர்.

இச் சம்பவத்தின் பின்னர் புலிகளது சுவிஸ் கிளை பொறுப்பாளர் முரளிதரன் அறிக்கை ஒன்றினை விடுத்திருந்தார்.

"ஊர்வலம் ஆரம்பமாகி சிறிது நேரத்தில் எம்மீது கண்ணீர்புகை குண்டுகள் புளொட்டினரால் வீசப்பட்டன.

இதனால் ஊர்வலத்தின் முன்னணியில் நின்ற மக்கள் தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்கியிருந்தனர்.

ஆனாலும் நூற்றுக் கணக்கான மக்கள் கொண்ட ஊர்வலம் தொடர்ந்து முன்னேறும்போது, 12 பேர் கொண்ட குழு இயல்பாகவே ஏற்படும் பீதி காரணமாகவே ஓடித் தப்பித்துக்கொண்டது."

என்று விளக்கம் அளித்திருந்தார்.

யாழ்குடாநாட்டிலும் மாபெரும் மேதினம் ஒன்றை 1992இல் புலிகள் அனுஷ்டித்தனர்.

யாழ்பாணம் பல்கலைக்கழகத்தில் மேதினக் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக ஐந்து மைல் தூரத்தில் உள்ள மருதனா மடச் சந்தியில் இருந்து பிரமாண்டமான ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

வடபகுதியின் மூலவளங்கள், போராட்ட வரலாறு முதலியவற்றைச் சிறப்பாகச் சித்தரிக்கும் ஊர்திகளும் ஊர்வலத்தில் இடம் பெற்று பலரையும் கவர்ந்தன.

குண்டு வீச்சு விமானங்கள் வானில் திடீர் என்று தோன்றலாம். ஊர்வலம்மீது குண்டுகளைப் பொழியலாம் என்னும் சூழ்நிலையிலும் பெருவாரியான மக்கள் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளது பிரதான தலைவர்கள் எவரும் அன்று கூட்டத்துக்கு வரவில்லை. மாத்தையா கலந்து கொள்வார் என்று கூறப்பட்டபோதும், அவர் கலந்து கொள்ளவில்லை.

வே.பாலகுமார்தான் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

## நெவில் கூறியது

சமீபத்தில் மரணமான இராஜதந்திரி நெவில் கனகரட்னா. இவர் 1992இல் இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவராக கடமையாற்றினார்.

சென்னையில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் அவர் பின்வருமாறு கூறியிருந்தார்;

'எந்த சமரசப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டாலும், விடுதலைப் புலிகள் பங்கெடுக்காமல் அது முடியாது!"

"ராஜீவ் காந்தி கொலை வழக்கில் புலிகள்மீது இந்தியா குற்றம் சாட்டியுள்ளதே. அதனால் புலிகளுடன் பேச்சு நடத்துவது பாதிக்கப்படுமா?" என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு நெவில், "தடை செய்யப்பட்ட உல்பா இயக்கத்துடன் இந்தியா பேச்சு நடத்தவில்லையா? என்று திருப்பிக் கேட்டார்.

புலிகளைத் தவிர ஏனைய குழுக்களுக்கு தமிழ் மக்களுக்கு போதிய ஆதரவில்லை. எனவே புலிகளோடு பேசாது எத் தீர்வையும் எட்டவும் முடியாது.

பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பதும் முடியாத காரியம். அவர் எங்கிருக்கிறார் என்பதே எமக்குத் தெரியாது. இந்தியப் படையால்கூட அவரை பிடிக்க முடியவில்லையே' என்றும் நெவில் கூறியிருந்தார்.

(தொடர்ந்து வரும்)



---

# மறுபிறவி

**ரா**ஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன்முறையீட்டில் விடுதலையானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள், விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.

**91ம்** ஆண்டு மே 21

காலையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அலுவலகமாக அப்போது இருந்த சத்திய மூர்த்தி பவனுக்கு சென்றேன். தேர்தல் வேலைகள் வேகமாக நடந்து கொண்டிருந்தன. பிரசாரத்திற்காக வாழ வைக்கும் கை என்ற கேசட்டை நான் தயாரித்துக் கொடுத்திருந்தேன். அதற்கான பாக்கி தொகையை கேட்பதற்காகத்தான் சத்தியமூர்த்தி பவனுக்கு சென்றிருந்தேன்.

"தலைவர் ராஜீவ் காந்தி இன்று பிரசாரத்திற்காக சென்னை வருகிறார். அவரது சுற்றுப் பயணம் முடிந்தபின் 24ந் திகதிக்கு மேல் பணம் வாங்கிக் கொள்ளலாம்" என்று காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் தெரிவித்தனர். ராஜீவ் வருகிறார் என்ற தகவலை அப்போது தான் நான் தெரிந்து கொண்டேன்.

அங்கிருந்து எனது திருவல்லிக்கேணி அலுவலகத்திற்கு வந்தேன். பராமரிப்பு வேலைகள் நடந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்து விட்டு இரவு வீட்டிற்கு திரும்பினேன்.

நல்ல உறக்கம்

திடீரென ்.போன் ஒலித்தது. சுடிகாரத்தைப் பார்த்தேன் இரவு 12.45 மணி 'இந்த நேரத்தில் யாராக இருக்கும்' என்று யோசித்தபடியே ரிசீவரை எடுத்தேன்.

"நான்தான் ரவிசங்கர் பேசுகிறேன். ஸ்ரீபெரும்புதூரில் வெடி குண்டு விபத்தில் ராஜீவ்காந்தி இறந்துவிட்டார்." போட்டோகிராபர் ரவிசங்கர் சொன்ன தகவலை அந்த நள்ளிரவில் கேட்டவுடன் அதிர்ச்சியாக இருந்தது. எதுவும் பேசுகிற நிலையில் இல்லை. "அப்படியா?" என்று மட்டும் கேட்டுவிட்டு ரிசீவரை வைத்தேன்.

ரவிசங்கர் சொன்ன தகவலை உறுதிப் படுத்திக் கொள்வதற்காக தினமலர் நாளிதழுக்கு ்.போன் செய்தேன். நான் சுபா சுந்தரம் பேசுறேன்... ராஜீவ் காந்தி இறந்துவிட்டதாக தகவல் வந்தது.

"ஆமாம்..." என்றது எதிர்முனை.

செய்தியை உறுதிப்படுத்திக் கொண்ட பின் ஒரு பத்திரிகை புகைப்படக்காரனாக எனது செயல்பாடுகள் தொடங்கின. அப்போது நான் ஏஜன்ஸி ்.பிரான்ஸ் பிரஸ் என்ற உலகப் புகைப்பட நிறுவனத்துக்காக (AFP) பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

ராஜீவ் கொல்லப்பட்ட படத்தை அந்த நிறுவனத்துக்கு அனுப்ப வேண்டியிருந்தது. ஸ்ரீபெரும்புதூர் நிகழ்ச்சிக்கு என்னிடம் பணியாற்றும் புகைப்படக்காரர்கள் யாரையும் நான் அனுப்பவில்லை. அதனால் எங்கிருந்து படங்களைப் பெறுவது என்ற யோசனையுடன் ஒவ்வொரு பத்திரிகை அலுவலகத்திற்கும் ்.போன் செய்து கேட்டேன்.

தினமலர் அலுவலகத்தை மீண்டும் தொடர்பு கொண்டேன். "ராமமூர்த்திதான் ஸ்ரீபெரும்புதூருக்குச் சென்றிருக்கிறார். அவர் இன்னும் வரவில்லை." என்ற பதில் கிடைத்தது.

போட்டோகிராபர் ராமமூர்த்தியின் வீட்டிற்குப் ்.போன் செய்தேன். அவரது மனைவிதான் பதிலளித்தார். "பூந்தமல்லி பொலிஸ் ஸ்டேஷனில் இருக்கிறதா ்.போன் பண்ணி சொன்னாங்க" என்றார். நான் பூந்தமல்லி பொலிஸ் ஸ்டேஷன் நம்பரைத் தேடிப் பிடித்து ்.போன் செய்தேன். ராமமூர்த்தி லைனில் வந்தார். "நான் காலையில்தான் சென்னைக்கு வரமுடியும். எங்க ஆபீசுக்கு சில படங்களை அனுப்பியிருக்கிறேன். அதை வேண்டுமானால் கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார். நான் ரிசீவரை வைக்கப் போனேன். அப்போது அவரது குரல் பதற்றத்துடன் ஒலித்தது.

"உங்களிடம் வேலை பார்த்த ஒரு பையன் வெடிகுண்டு விபத்தில் அடிபட்டு பலத்த காயத்துடன் அசைவற்றுக் கிடக்கிறான்." என்றார்.

"யார்?" என்றேன் பதறியபடி.

"ஹரிபாபு..."

"அந்த பையன்தானா...?"

"ஆமாம்.... நான் பார்த்தேன்." என்றார் ராமமூர்த்தி.

ஹரிபாபு என்னிடம் வேலை பார்த்த பையன்தான். ஓராண்டுக்கு முன் வேலையிலிருந்து நின்றுவிட்டான். தனிப்பட்ட முறையில் சில படங்கள் எடுத்து பத்திரிகைகளுக்கு கொடுத்து வருகிறான் என்பதை அறிந்திருந்தேன். ராமமூர்த்தியிடம் தகவல் தெரிந்து கொண்ட பிறகு புகைப்பட நிறுவனத்துக்கு (AFP) படங்களை அனுப்ப வேண்டிய பணியில் தீவிரமானேன்.




மே 21- ந் தேதியன்று காலையில் நடிகை ஜெயசித்ரா எனது அலுவலகத்தை தொடர்பு கொண்டு, ராஜீவ் வரும்போது அவருடன் தான் படமெடுத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருந்தார். ராமச்சந்திரன் என்ற போட்டோகிராபரிடம் அந்த வேலையை ஒப்படைத்திருந்தேன்.

அவர் எடுத்து வந்திருந்த ரோலுடன் ராயப்பேட்டை கௌடியாமட ரோடிலுள்ள எனது ஸ்டுடியோவுக்கு மகன் அருணுடன் சென்று டெவலப் செய்தபோது புது 'ஷூ' வுடன் ராஜீவ் போஸ் தந்திருந்தார். அந்த படத்துடன் 22ந் தேதி அதிகாலையில் வெளிவந்த தினமணியில் பிரசுரிக்கப்பட்டிருந்த ராஜீவ் இறந்து கிடக்கும் படத்தையும் எனக்குத் தெரிந்த தொழில் நுட்பத்தின் அடிப்படையில் ஒரே படமாக இணைத்தேன். பிறகு அதை புகைப்பட நிறுவனத்திற்கு (AFP) ்.பேக்ஸ் மூலம் அனுப்பினேன்.

ராஜீவ் கொலை செய்யப்பட்டதால் கொந்தளித்த கட்சிக்காரர்கள் நகரம் முழுவதும் உள்ள எதிர்க்கட்சியினரின் போஸ்டர்களையும் பேனர்களையும் கிழித்து எறிவதாகவும் தீயிடுவதாகவும் எனக்கு தகவல் வந்ததால் அதனை படமெடுக்க ஆட்களை அனுப்பி வைத்துவிட்டு, ஹரிபாபுவின் பழைய படம் ஏதாவது இருக்கிறதா எனத் தேடத் தொடங்கினேன். அந்த படத்தையும் புகைப்பட (AFP) நிறுவனத்துக்கு அனுப்பவேண்டியிருந்தது.

ஒவ்வொரு ரோலிலும் இரண்டு, மூன்று பிரேம்கள் மீதமாவது வழக்கம். எனது ஸ்டுடியோவில் கற்றுக் கொண்டவர்கள் அந்த பிரேம்களில் ஒருவரையொருவர் படம்

## சுபா சுந்தரம்

பிடித்துக்கொள்வார்கள். அப்படி எடுக்கப்பட்ட ஹரிபாபுவின் படம் ஏதேனும் இருக்கிறதா என தேடினேன். சில படங்கள் கிடைத்தன. அவற்றையும் (AFP) க்கு அனுப்பினேன்.

ராஜீவின் உடல், சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டு பிறகு விமானம் மூலம் டெல்லிக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்ற விவரத்தை அறிந்துகொண்டேன். ஹரிபாபு இறந்த செய்தி, அவரது வீட்டுக்குத் தெரியுமா என்பது பற்றி விசாரித்தேன். இன்னும் அவர்களுக்குச் செய்தி எட்டவில்லை என்று தெரிந்ததும், அவரது வீட்டுக்கு தகவல் தெரிவிக்கச் சொல்லிவிட்டு, எனது வேலைகளை கவனிக்க ஆரம்பித்தேன்.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# சமவாய்ப்புச் சட்டமும் சாணக்கியத் திட்டமும்

அலசுவது - இராஜதந்திரி

வரப்போகும் 2000 ஆண்டை தேர்தல் ஆண்டாக பொது ஜன முன்னணி ஆட்சியாளர்கள் எதிர்கொள்ளப் போகின்றனர்.

தேர்தலுக்குரிய பணிகளை இப்போதிருந்தே முடுக்கிவிடுமாறு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூர் முக்கியஸ்தர்கள் ஆகியோரிடம் பொதுஜன முன்னணி மேலிடம் இரகசிய உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 07.09.99 நாடாளுமன்றம் கூடியபோது, ஆளும் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் எதிர்வரும் தேர்தல்கள் பற்றியே பரபரப்பாகப் பேசப்பட்டுள்ளது.

ஜனவரி மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ முதலில் ஜனாதிபதித் தேர்தல்தான் நடக்கவுள்ளது என்பது உறுதியாகியுள்ளது.

பொதுஜன முன்னணிக்குள் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் பெரும் விரிசலாவதற்கு முன்பு தனது பலத்தை மறுபடி நிரூபித்து, தனது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதே ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரின் உடனடி நோக்கமாயுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி இரண்டும் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையைக் கண்டித்து சமீபத்தில் அறிக்கை விடுத்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் சென்ற முறைபோல இம்முறை சுலபமாக வெற்றி இலக்கை எட்டிவிட முடியாது என்பது அம்மையாருக்கு நன்கு விளங்கியுள்ளது.

இதனால் கம்யுனிஸ்ட், சமசமாஜிகள் ஆகியோரது ஆதரவையும் உதறித்தள்ளிவிட அம்மையார் முன்வரமாட்டார்.

தமிழ் பேசும் மக்களது வாக்குகள் இம்முறை தமக்கு முன்புபோல சாதகமாக இருக்காது என்பதும் ஆட்சியாளருக்கு தெரிந்த விஷயம்தான்.

தமிழ்க் கட்சிகள் எதுவும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பகிரங்கமாக அம்மையாரை ஆதரித்து செயற்படப்போவதில்லை என்பதும் தெளிவாகியுள்ளது.

தமிழ் பேசும் மக்களது வாக்குகள் தமக்கு விழாது போனாலும், ஐக்கிய தேசியக் கட்சிக்காயினும் செல்லாது தடுக்க வரதராஜப் பெருமாளை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தும் யோசனை இருந்தது.

இலங்கை வந்த பின்னர் தமிழ் மக்களது நாடித்துடிப்பை அறிந்துகொண்ட வரதர் அவ்வாறான யோசனைக்கு உடன்படாது பின்வாங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது.

எனவே சிங்கள வாக்கு வங்கிகளையும், அமைச்சர்கள் அஷ்ரப், பௌசி ஆகியோரின் பின்னாலுள்ள முஸ்லிம் வாக்கு வங்கிகளையுமே இம்முறை அம்மையார் மலையாக நம்பியாக வேண்டும்.

சிங்கள மக்களிடையே ஆதரவு அலையை அமோகமாக கிளர்ந்தெழ வைக்க ஒரே ஒரு வழி வன்னிச்சமரில் ஏதாவது ஒரு இலக்கை எட்டிவிட்டதாக காண்பிப்பதேயாகும்.

யாழ் குடாநாட்டுக்கான தரைப்பாதையை மன்னார் பூநகரி ஊடாகவேனும் திறந்து விட்டால், "ஸ்ரீலங்கா நாட்டை ஒன்றாக்கிவிட்டோம். பிரிந்து கிடந்த யாப்பாபட்டுனவை ஸ்ரீலங்காவோடு இணைத்து விட்டோம்" என்று சிங்கள வாக்காளர்களிடம் முஸ்டி உயர்த்தி காண்பிக்கக் கூடியதாக இருக்கும்.

ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்த 50வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும்போதும் இவ்வாறான கனவு ஆட்சியாளரிடம் இருந்தது.

வவுனியா-யாழ் சாலையைக் கைப்பற்றி, யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் வாகன பவனி கண்டியில் நடைபெறும் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும் என்பதே அந்தக் கனவாகும்.

ஆனால் கிளிநொச்சி படைத்தளம்மீதான புலிகளது தாக்குதலும், ஜயசிக்குறுய் படையினருக்கு எதிரான புலிகளது முறியடிப்புச் சமரும் அந்தக் கனவு கைப்படாமல் செய்திருந்தது.

அக் கனவு அப்போதே கைப்பட்டிருந்தால் அந்தச் சூட்டோடு சூடாகவே ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்பட்டு, பொதுஜன முன்னணி மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இப்போது மறுபடி அக் கனவு மேலோங்கியுள்ளது. யாழ் குடாநாட்டுக்கான தரைப்பாதையை ஏதோ ஒரு வழியில் திறந்து, அப்பாதையூடாக வாகன பவனி சென்று வரவேண்டும். அதனை தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் காண்பித்து சிங்கள மக்களது இனப் பெருமிதத்தை தட்டி எழுப்பவேண்டும். அதனை வைத்து மாபெரும் வாக்கு வங்கியை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே ஆட்சியாளரது தற்போதைய தின்சரிக் கனவாகும்.

இத்றகாகவே தேர்தலுக்கு முன்பாக அரசியற் களத்திலும், போர்க்களத்திலும் அதிரடியான திட்டங்கள் சிலவற்றை ஆட்சியாளர்கள் தீட்டியுள்ளனர்.

பொதியை முன்வைத்த சூட்டோடுதான் யாழ் குடாநாடு மீதான இராணுவத் தாக்குதல் ஆரம்பமானது. இராணுவத் தீர்விற்கான சந்திரிக்கா அரசாங்கத்தின் முதல் நகர்வாக அது விளங்கியிருந்தது. அரசியல் தீர்வொன்றுக்கு தயார் என்று வெளியுலகுக்கு காண்பித்தபடி, பாரிய இராணுவத் தீர்வு முயற்சிக்கு அரசாங்கம் பச்சைக்கொடி காண்பித்தது.

ஆனால் பொதிக்கு வெளியுலக ஆதரவு இப்போது சரிந்துவிட்டது. இழுத்தடிப்பும், இராணுவ நடவடிக்கைகளும் அகில உலகமும் அரசாங்கத்தை சந்தேகக் கண்கொண்டு நோக்க வைத்துள்ளது.

இந்நிலையில் அடுத்த கட்ட பாரிய படை நகர்வுக்கு முன்பாக இன்னொரு அரசியல் நாடகத்துக்கு ஆட்சியாளர்கள் முன்வந்துள்ளனர்.

சமவாய்ப்புச் சட்டம் என்பதுதான் அந்த அரசியல் நாடகத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயராகும்.

தமிழ் பேசும் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் சகல துறைகளிலும் சமவாய்ப்புக் கொடுக்கப்பட உள்ளதாக வெளியுலகுக்கு பெரியதொரு 'படம்' காண்பிக்கவே இந்தச் சட்டம் தயாராகியுள்ளது.

அரசியல் தீர்வு இழுத்தடிக்கப்பட்டு, பொதி பற்றி பேச்சுக்கள் புளித்துப்போன நிலையில், வெளியுலகுக்கு காண்பிக்க புதிய துருப்புச் சீட்டுத்தான் இந்த சமவாய்ப்புச் சட்டமாகும்.

இந்த சமவாய்ப்புச் சட்டத்தை அக்டோபர் 07ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக அறிவித்திருந்தனர். எனினும் குறிப்பிட்ட தினத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை என்று ஆளும் தரப்பால் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இச்சட்டத்தை எதிர்த்து வீரவிதான தலைமையிலான பேரினவாத அமைப்புக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளன.

இவற்றை நோக்கும்போது சில சந்தேகங்கள் எழத் தொடங்கியுள்ளன. கடந்த ஐம்பத்தொரு ஆண்டுகால அனுபவத்தின் அடிப்படையிலேயே அந்தச் சந்தேகங்கள் தோன்றுகின்றன.

தமிழ் பேசும் தரப்புக்கு அரசாங்கம் ஒரு துரும்பைத் தூக்கிக் கொடுத்தால்கூட, அதனைக் கடுமையாக கண்டித்து பேரினவாத சக்திகள் வீதியில் இறங்கிவிடுவதே



வழககமாகும்.

அவ்வாறு அவர்கள் இறங்கும்போது, அரசாங்கமும் தமிழ்பேசும் தரப்பிடம் அவர்களைக் காண்பித்து, "பார்த்தீர்களா, இதற்கே எத்தனை எதிர்ப்புக்கள் ஏற்படுகின்றன. ஆகவே நாம் தருவதை உடனே வாங்கிக்கொள்வதே புத்திசாலித்தனம்" என்று பூச்சாண்டி காட்டி வந்துள்ளன.

இத்தகைய பூச்சாண்டிகளுக்கு வசதியான பேரினவாத எதிர்ப்பு என்பது ஆளும் தரப்பின் தூண்டுதலுடனும் நடைபெறுவதுண்டு.

பொதியை முன்வைப்பதாக ஆரவாரமாக அறிவித்துவிட்டு, அப்பொதியைத் தூக்கி பேரினவாத சக்திகளின் கையிலேயே ஆட்சியாளர் கொடுத்திருந்தனர்.

'பொதி தொடர்பான நாடு தழுவிய விவாதம்' என்ற பெயரிலேயே பொதி பேரினவாத சக்திகளது கைகளுக்கு தரப்பட்டது.

ஏற்கனவே அரைகுறையாக இருந்த பொதி பேரினவாத சக்திகளிடம் சென்றபின்னர் குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாக முடிந்து போனது. பொதியில் எதுவுமே மிச்சமில்லை. பேரினவாதம் விழுங்கி ஏப்பமிட்டுள்ளது.

இதன் காரணமாகவே இன்னொரு அப்பம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனையும் தூக்கி பேரினவாத சக்திகளிடமே ஆட்சியாளர்கள் கொடுத்துள்ளனரா என்ற கேள்வியே எழுந்துள்ளது.

ஏனெனில் அக்டோபர் 07ம் திகதி சமர்ப்பிக்க வேண்டிய சமவாய்ப்புச் சட்டத்தை பின்போட்ட சூட்டோடு சூடாக, இச் சட்டத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக வீரவிதான இயக்கம் அறிவித்துள்ள செய்தியும் வந்துள்ளது.

சம வாய்ப்புச் சட்டம் பற்றி யாரும் முக்கியத்துவம் கொடுத்துப் பேசாத காரணத்தினால், அதனை பிரபலப்படுத்தவும் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் தூண்டிவிடப்படலாம்.

இவ்வாறு பெரும் எதிர்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக காண்பிக்கப்பட்டால், தமிழ் பேசும் மக்களுக்கு சாதகமான சட்டத்தைத்தான் ஆட்சியாளர் கொண்டு வந்துள்ளனர். அதனால்தான் தென்னிலங்கையில் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது என்று வெளியுலகமும் நம்பிவிடும்.

பேரினவாத எதிர்ப்பு மத்தியில் சட்டத்தை சமர்ப்பித்தால், இனவாதத்துக்கு பணியாத அரசாங்கம் என்று பறைசாற்றியபடி இராணுவத் தீர்வை முழுவேகத்தில் முன்னெடுக்கலாம் என்று ஆட்சியாளர் கருதுகின்றனரா? எனச் சந்தேகிப்பதும் இயல்பானதேயாகும்.

வீரவிதானவுக்கு ஆளும் தரப்போடு உள்ள உறவு இப்போது பகிரங்கமாகி வருகிறது. நாடாளுமன்றத்தில் இ.தொ.கா. உறுப்பினர் சென்னன் உரையாற்றும்போது, 'வீரவிதானவுக்கு ஆளும் கட்சி முக்கியஸ்தர்கள் பலர் ஆதரவு கொடுப்பதாக' குற்றம் சாட்டியிருந்தார். அதற்கு ஆளும் தரப்பில் இருந்து எவ்வித பதிலும் தரப்பட்டிருக்கவில்லை.



இந்நிலையில் அரசாங்கத்துக்கு சங்கடம் ஏற்படுத்த வீரவிதான உளப்பூர்வமாக முன்வந்திருக்குமா என்பது கேள்விக்குறியேயாகும்.

எனவேதான் சமவாய்ப்புச் சட்டம் பின்போடப்பட்டமைக்கும், வீரவிதான காட்டிய எதிர்ப்புக்களுக்கும் இடையே முடிச்சுக்கள் இருக்கக்கூடும் என்னும் சந்தேகங்கள் தோன்றியுள்ளன.

அரச தரப்பில் இருந்து அமைச்சர் மங்கள போன்ற சிலர் வீரவிதானவை எதிர்த்துக் கருத்துக் கூறியுள்ளனர். எனினும் பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, பொதுஜன முன்னணி பொதுச் செயலாளர் அமைச்சர் ஜெயரத்ன, அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, எஸ்.பி. திசநாயக்க போன்ற பலர் வீரவிதானவை கண்டித்து கருத்து எதனையும் இதுவரை தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதுமட்டுமல்ல 'நாட்டின் தற்போதைய நிலைதொடருமானால் சிங்கள மக்களை மியூசியத்தில் தான் போய் தேடவேண்டியிருக்கும்' என்று அமைச்சர் ஜெயரத்ன கூட்டமொன்றில் கூறியிருக்கிறார்.

இதேபோன்று ஐ.தே.கட்சியின் முக்கியஸ்தர்கள் எவரும் வீரவிதானவைக் கண்டிக்க இதுவரை முன்வரவில்லை.

பேரினவாத பூச்சாண்டிகளைக் காண்பித்து தமது அரைகுறை தீர்வுகளை கனமாக உலகுக்கு காண்பிப்பதும், தமிழ் பேசும் தரப்பிடம் திணிப்பதுவுமே தற்போதைய ஆட்சியாளரது அரசியல் சாணக்கியமாகும் என்னும் கருத்தும் வலுவடைந்து வருகிறது.

பொதி இழுத்தடிப்பு, யாழில் காணாமல் போனோர் விவகாரம், செம்மணிப் புதைகுழிகள், புதுக்குடியிருப்பு விமானத் தாக்குதல் போன்றவற்றின் காரணமாக உலகின் அதிருப்திகள் தற்போதைய ஆட்சியாளர்மீதும் திரும்பியுள்ளது.



'ஐ.நா.சபை நுளம்புக்கு மருந்தடிக்க மட்டும்தான் இலாயக்கு' என்ற தோரணையில் அமைச்சர் கதிர்காமர் நிதானமிழந்து பேசியதுகூட உலக அரங்கில் தமக்கு பாதகமான நிலை ஏற்பட்டு வருவதால் தோன்றிய எரிச்சல்தான். ஏனெனில் ஐந்தாம் வகுப்பு மாணவனுக்குக்கூட ஐ.நா.சபையின் பணிகள் என்னவென்று பட்டியல் போடத் தெரிந்துள்ளது.

இந்நிலையில் உலக அரங்கில் சரிந்து வரும் செல்வாக்கை நிமிர்த்தி முண்டுகொடுக்கத்தான் சமவாய்ப்புச் சட்டம் கொண்டுவர தீர்மானித்தனர்.

இதன்பின்னர் புலிகளுக்கு எதிரான இராணுவத்தீர்வுக்கு பிரமாண்டமான படைக்கலங்களை வாங்கிக் குவித்து உக்கிரமான சமர் ஒன்றை நடத்துவதுதான் ஆட்சியாளரது அடுத்த நகர்வாக அமையப்போகிறது.

'பட்ஜெட்டில்' பாதுகாப்பு செலவினத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பெருந்தொகையான நிதி இதனை தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது.

மிக நவீன படைக்கலங்களைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திர அனுமதியும் கோரப்பட்டுள்ளது.

தற்போது வன்னியில் பருவ மழை பெய்து வருவதால், மழைக்காலம் முடிந்த கையோடு மாபெரும் படையெடுப்புக்கு அரசாங்கம் பச்சைக்கொடி காண்பிக்கும் என்பது தெளிவாகியுள்ளது.

எனினும் இந்தியப் பொதுத் தேர்தல் முடிவுகள் இலங்கை ஆட்சியாளருக்கு அதிர்ச்சி தரத்தக்கனவேயாகும்.

விடுதலைப் புலிகளுக்கு மிக வேண்டப்பட்டவர்களான ஜோர்ஜ் பெர்னாண்டஸ், வை.கோ. போன்றோர் மறுபடி வெற்றிவாகை சூடியிருப்பதும் ஆட்சியாளருக்கு நிச்சயமாக ஏமாற்றத்தை அளித்திருக்கும் என்பது திண்ணம்.

உக்கிரமான இராணுவ நடவடிக்கை ஒன்றை இங்கு முடுக்கிவிட்டு, அதன் பலனாக பொதுமக்களது உயிர்களுக்கு பெரும் ஊறு நேர்ந்தால் அதன் எதிரொலி இந்திய நாடாளுமன்ற அரங்கிலும் கேட்கும். வை.கோ.வின் குரல் அங்கு எழும் என்பது ஆட்சியாளருக்கு தெரிந்த ஒன்றேயாகும்.

முன்பைவிட பலமான நிலையில்தான் இம்முறை பாரதிய ஜனதா கூட்டணி அரசு பதவி ஏற்றுள்ளது.

கூட்டணிக் கட்சிகளுக்குள் சிறு முரண்பாடுகள் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கும். ஆயினும் ஜெயலலிதா போன்று நிரந்தரத் தலைவலியாக இருக்கக் கூடியவர்கள் இம்முறை கிடையாது.

சிறுபான்மை அரசாக இருந்த நரசிம்மராவ் ஐந்து ஆண்டுகாலம் ஆட்சியை நடத்தியிருந்தார்.

அவரது அரசை கலைத்து தேர்தலுக்கு போனால் மக்களிடையே வரவேற்பு இருக்காது என்பதாலும், தாம் மறுபடி போட்டியிட தயாராகவுமே ஐந்தாண்டுகள் ஆள்வதற்கு எதிர்க்கட்சிகள் அவரை அனுமதித்திருந்தன.

அதேநிலைதான் இன்றும் மறுபடி ஏற்பட்டுள்ளது. வாஜ்பேய் ஆட்சியை சோனியா அவசரப்பட்டு கவிழ்த்தமையால் சோனியாவுக்கு இருந்த 'பதவி ஆசை அற்றவர்' என்ற தோற்றப்பாடு சுக்கு நூறாகியிருந்தது. வாஜ்பாய் மீது பாரிய அனுதாப அலை எழுந்தது.

அத்தோடு சேர்ந்து கார்க்கில் போரும் வந்ததால் அமோக ஆதரவுடன் பாரதிய ஜனதா மறுபடி ஆட்சிக் கட்டிலில் அமரமுடிந்துள்ளது.

இந்நிலையில் மீண்டும் அவசரப்பட்டு ஆட்சியைக் கலைக்க காங்கிரஸ் முன்வராது. காங்கிரஸ் கட்சி இதுவரை காணாத தோல்வியைச் சந்தித்திருப்பதால் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ளவும் அதற்கு நீண்டகால அவகாசம் தேவையாக இருக்கும்.

எனவே குறைந்தது நான்கு ஆண்டுகளாயினும் பாரதிய ஜனதா அரசு பதவியில் இருப்பது உறுதியாகியுள்ளது.

இதன் காரணமாக அயலகத்தில் உள்ள சூழல் இலங்கை ஆட்சியாளருக்கு ஏற்புடையதாக இருக்கப்போவதில்லை.

இத்தகைய சூழலை விடுதலைப் புலிகள் விவேகத்துடன் கையாள்வார்களேயானால் பல சாதகங்களை மறைமுகமாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவிருக்கும்.

தமிழ்நாட்டில் ஆயுதங்களோடு நடமாடி கைது செய்யப்பட்டு தலையிடி கொடுக்காதுவிட்டால் கலைஞர் கருணாநிதியும் புலிகள் பற்றி இராஜதந்திரமாக கண்டிக்கும் சூழ்நிலைகூட எழவியலாது.

அடுத்த தேர்தல்களை சந்திக்க இலங்கை ஆட்சியாளர் வகுத்துள்ள அரசியல், இராணுவ வியூகங்களுக்கு, இந்திய தேர்தல் முடிவுகள் வேகத்தடையாக அமைந்துள்ளன.

இதற்கு மாறாக சோனியா அம்மையார் பதவிக்கு வந்திருந்தால், சந்திரிக்கா அம்மையாருடன் சுமுகமான நட்புறவும், இராணுவத் தீர்வு முனைப்புக்களுக்கு மறைமுகமான ஆதரவும் கிட்டியிருக்கும்.

இவ்வாறான முடிவைத்தான் இலங்கை ஆட்சியாளர் ஆவலோடு எதிர்பார்த்திருப்பர். எனினும் எதிர்பார்த்ததுக்கு மாறாகவே நிகழ்ந்துள்ளது.

அடுத்த தேர்தலுக்கு முன்னர் ஆட்சியாளர் சந்தித்துள்ள முதலாவது திருப்பம் இந்தியத் தேர்தல் முடிவுகளாகும்.

இதற்கடுத்த திருப்பங்கள் புலிகள் மூலம் உருவாகினால் ஆட்சியாளரின் தேர்தல் வெற்றிமீது பெரும் தாக்கம் ஏற்படலாம்.

அடுத்து வரும் தேர்தல்களுக்கு போர் வெற்றிகளை ஆட்சியாளர் நம்பியிருக்க, அடுத்த தேர்தலுக்கு முன்பாக ஆட்சியாளரின் வியூகங்களில் பெரும் உடைவுகளை ஏற்படுத்த புலிகளும் திட்டங்களை தீட்டி வருகின்றனர்.

ஏட்டிக்குப் போட்டியான இத் திட்டங்களால் களமுனை நிலவரம் மட்டுமல்ல, தேர்தல் கள நிலவரங்களும் மாறவும் கூடும். ■

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

கஞத்துறைச் சிறைச்சாலையில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது தேவைகளையும், குடும்பத்தினருக்கான சில உதவிகளையும் புலிகள் இயக்கத்தினரே செய்துவந்தனர். சமீபகாலமாக சிறையில் உள்ளோருக்கான உதவிகள் புலிகளால் நிறுத்தப்பட்டுள்ளனவாம்.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா சிறைக்கு கைதிகளைப் பார்வையிடச் சென்றபோது தாக்கப்பட்டார் அல்லவா? அச் சம்பவத்தில் பங்கு கொண்டவர்களுக்கே உதவிகள் நிறுத்தப்பட்டதாம்.

மேலிட உத்தரவு இல்லாமல் செயற்பட்டதால்தான் இந்த நடவடிக்கை. சிறையில் வைத்து இவ்வாறாக நடந்துகொள்வது தமது இயக்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் என்பதோடு, உத்தரவு இன்றி எக் காரியத்தையும் செய்யக்கூடாது என்பது தலைவரது கண்டிப்பான நிலைப்பாடாம்.

இனிமேல் சிறைக்கு யார் பார்வையிட வந்தாலும் எத்தகைய தாக்குதலும் நடத்தக்கூடாது என்றும் கண்டிப்பான உத்தரவு அனுப்பப்பட்டுள்ளதாம்.

-★-

அமைச்சர் அஷ்ரப்புக்கும், அமைச்சர் பௌசிக்கும் இடையிலான பனிப்போர் முடிந்து போனதாக வந்த செய்திகளை முட்டை கட்டி ஒரு ஓரமாகப் போட்டுவிடலாம்.

பனிப்போர் முற்றி தீப்போராக எரிந்து கொண்டிருக்கிறது.

அஷ்ரப் கிழக்கையும் தாண்டி தென்னிலங்கை முஸ்லிம் வாக்கு வங்கிகளிலும் ஒரு கண்வைத்திருப்பது பௌசி வட்டாரத்தினருக்கு பிடிக்காத சங்கதி.

'அமைச்சர் அஷ்ரப் நேற்று யூ.என்.பி.யுடன் ஒட்டி இருந்தார். பிரேமதாசாவிற்கு நெருக்கமாக இருந்து போற்றிப் புகழ்ந்தார். இப்போது நமது ஜனாதிபதியைப் போற்றுகிறார். நாளை ரணில் வெற்றிபெற்றால் அவர்களையும் ஆதரிப்பார். இவரிடம் சுதந்திரக் கட்சிக்குரிய முஸ்லிம் வாக்கு வங்கிகளை விட்டுக் கொடுப்பது பாதகமாக முடியலாம்' என்று அமைச்சர் பௌசிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

'முஸ்லிம்களது தனித்துவத்தைப் பேண வேண்டுமானால் பெரும்பான்மை சிங்களக் கட்சியின் ஏஜண்டுகள் போல முஸ்லிம் பிரிவுகளை வைத்திருப்பது முறையல்ல. முஸ்லிம் காங்கிரஸ் தான் முஸ்லிம்களுக்கு உரிய தனி ஸ்தாபனம்' என்பது முஸ்லிம் காங்கிரசின் வாதம்.

இதற்கிடையே முஸ்லிம் காங்கிரஸ்-ஈ.பி.டி.பி. பிரச்சனையில் அமைச்சர்கள் பலர் ஈ.பி.டி.பிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அவர்களில் முக்கியமானவர் அமைச்சர் பௌஸி.

ஈ.பி.டி.பிக்கும், முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே சமரசம் செய்துவைக்கவும் வேறு சில அமைச்சர்கள் முயற்சிக்கின்றனர்.

பட்ஜெட் பாராளுமன்றத்தில் வர உள்ளதால் தமது எம்.பி.களது வாக்குகள் கண்டிப்பாகத் தேவை என்பது அஷ்ரப்புக்குத் தெரியும். அதனால் தான் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பேரம்பேச நினைக்கிறாராம்.

### அஷ்ரப் நடத்தும் உள் யுத்தம்!

இலியாஸ் எம்.பிக்கு நிதி ஒதுக்காதது தான் முக்கிய பிரச்சனை என்பது மேலோட்டமாகத் தெரிவது.

அஷ்ரப்புக்கு உண்மையான பிரச்சனை சில அமைச்சர்களோடுதான். அந்த அமைச்சர்களுக்கும் முஸ்லிம் காங்கிரசைப் பிடிப்பதில்லை. தம்மிலேதான் ஆட்சி தங்கியிருக்கிறது என்று அமைச்சர் அஷ்ரப் அடிக்கடி கூறுவதையிட்டு அவர்களுக்குப் பயங்கரமான அதிருப்தி. இது அமைச்சரவைக் கூட்டங்களிலும் எதிரொலித்தது.

இந்த அமைச்சர்களுக்கு பாடம் புகட்டவும், தன் பலத்தைக் காண்பிக்கவும், ஜனாதிபதி நாட்டில் இல்லாத சூழலில் ஒரு உள் யுத்தத்தைத் தொடுக்க இலியாஸ் எம்.பியின் பிரச்சனையை ஒரு சாக்காக எடுத்துக்கொண்டார்.

ஏனெனில் முன்னரும் இலியாஸ் எம்.பி. தனக்குரிய நிதியைத் தருமாறு ஈ.பி.டி.பி. தலைவருக்கு எதிராக பிரச்சனைப்பட்டார். அப்போது அமைச்சர் அஷ்ரப்போ, முஸ்லிம் காங்கிரசோ அவருக்கு ஆதரவாக தோள் கொடுக்கவில்லை. அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளேதான் ஆதரவாக இருந்தார்.

எனவே இம்முறை இலியாஸ் பிரச்சனை ஒரு சாக்குத்தான். அம்மையார் வந்ததும் தம்மை சமாதானப்படுத்த முனைவார்; அப்போது தமக்கெதிரான அமைச்சர்களது வாயை அடைக்கவும் கேட்கலாம் என்பது அமைச்சர் அஷ்ரப்பின் திட்டம்.

பாராளுமன்றத்தில் இலியாஸ் எம்.பி. திடீரென்று சென்று குறுக்கே குந்திவிட்டார். முஸ்லிம் காங்கிரஸ் அரச தரப்பு கட்சிகளில் ஒன்று என்பதால், இதுபற்றி தன்னோடு முன்னே கலந்துபேசி அனுமதி பெறாதது கல்வியமைச்சர் ரிச்சாட் பத்திரனவுக்கு கோபம் கொப்பளிக்கச் செய்துவிட்டது. அவர்தான் பாராளுமன்றத்தில் அரச தரப்பு கொறடா.

அரச தரப்பு எம்.பிகள் அவரது அனுமதியின்றி இவ்வாறான காரியங்களில் ஈடுபடக்கூடாது. அதனால்தான் சபையில் வைத்தே இலியாஸ் எம்.பியையும் திட்டித் தீர்த்ததோடு, முஸ்லிம் காங்கிரசின் தயவு தேவையில்லை என்று வெளியேயும் கூறிவிட்டார்.

அண்மையில் வீரவிதான இயக்கமும் முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராக ஊர்வலம் போயிருக்கிறது. இதன் பின்னணியில் ஆளும் தரப்பார் சிலரே தூண்டுதலாக இருந்தனர்.

'வீரவிதான' எதனைச் செய்தாலும் அந்த 'முக்கிய அமைச்சரின்' அனுமதி பெறப்படாமல் செய்வதில்லை. இதனால் முஸ்லிம் காங்கிரஸ்மீது அந்த அமைச்சரும் மின்சாரக் கோபத்தில் உள்ளார் என்று தெரிகிறது.

தமிழரோ, முஸ்லிமோ அரசாங்கத்தில் தீர்க்கமான பங்கு வகிப்பதை பேரினவாதிகள் சகியார். நேற்று தொண்டமானுக்கு எதிராக ஊர்வலம். இன்று அஷ்ரப்புக்கு எதிராக. இவர்கள் இருவரும் தம்மால்தான் ஆட்சி நிலைக்கிறது என்று அடிக்கடி கூறிவருபவர்கள் என்பதால், ஆளும் தரப்பு முக்கியஸ்தர்கள் சிலர் இவர்களை குட்டி வைத்திருக்க வீரவிதானாவைக் கிள்ளி விடுகிறார்கள். பின்னர் 'அப்படியா சங்கதி? நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கூறி தொட்டிலையும் ஆட்டுகிறார்கள்.

தொண்டா, அஷ்ரப் இருவர்மீது என்னதான் அரசியல் தவறுகள் இருப்பினும் வீரவிதானாவின் விஷமம் கண்டிக்கத்தக்கதே! தமிழ், முஸ்லிம் கட்சிகள் இப்படியான சந்தர்ப்பங்களிலாவது ஒன்றுபட வேண்டாமா?

கொழும்பில் பத்திரிகையாளர்கள் ஊர்வலம் நடத்தியபோது 'கரும்புலிகள் ஊடுருவலாம்' என்று பொலிசார் விரட்டினார்கள். அஷ்ரப்புக்கு எதிராக கல்லூரி மாணவர்களையே வெளியே கொண்டு வந்து பிக்குகள் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது பொலிஸ் வேடிக்கை பார்த்துள்ளது. கண்துடைப்புக்காக அரச தரப்பை எதிர்த்தும் சில கோஷங்கள் எழுப்பப்பட்டனவாம். ■

www.padippakam.com

உண்மைத் தொடர்

அதிர் இடி 83

**கடந்தவாரம்**

**அமீனின் கட்டளைப்படி இலக்குப் பார்த்து குண்டு வீசத் தவறிய விமானப்படை அதிகாரி கடத்தப்பட்டு காரில் வைத்து கொளுத்தி எரிக்கப்படுகிறார். அமீன் சாராவை இரண்டாவது முறையாகவும் மணந்து கொள்கிறான்.**

**இனி...**

# இடி அமீன்

சாராவை மணந்து கொண்ட சில மாதங்களின் பின்னர் இன்னொரு பெண்மீதும் அமீனின் கண் விழுந்தது.

தொழில் அமைச்சில் முக்கிய அதிகாரியாக இருந்தவள் அவள். அமைச்சு விடயம் தொடர்பாக அதிகாரிகளை அமீனிடம் அனுப்பும்போது அழகான பெண் அதிகாரிகளையே அமைச்சர்கள் அனுப்பிவைப்பார்கள்.

அமீனுக்கு அப் பெண்களைப் பிடித்துவிட்டால், அப் பெண்களை தன்னிடம் அனுப்பிய அமைச்சர்களை குளிரவைத்து விடுவான். பதவிக்கும் திடீர் ஆபத்துக்கள் ஏற்படமாட்டாது.

தொழில் அமைச்சரும் தனது அமைச்சில் அழகும் செழிப்புமிக்க அதிகாரி ஒருத்தியையே அனுப்பியிருந்தார்.

அவளைப் பார்த்ததுமே தேனில் விழுந்த வண்டாகிவிட்டான் அமீன். அவள் அமைச்சுத் தொடர்பாக விளக்கமளித்துக் கொண்டிருக்க, அமீனோ அவளது அங்க இலட்சணங்களை விழிகளால் விழுங்கிக் கொண்டிருந்தான்.

அவள் கூறிய விஷயங்களுடன் சம்பந்தமே இல்லாத கேள்வி அமீனிடம் இருந்து வெளிவந்தபோது, அவள் துணுக்குற்றாள்.

**"என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"** என்று கேட்டான்.

அவள் எச்சில் விழுங்கினாள். திடீரென்று இப்படியொரு கேள்வி தன்னை நோக்கிப் பறந்து வரும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

ஒரு மாதிரியாக சுதாகரித்துக் கொண்டு, "மிகச் சிறந்த அதிபர். தலைசிறந்த தலைவர்!" என்றெல்லாம் உளறிவைத்தாள்.

அவள் சொன்னதைக் கேட்டு உரக்கச் சிரித்த அமீன், அந்தச் சிரிப்பின் ஊடே சொன்னான்: **"நான் மிகச் சிறந்த கலைஞன் என்றும் தெரியுமா? அதுவும் பெண்கள் விஷயத்தில் விவரம் பல தெரிந்த கலைஞன்!"** கூறிவிட்டும் சிரித்தான்.

அவளுக்கு அமீனின் நோக்கம் தெரிந்துவிட்டது. அமீனின் சபலக் குணம் உகண்டாவெங்கும் அறியப்பட்ட குணமாக மாறியிருந்தது.

அதனால் அவளுக்கும் அமீனைச் சந்திக்க வரும்போதே, சந்தர்ப்பச் சூழ்நிலை விருந்தாக மாறவும் செய்துவிடும் என்று தெரிந்தே வந்திருந்தாள்.

அமீன் தன் ஆசனத்தில் இருந்து எழுந்து அவள் அருகே சென்றபோது, அவள் மரியாதை நிமித்தமாக எழுந்து கொள்ள, அமீனின் கரங்கள் அவள் தோள்கள் இரண்டையும் அழுத்திப் பிடித்தன.

அவளுக்குப் புது அனுபவம். உடல் சிலிர்த்தது. உள்ளே ஒரு பயம் சர்ரென்று ஊர்ந்தது.

கனிவது, கனியாதது, தானாகக் கனியாமல் அடித்துக் கனியவைக்க வேண்டியது என்று அனைத்து ரகங்களையும் அனுபவபூர்வமாக அறிந்தவன் அமீன்.

அவள் ஒத்துழைக்கத் தயாராகிவிட்டதை அறிந்ததும், தன் வித்தைகளை காண்பிக்கத் தொடங்கினான். அவள் கண்கள் சொருகி போதை பருகியவளாய் கிறங்கி அமீன் கைகளில் துவண்டாள். அவளைத் தூக்கிக்கொண்டு ராட்சதன் போல தன் பிரத்தியேக படுக்கையறைக்குள் புகுந்தான்.

அதன்பின்னர் அந்தப் பெண் அதிகாரிக்கு தொழில் அமைச்சில் இருந்து ஜனாதிபதி மாளிகைக்கு பதவி உயர்வுடன் மாற்றம் வந்தது.

அமீன் மூலம் அவள் கருவுற்றாள். குழந்தையும் பிறந்தது. இது இரகசியமாக வைக்கப்பட்டது.

சாராவை மணந்தபின்னர் அமீன் தொடர்புகொண்ட அந்தப் பெண், குழந்தை பெற்றுவிட்டாள். ஆனால் சாரா மட்டும் அமீன் மூலம் கருவுறவில்லை.

இதனையிட்டு அமீனுக்கு கவலையாக இருந்தது. மருத்துவரை அழைத்து சாராவை பரிசோதனை செய்யுமாறு கூறினான்.

குழந்தை பெறத்தக்க சகல வாய்ப்புக்களும் சாராவுக்கு இருக்கின்றன. ஏற்கனவே ஒரு குழந்தை பிறந்துள்ளதால், இப்போதைக்கு இன்னொரு குழந்தை வேண்டாம் என்று சுயமாக ஏதாவது தற்காப்பு முறையை சாரா கையாளக்கூடும்!" என்று மருத்துவர் ஒரு நீண்ட விளக்கம் கொடுத்துவிட்டுப் போனார்.

சாரா எப்போதுமே எதையோ பறிகொடுத்தவள் போலவே காணப்பட்டாள். அவளது முன்னாள் காதலனை அமீன் கொன்றுவிட்டதாகத் தெரிந்த பின்னரே அவள் மனம் குறுகிப் போனது.

அவள் தன் காதலனை மனப்பூர்வமாக வெறுத்தவள் அல்ல. சந்தர்ப்பம் சூழ்நிலையால் காதலை முறித்துக் கொண்டாள். அதற்காக அவன் பலியாக நேரும் என்று நினைத்தே பார்க்கவில்லை.

தன்னால் ஒரு உயிர் போய்விட்டதே என்று எண்ணும்போதெல்லாம் குற்ற உணர்ச்சி அவளைக் குத்திக் கிழித்தது. மனது வலித்தது.

சாரா தன்னோடு இயல்பாகப் பழகவில்லை என்பது அமீனுக்கும் விளங்காமல் இல்லை.

உளவியல் நிபுணர் ஒருவரை அமீன் அழைப்பித்தான். அவரும் சாராவை நன்கு பரிசோதனை செய்து பார்த்தார்.

ஆனால் தான் அறிந்த உண்மையை அமீனிடம் கூறும் தைரியம் அவருக்கு ஏற்படவில்லை. அமீனிடம் கூறினால் பாவம் சாராவும் சின்னாபின்னமாகிவிடுவாள் என்று பயந்ததும் சொல்லாததுக்கு மேலதிக காரணம்.

அமீன் தன்னை நெருங்கும் போதெல்லாம் 'ஒரு கொலை பாதகனுடன் உறவு கொள்ளுகிறோமே!' என்று அவளது உள் மனம் பதறியடித்தது.

இதனால் அமீனுடன் அவளால் மனம் ஒன்றி இன்பம் துய்க்க முடியவில்லை. அமீனால் அவளிடம் சுகத்தைப் பெற முடியவில்லை.

இந்த உண்மைகளை அமீனிடம் கூறினால் விபரீதமாகும் என்று உளவியல் நிபுணர் பயந்தது நியாயம்தான்.

பழைய காதலனை மனதில் சுமந்து கொண்டு, தன்னை வேண்டா வெறுப்பாக உடலில் சுமக்கிறாள் என்று தெரிந்திருந்தால் அவளது கழுத்தை நெரித்தே கொன்றிருப்பான்.

"காலம் செல்லச் செல்ல சாரா அடுத்த குழந்தை பெறத்தக்க நிலையை அடைந்துவிடுவாள். கவலையே படாதீர்கள்!" என்று அமீனிடம் துணிந்து பச்சைப் பொய் கூறினார் உளவியல் நிபுணர்.

உண்மைகளைவிட பொய்க்கு இனிப்பும் அதிகம். தற்காலிக மதிப்பும் அதிகம். அந்த உளவியல் நிபுணருக்கு தன் சட்டைப் பையில் இருந்து நோட்டுக் கட்டு ஒன்றை எடுத்து நீட்டினான் அமீன். "எண்ணிப் பார்க்காது தருகிறீர்களே?" என்றார் நிபுணர்.

அமீன் சிரித்தபடி, "சிலருக்கு **எண்ணியே**



# தருவது ரசிகன்

பார்க்காதும் கொடுப்பேன். வேறு சிலருக்கு **எண்ணி எண்ணி வருந்தும்படியும் கொடுப்பேன்!"** என்றான். ஏனடா கேட்டோம் என்றாகிவிட்டது நிபுணருக்கு.

ஐந்து மனைவிகளை மட்டுமே அதுவரை உத்தியோகபூர்வமாக அமீன் அறிவித்திருந்தான். ஆனால் ஏராளமான பெண்கள் அறிவிக்கப்படாத மனைவிகளாக இருந்தனர். அவர்கள் மூலமாகவும் அமீனுக்கு பல பிள்ளைகள் பிறந்தன.

அமீனுடைய இத்தகைய குடும்பங்களைப் பராமரிக்கவே நிறைய நிதி செலவானது. ஜனாதிபதிக்குரிய நிதி என்ற பெயரில் கணக்கற்ற முறையில் நாட்டின் நிதி வளத்தை அமீன் தண்ணீராய்ச் செலவிட்டான்.

அமீனுடைய பாலியல் வாழ்க்கை விசித்திரமானது. தனது சக்திக்கும், அதிகாரத்துக்கும் உரிய சாதனமாகவே பாலியல் வேட்கையைக் கருதினான்.

தனது பாலியல் ஆசைகளையும், பல பெண்களோடு தனக்குரிய அந்தரங்க உறவுகளையும் அமீன் மறுத்ததில்லை. மேலும் பல பெண்கள் தன்னை எண்ணி ஏங்கிக் கொண்டிருப்பதாகவும், சொடுக்குப் போட்டால் போதும், வந்து கட்டிலில் விழுந்துவிடுவார்கள் என்றும் சியமாவிடமே பலமுறை கூறியுள்ளான்.

அமீனின் கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை. பல பெண்கள் அமீனுடன் உறவாட விரும்பினார்கள்.

ஒரு தடவையாவது அமீனுடன் பழக வேண்டும் என்று விரும்பி வந்த பெண்களும் இருந்தனர்.

கொலைப்பயம் ஏற்பட்ட பின்னர் வலிய நாடிவரும் பெண்களிடம் அமீனுக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிடும்.

தனது புலனாய்வுப் பிரிவு மூலம் அப் பெண்களைப் பற்றி நன்கு ஆராய்ந்துவிட்டே தன் இடத்துக்கு அழைத்துக் கொள்வான்.

அப்படியிருந்தாலும் பல முன்னெச்சரிக்கைகள் செய்து வைத்திருப்பான்.

கட்டிலின் மெத்தைக்கு கீழே உடனடியாக வெளியே எடுக்க வசதியாக பிஸ்டல்கள் சில மறைத்து வைக்கப்பட்டிருக்கும். தலையணையின் அடியிலும் பிஸ்டல் ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருக்கும்.

உடலில் ஆடைகள் இல்லாது போனாலும் உருவிக்கொள்ள ஆயுதங்கள் ஒளிந்திருக்கும் படுக்கையறை அது.

பாடசாலை மாணவிகள் முதல் பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்த பெண்கள் வரை அமீனுடைய இச்சைகளுக்கு இரையானதுண்டு. தாமாகப் பணிந்தவர்கள் பாதி; பயமுறுத்திப் பணியவைக்கப்பட்டவர்கள் மீதி.

கம்பலாவில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் சமீபமாக அமீன் தன் காரில் சென்று சில சமயங்களில் நோட்டமிடுவான்.

அப்போது அவனைக் காண்பவர்களுக்கு அமீன் என்று தெரியவே தெரியாது.

தனது உருவத்தையே ஒப்பனை மூலம் மாற்றிக்கொள்வதில் அமீன் கில்லாடியாக இருந்தான்.

இஸ்ரேலுடன் அமீன் உறவு வைத்திருந்த காலகட்டத்தில் 'மொசாட்' உளவு நிறுவன அதிகாரி ஒருவர்தான், திடீரென்று தோற்றத்தை மாற்றிக்கொள்ளும் ஒப்பனைக் கலையைக் கற்றுக் கொடுத்ததோடு, அதற்குரிய சாதனங்களையும் கொடுத்திருந்தார்.

மிகக் கிட்டத்தில் நின்று பார்த்தால் அமீன்தான் என்று கண்டுபிடித்துவிடலாம். ஆனால் அவ்வாறு கிட்டத்தில் வந்து யார்தான் பார்க்கப் போகிறார்கள்?

பாடசாலைவிட்டு மாணவிகள் செல்லும்போது அமீனின் கண்கள் பிணம் கொத்தும் கழுகுகள் போல அவர்களை வட்டமிடும்.

அமீனின் மனதுக்குப் பிடித்த மாணவி அன்றிரவேயோ, அல்லது மறுநாளோ அமீனின் படுக்கையறைக்குக் கொண்டு வரப்படுவாள். அதற்கென்றே ஒரு குழுவையும் அமீன் வைத்திருந்தான்.

மெய்ப்பாதுகாப்பாளர்களுக்குள் அமீனின் மெய்கள் பல அறிந்த காப்பாளர்கள்தான் அவர்கள். அதனால் மெய்காப்பாளர்களுக்குள்ளேயும் அவர்களுக்கு கூடுதல் சலுகைகள்.

இதனால் அமீனின் மெய்காப்பாளர் அணிகூட இரண்டு பிரிவாக இருந்தது. அமீனது நம்பிக்கைக்குரிய, அமீனுக்கு பெண்கள் தேடித்தருகின்ற காப்பாளர்கள், ஏனைய காப்பாளர்களை துச்சமாக மதித்தனர். அவர்களைத் தங்களது எடுபிடிகள் போன்றே நடத்தினர்.

இதனையிட்டு அமீனிடம் முறையிட யாருக்கும் துணிச்சல் இருக்கவில்லை. அமீனின் இரகசியம் முழுக்க அறிந்தவர்களான மெய்காப்பாளர்களை அமீன் கண்டிக்கவோ, தண்டிக்கவோ மாட்டான் என்று கருதியதாலேயே ஏனையோர் அமீனிடம் முறையிடாது இருந்தனர்.

ஆனாலும் ஜனாதிபதி மாளிகையின் உள் தகவல்கள் வெளியே வருவதற்கு இத்தகைய உள் பிரச்சனைகளும் உதவிகரமாக இருந்தன.

இல்லையெனில் அமீனின் பல திருவிளையாடல்களும், தீர்த்துக்கட்டும் நடவடிக்கைகளும் இந்தளவுக்கு வெளியே தெரிந்திருக்காது.

அமீனது மெய்காப்பாளர்கள் பலருக்கே அமீன்மீது கசப்பு ஏற்பட்டபின்தான் பழைய கொடூரங்கள் எல்லாம் மெல்ல மெல்ல வெளியே கசியத் தொடங்கின.

**"பெண் ஆசையை ஆணும், ஆண் ஆசையைப் பெண்ணும் கட்டுப்படுத்தக்கூடாது. வீரியம் கெட்டு விடும்!"**

அதுதான் அமீன் ஒருமுறை தன் வாயாலேயே ஜோக் போன்று சிரித்தபடி கூறியது. பத்திரிகையாளர் மாநாடு ஒன்றிலேயே அப்படிக் கூறினான்.

"தங்களுக்கு பெண்கள் என்றால் பிடிக்குமாமே?" என்று ஒரு நிருபர் கேள்வி தொடுத்ததுக்கே அந்தப் பதில் அமீனிடமிருந்து வந்து விழுந்தது.

ஆனால் நிருபர் அமீனிடம் அக் கேள்வியை தூக்கிப்போட்டது உகண்டாவில் அல்ல, ஜெனிவாவில். உகண்டாவில் அப்படியொரு கேள்வியைக் கேட்க எந்த நிருபருக்குத்தான் நா எழும்?!

அமீனின் கண்களையும், கருத்தையும் கவர்ந்த இன்னொரு அழகி கௌதா.

இவள்தான் பின்னர் தன் பெயருடன் அமீன் பெயரையும் இணைத்து கௌதா அமீன் என்று பிரபலமானவள்.

அவளை அமீன் சந்தித்ததும் சுவாரசியமான நிகழ்வுதான். (இடி தொடரும்)

# அம்மாவின் சந்தோசம்

தமிழகத்தில் உள்ள நாடாளுமன்றத் தொகுதிகளில் சென்றமுறை அ.தி.மு.கூட்டணி அதிகமான தொகுதிகளை கைப்பற்றியது. இம்முறை பாரதிய ஜனதா கூட்டணி கைப்பற்றியிருக்கிறது.

ஆனாலும் ஜெயலலிதாவுக்கு படுதோல்வி கிட்டும் என்று கூறப்பட்ட ஆருடங்கள் பொய்த்துவிட்டன.

ஜெயலலிதா அணியும் காங்கிரசும் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டன. தமிழகத்தில் உள்ள இரண்டு பெரிய திராவிடக் கட்சிகளில் ஏதாவது ஒன்றுடன் காங்கிரஸ் கூட்டுச் சேர்ந்தால் வெற்றி நிச்சயம் என்பது பாராளுமன்ற தேர்தல் சூத்திரம்.

அந்தச் சூத்திரம் இம்முறை பொய்த்துள்ளது. அதற்கு காரணம் காங்கிரஸ் வாக்கு வங்கிகள் தமிழ்நாட்டில் இரண்டாக பிளவுண்டிருப்பதே.

காங்கிரசுக்கு போகவேண்டிய வாக்குகளில் பாதியை மூப்பனார் தலைமையிலான தமிழக காங்கிரஸ் பிரித்துவிட்டது. அந்தக் கட்சி வாக்குகளைப் பிரித்ததுதான் கண்ட பலன். கட்டுக்காசைக்கூட காப்பாற்ற முடியவில்லை.

ரஜினியின் ஆதரவுள்ள தலைவர் மூப்பனார் என்று பிரசாரம் செய்தும் தமிழ்மாநில காங்கிரஸ் படு படு தோல்வி கண்டிருக்கிறது.

காங்கிரஸ் வாக்குகள் பிளவுபட்டு இருக்காதுவிட்டால் தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கூட்டணிக்கு படு தோல்வி கிடைத்திருக்கும். ஏனெனில் பல தொகுதிகளில் குறைந்த வாக்கு வித்தியாசத்தில்தான் பாரதிய ஜனதா கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

எனவே தமிழகத் தேர்தல் முடிவுகள் ஜெயலலிதாவுக்கு பெரிய அடியே அல்ல. எம்.ஜி.ஆரின் வாக்கு வங்கிகள் ஜெயலலிதா பக்கம்தான்.

வாஜ்பேய் அரசை ஜெயலலிதா முதுகில் குத்தியதற்கு காரணம் சொந்த வழக்குப் பிரச்சனைதான் என்பது தெரிந்த பின்னரும் வாக்குகள் அவர் கட்சிக்கு குவிந்துள்ளன.

தனது உயிர்த்தோழியான சசிகலாவின் சகோதரர் மகனான தினகரனை துணிந்து வேட்பாளராக்கினார் ஜெயலலிதா. அவரும் வெற்றி பெற்றிருக்கிறார்.

ஜெயலலிதாவுக்கு தான் எதைச் செய்தாலும் அதனை தமிழக மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையை கடந்த இரு தேர்தல்களும் ஏற்படுத்தி இருக்கின்றன. எனவே மறுபடி பதவிக்கு வந்தாலும் பழைய தவறுகளைத் தொடரத் தயங்கமாட்டார்.

ஜெயலலிதாவின் முக்கிய சவால் ஒன்றும் நிறைவேறியிருக்கிறது. தமிழக மாநில காங்கிரஸ் பிரமுகரும், முன்னாள்



நிதியமைச்சருமான ப. சிதம்பரத்தை எப்படியாவது தோற்கடிக்க வேண்டும் என்று கடந்த தேர்தலிலேயே காய்களை நகர்த்தினார். அதையும் மீறி சிதம்பரம் எப்படியோ வெற்றிபெற்றுவிட்டார். ஆனால் இம்முறை ப. சிதம்பரம் படுதோல்வி. ஜெயலலிதாவுக்கு இதுதான் இத்தேர்தலில் மிகச் சந்தோசமான செய்தி.

ஜெயலலிதாமீது ஊழல் வழக்குகள் போட்டு இறுக்கியவரே ப.சிதம்பரம்தான். ஜெயலலிதாவுக்கு பிரதமர் ஆசை காட்டி ஏமாற்றிய சுப்பிரமணியம் சுவாமியை ஜெயலலிதா கைவிட்டார். ஜெயலலிதாவை திட்டியபடி மதுரையில் போட்டியிட்ட சுவாமி கட்டுக்காசையும் இழந்து மண் கவ்வியிருக்கிறார்.

# ரஜினியின் வாக்கு பாரதீய ஜனதாவுக்கே

ரஜினிகாந்த் இம்முறை இந்தியத் தேர்தலில் எவரையும் ஆதரிக்காததுக்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.

பாரதிய ஜனதா ஆட்சிக்கு வருவதையே அவர் விரும்பினாராம். ஆனால் வெளிப்படையாக அறிவித்தால் முஸ்லிம் மற்றும்



கிறிஸ்தவ ரசிகர்களை இழக்க நேரலாம் என்பதால்தான் தன் கருத்தை கூறாது தவிர்த்தாராம்.

அதேசமயம் ஆட்சி கவிழக் காரணமாக இருந்தவர்களை தண்டிக்க வேண்டும் என்று மறைமுகமாக கூறியுமிருந்தார். அவ்வாறிருந்தும் அ.தி.மு.க. கூட்டணிக்கு எதிராக பெரும் எதிர்ப்பலை எதுவும் வீசவில்லை.

சென்ற தேர்தலில் ரஜினிகாந்த் தி.மு.க. கூட்டணியை வெளிப்படையாக ஆதரித்தும் அக் கூட்டணி அ.தி.மு.க கூட்டணியை வெல்ல முடியவில்லை.

ரஜினி அரசியலுக்கு வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது பெரிதாக காணப்பட்டது. ஆனால் இப்போது ஜெயலலிதா மீதான அதிருப்திகள் தணிந்துவிட்டன. இந்நிலையில் ரஜினியின் நிலைப்பாடுகள் தேர்தல் முடிவுகளில் பெருந்தாக்கங்களை ஏற்படுத்த மாட்டாது என்று கூறப்படுகிறது.

இதனை ரஜினியும் அறிந்து வைத்திருப்பதாலேயே இம்முறை தேர்தலில் தெளிவான முடிவு எதனையும் கூறாது பின்வாங்கி விட்டார்.

ரஜினி இம்முறை தனது வாக்கை பாரதிய ஜனதாவுக்கே செலுத்தியதாக அவருக்கு நம்பகமான வட்டாரங்கள் கூறியுள்ளன.

# நடிகர்கள் தோல்வி

தமிழக மக்கள் நடிகர்கள் நடிகைகள் என்றால் கண்ணை மூடிக்கொண்டு வாக்குப் போட்டு விடுவார்கள் என்று நினைப்பது தப்பானது.



எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் அரசியலில் பெரிய பதவிகளை அடைந்துவிட்டதால் நடிகர், நடிகைகள் சிலருக்கு ஒரு ஆசை. எம்.ஜி.ஆரோடு இணையாக நடித்த நிர்மலா, லதா போன்றோரும், முன்னாள் நடிகையும் எம்.ஜி.ஆரின் மனைவியுமான ஜானகியும் கடந்த காலங்களில் தேர்தலில் குதித்தனர். தோல்விதான் தழுவியது.

ரேவதியும் போட்டியிட்டுத் தோற்றார்.

சென்றமுறை தி.மு.க. சார்பில் சரத்குமார் போட்டியிட்டார். தோல்வி. மன்சூரலிகானும் படுதோல்வி.

இம்முறை தமிழகத்தில் தி.மு.க. சார்பில் நடிகர் சந்திரசேகர் போட்டியிட்டார். தோல்வியைத் தழுவினார். மன்சூரலிகான் புதிய தமிழக கட்சி சார்பாக போட்டியிட்டார். கட்டுக்காசும் கை விட்டுப்போனது. எல்லோரும் எம்.ஜி.ஆராகவும், ஜெயலலிதாவாகவும் மாறிவிட முடியாது.

# பராக் பராக் பிரியங்கா

தேர்தல் பிரசாரத்தில் கிடைத்த உற்சாகத்தால் தீவிர அரசியலில் குதிக்கிறார் பிரியங்கா.



சோனியாவுக்கு மக்களிடையே வரவேற்பில்லை. அவரது அந்நிய முகத்துக்கு வசீகரமும் இல்லை. அதனால்தான் காங்கிரஸ் இதுவரை காணாத தோல்வியை சந்தித்துள்ளது.

இத் தோல்விக்கு பொறுப்பேற்று சோனியா கட்சியைவிட்டு விலக மறுத்துவிட்டார். ஆனாலும் பிரியங்காவை கொண்டுவந்து நிலைப்படுத்திவிட்டு சோனியா ஒதுங்கக்கூடும்.

காங்கிரஸ் கட்சி இம்முறை இந்தளவுக்கு தப்பிப்பிழைத்ததுக்கும், சோனியா இரு தொகுதிகளில் வெற்றி பெறவும் பிரியங்காதான் காரணம். காங்கிரஸ் கட்சிக்குள் களையெடுப்பு நடத்தி, புது இரத்தம் பாய்ச்ச அதிரடியான திட்டம் ஒன்றை பிரியங்கா தயாரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

காங்கிரஸ் கட்சிக்கு தேவை வாக்கு திரட்டும் இயந்திரம். சோனியாவால் அது முடியாது என்று தெரிந்த பின்னர் பிரியங்காமீது காங்கிரஸ் பிரியமாக இருக்கிறது.

www.padippakam.com

# அசலும் நகலும்

அசலாக இருப்பது நாய்க்குட்டி. நகலாக இருப்பது ரோபோ நாய்க்குட்டி. தன்னைப் போலவே இருக்கும் இயந்திர நாய்க்குட்டியை ஆச்சரியமாக நோக்குகிறார் நாயார். நாமும் தான் ஆச்சரியப்படுகிறோம் அல்லவா?

இரட்டை வேடப் படங்களில் இரு பாத்திரங்களும் சந்திக்கும்போது ஆச்சரியப் பட்டு ஒரு போஸ் கொடுப்பார்களே- அப்படித் தான் இருக்கிறது இதுவும். ஆனால் இது நடிப்பல்ல. ஆச்சரியத் துடிப்பு.



# மூன்று தலை

இந்தியாவில் காங்கிரஸ் கட்சிக்கு நேரு குடும்பத்தை விட்டால் வேறு கதி கிடையாது. இம் முறைத் தேர்தலில் பிரியங்கா, ராகுல், சோனியா மூவரும் பிரசாரம் செய்தனர்.

அசோக சக்கரத்தில் மூன்று சிங்கத் தலை கொண்டது இந்தியாவின் அரச இலச்சினை. அந்த மூன்று சிங்கத் தலைகளை சோனியா, பிரியங்கா, ராகுல் ஆகிய மூவரின் தலைகளாக சித்தரித்து 'டைம்ஸ் ஒஃப் இந்தியா' வெளியிட்ட கருத்துப் படம் இது.




# வசதியான சாலை

நவீனமயமான நகரங்களில் போக்குவரத்து நெரிசல்களைக் கட்டுப்படுத்துவதற்காக, குறுக்கும் நெடுக்குமாகப் பாதைகளை அமைத்து விடுகிறார்கள்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 46 ஆண்டுகளுக்கு முன்பே-1953ம் ஆண்டிலேயே இத்தகைய நெடுஞ்சாலைகளை அமைத்துவிட்டார்கள். கணவேகத்தில் செல்லும் வண்டிகள், எதிரேவரும் வண்டிகளுக்குப் பயந்து ஓரமாகப் போகவோ, விளக்குச் சமிக்ஞைகளில் காத்திருக்கவோ தேவையில்லாமல் ஆற்றோட்டம் போல எங்கும் செல்லலாம்.

படத்தில் காணப்படும் நெடுஞ்சாலைகள் நான்கு அடுக்குகளைக் கொண்டவை. ஒவ்வொன்றும் வெவ்வேறு இடங்களுக்கு வாகனங்களைத் தங்கு தடையின்றி ஓட்டிச் செல்ல வசதியாக அமைக்கப்பட்டுள்ளன.

நம்நாட்டிலும் இத்தகைய சாலைகள் எதிர்காலத்தில் மிக அவசியம். இல்லையானால் கொழும்பு வீதிகளில் தற்போதே பிதுங்கிக் கொண்டிருக்கும் வாகனங்கள் எதிர்காலத்தில் நகர முடியாத நிலைதான் வரும்.



# இது தேவைதானா?



அமெரிக்காவின் நியூயோர்க் நகரம். உலகின் மிகவும் நெருக்கடியான நகரங்களில் ஒன்று. இங்கு ஓரடி நிலம் வாங்குவதானாலும் பல இலட்சம் டொலர்கள் தேவைப்படும்.

இந்நகரின் ஒரு பகுதியில் உயிர் நீத்தோர் நீங்காத்துயில் கொள்வதற்காக அமைக்கப்பட்ட கல்வாரி இடுகாடுள்ளது இதனை. மிகக் கரிசனையுடன் ஆர்தர் ட்றீஸ் என்ற படப்பிடிப்பாளர் தனது கமராவுக்குள் கச்சிதமாகப் புகுத்தியுள்ளார். இப்படப்பிடிப்பாளர் சுற்றுச் சூழல் துறையில் ஆர்வமுள்ளவர்.

இப்படம் பத்திரிகை ஒன்றில் பிரசுரமானதும், இந்த மாபெரும் நகரில் இத்தகைய இடுகாட்டினைப் போற்றிப் பாதுகாப்பதில் யாருக்கு லாபம்? என்ற கேள்வியைக் கிளப்பி விட்டிருக்கிறது. இவ்வாறான இடுகாடே தேவையில்லை என்கிறார்கள்.

# தகவல் பெட்டி

# வாயுள்ள பிள்ளை

வாயுள்ள பிள்ளை பிழைத்துக் கொள்ளும் என்று முதுமொழி உண்டல்லவா? அதனைத்தான் இப் புகைப்படத்திற்கும் சூட்டியுள்ளார் கமராக்காரர்.

தென் அமெரிக்க நாடான குவாதிமாலாவில் வாயாலேயே கண்ணாடியில் படம் வரைந்து அசத்துகிறான் இவன். இந்தக் கெட்டிக்காரப் பையனின் சுட்டியான பெயர்: லூட்விக் ஹெர்னண்டஸ்.



# பவனி



எதற்கெல்லாம் சங்கம் வைத்திருப்பது என்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. ரசியாவின் தலைநகரான மொஸ்கோவில் மோட்டார் சைக்கிள் வைத்திருப்போருக்கு சங்கம் ஒன்று இருக்கிறது.

அந்தச் சங்கத்தின் 5ம் ஆண்டு விழாவில் பலரகமான, புதுமையான மோட்டார் சைக்கிள்கள் பவனி வந்தன. அவனியில் புதுமையான பவனிகள் பல உண்டு. அதில் இது ஒன்று.



படிப்பகம்

திரையுலக மறுபக்கம் 124

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# மீண்டும் நடிக்க வைத்த கணவர்

# முறிந்துபோன ஒரு காதல்

மீசைக்கார தயாரிப்பாளரின் அன்புக்குரியவராக இருந்தவர் 'யுவ' நடிகை. முன்றெழுத்து இளம் ஹீரோவுடன் இவர் கபடி விளையாடுவது போல நடித்ததை வீடியோவில் பார்த்தார் மீசைக்கார தயாரிப்பாளர்.

மிகத் தாராளமாக அதில் நடித்திருந்தார் 'யுவ' நடிகை. தயாரிப்பாளருக்கு இருப்புக் கொள்ளவில்லை.

எந்த நடிகைமீது கண்வைத்தாலும் கொத்தாமல் விடமாட்டார். 'யுவ' நடிகையை விட்டு வைப்பாரா?

முதலில் டிஸ்கஷனுக்கு அழைத்தார். நடிகை இரண்டு லகரம் கேட்டார். காசு உன் முன்பு தூசு என்று அள்ளிக்கொடுத்தார். டிஸ்கஷன் தொடர்ந்தது.

தனக்காக ஒரு படம் தயாரித்துத் தருமாறு நடிகை ஒரே பிடியாகப் பிடித்துக் கொண்டார். வேறு வழியின்றி மூன்றெழுத்து பெயரில் படம் ஒன்றை தயாரித்து நடிகையை கதாநாயகியாகப் போட்டார்.

மார்க்கெட் போன 'யுவ' நடிகையால் படம் பப்படமானது. தயாரிப்பாளருக்கு பலத்த நஷ்டம். அந்தக் கோபத்தை நடிகைமீது காண்பிக்க, நடிகை கோபித்துக்கொண்டு விட்டார்.

இந்நேரத்தில் அமெரிக்க தொழிலதிபர் ஒருவரது நட்பும் கிடைத்ததால், தயாரிப்பாளருக்கு துணிந்து 'டாட்டா' காட்டினார்.

அந்த அமெரிக்கத் தொழிலதிபரும் நடிகையே கதி என்று சிலகாலம் இருந்தார். அதனால் இருவரும் திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும் பேச்சு அடிபட்டது.

தொழிலதிபரும் நடிகையை மணக்க சம்மதம் கொடுத்திருந்தார். எல்லாம் கனிந்துவரும் நேரத்தில் சகுனியாக குறுக்கே புகுந்தார் மீசைக்காரர்.

தனக்கும் நடிகைக்கும் உள்ள தொடர்பை உறுதி செய்ய, நடிகையின் அங்கங்கள் பற்றி பச்சையாகவே விலாவாரியாகக் கூறியிருக்கிறார். தொழிலதிபர் அரண்டு போனார். மணம் முடிக்கும் யோசனையைக் கைவிட்டு அமெரிக்காவுக்குப் பறந்துவிட்டார்.

இதன் பின்னர் சிலகாலம் கழித்து மலேசியாவுக்கு நட்சத்திர கலை விழா ஒன்றுக்காகப் போயிருந்தார் நடிகை.

அங்குதான் இன்னொரு தொழிலதிபரின் மீது கடைக்கண் பார்வை செலுத்தினார். அவரும் இவருக்கு தன் கம்பனியிலேயே வேலை தருவதாகவும், தன்னோடு இருந்துவிடுமாறும் கூறினார்.

அப்போது சில தொலைக்காட்சித் தொடர்களில்தான் 'யுவ' நடிகைக்கு வாய்ப்புக் கிடைத்து வந்தது. மலேசியாவில் தொழிலதிபர் தருவதாகக் கூறிய ஊதியம் தமிழ்நாட்டில் கிடைப்பதைவிட அதிகம். தொழிலதிபர் கம்பனி வேலைக்காக மட்டும் ஊதியம் கொடுக்கவில்லையே. அதனால் நிறைவாகக் கிடைத்தது.

சில மாதங்களில் அந்த தொழிலதிபருக்கு என்ன தோன்றியதோ நடிகையை அலட்சியம் செய்ய ஆரம்பித்தார். மோகம் முப்பதுநாள் என்பது இந்த விஷயத்தில் சரியாகிவிட்டது.

நடிகைக்கு அதிஷ்டம் இருந்தது. கண்காட்சி ஒன்றில் இன்னொரு இந்தியரான மலேசிய தொழிலதிபரின் நட்புக் கிடைத்தது.

அவர் இளைஞர். நடிகையுடன் அறிமுகம் ஏற்பட்டதுடன் ஜொள்ளர் ஆகிவிட்டார்.

தயங்கித் தயங்கி நடிகையை டிஸ்கஷனுக்கு கூப்பிட, நடிகையும் 'பிகு' பண்ணிவிட்டு இறுதியில் சம்மதித்தார்.

முதல் டிஸ்கஷனிலேயே இளம் தொழிலதிபர் நடிகையிடம் சரணாகதி. இந்த உறவு வளர்ந்து, திருமணம் வரை சென்றது.

திருமணம் முடிந்து பல மாதங்களின் பின்னர் தொழிலதிபருக்கு வியாபாரத்தில் எதிர்பாராத நஷ்டம் ஏற்பட்டது.

வேறு வழியின்றி தன் மனைவியை மறுபடி நடித்துச் சம்பாதிக்குமாறு கூறினார். மீண்டும் பழைய பாதைக்கு திரும்ப விரும்பாத நடிகை மறுத்துப் பார்த்தார்.

தொலைக் காட்சியில் வாய்ப்புக் கேட்டுப் போனாலும், உடம்பைத் தான் கொடுக்க வேண்டும். அந்த நரகத்தில் மீண்டும் விழுவதா? என்று தயங்கினார்.

கணவர் விடவில்லை. அரைமனதோடு கணவர் சகிதம் தமிழ்நாட்டுக்கு திரும்பியுள்ள நடிகை இப்போது வாய்ப்புத் தேடித் திரிகிறார்.

-★-

சங்கீத நடிகைக்கும் ஒளிப்பதிவாளர் ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட நெருக்கம் யாவரும் அறிந்ததே.

இருவரும் திருமணம் செய்யவும் முன்வந்தனர். சங்கீத நடிகை வீட்டில் பயங்கர எதிர்ப்பு. சிகப்புக்கொடி பறந்தது.

காத்திருந்து காத்திருந்து கொட்டாவி விட்ட ஒளிப்பதிவாளர் இப்போது கல்கத்தா இறக்குமதியான நடிகைமீது ஒரு கண் வைத்திருக்கிறாராம்.

இதனை அறிந்த 'சங்கீத' நடிகை கண்ணைக் கசக்கிக் கொண்டிருக்கிறார். வீட்டாருடனும் எரிந்து விழுகிறாராம்.

## மத மார்...

'கண்டு கொண்டேன் ... படத்தில் அஜித்குமாரின் ... உதவி இயக்குநர். அஜித்... பாத்திரம்.

ஷாலினியை கல்யாண... அஜித் மதம் மாறப்போவத... கலப்படம் அற்ற பொய்... சம்மதம். மனது இடம் மா... மாறுவானேன்?" என்கிறா...

## பெண்கள்...

இயக்குநர் ப்ரியதர்ஷன் ... ஒரு படம் இயக்குகிறார். 'கோபுர வாசலிலே' என்று ப... மலையாளத்தில் பெரு வெ... சாலை' உட்பட இந்தியிலும் ... களை இயக்கியுள்ளார் ப்ரிய...

ஆண்களே இல்லாது இவர் ... வரும் படமும் பெரும் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




## முகப்பில்

ரஜினி

ஆகாஷ்

இந்து



## 'தமிழ் டைட்டானிக்'

ஆங்கிலத்தில் சக்கை போடு போட்ட 'டைட்டானிக்' தமிழில் மொழிமாற்றம் செய்து தமிழ்நாட்டு திரையரங்குகளில் வெளியிடப்பட்டுள்ளது.

## விஜய் குஷி

'வாலி' படத்தை இயக்கிய சூர்யா அடுத்து இயக்கும் படம் 'குஷி'. நாயகன் விஜய். நாயகி ஜோதிகா. திருமணம் முடிந்து விஜய் குஷியாக இருக்கு... நேரமாகப் பார்த்து, படத்திற்கும் 'குஷி' என... பெயர் வைத்துவிட்டனர்.

'குஷி' படத்திற்கு தன் பிஸிக்கு ... யிலும் இசையமைப்பது தேவா. ... யன்' போன்ற பிரமாண்டமான... களைத் தயாரித்த ஏ.எம். ரத்... படத்தையும் தயாரிக்கிறார்.

## புது நாய...

'ரோஜாவனம்' பட... மாணவர் ஆகாஷ். ... கார்த்திக்கோடு ... லைலாவை காதல... பவர் இவர் ... தோற்றம் கொ... மணிரத்... இயக்குநர்கள்... ரக் கையா... ஆகாஷ்...



பிரசாந்த்-சிம்ரான்

படம் : ஜோடி

சினி விசிட்...

## மினி சினி

♣ 'காதல் மன்னன்', 'அமர்க்களம்' போன்ற படங்களை வழங்கிய அஜித்-சரண் கூட்டணி மறுபடி ஒரு படத்தில் இணைகிறது. இதில் ஐஸ்வர்யா ராய் கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

♣ விஜயகுமாரின் மகன் அருண்குமார் தற்போது 'கண்ணால் பேசவா' படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தில் இருந்து அருண் விஜயகுமார் என்ற பெயர் மாற்றத்துடன் நடிக்கப் போகிறார் அருண்குமார்.

♣ செல்வா இயக்கத்தில் பார்த்திபன் டாக்ஸி ட்ரைவர் வேடத்தில் நடித்து வரும் படம் 'உன்னருகே நானிருந்தால்'. இப்படத்தில் இந்திரஜா ஒரே ஒரு பாடல் காட்சியில் பார்த்திபனுடன் இணைந்து நடனமாடுகிறார்.

♣ பிரபு-ரோஜா நடித்து வரும் 'திருநெல்வேலி' படத்தை இயக்குபவர் பாரதி கண்ணன். இவர் இப்படத்தில் ஒரு சில காட்சிகளில் தோன்றி நடித்துள்ளார்.

♣ மலேசியா வாசுதேவனின் மகன் நடிக்கும் 'மௌனமே' படத்தில் கதாநாயகியாக நடிக்க சிம்ரான் முதலில் ஒப்பந்தமானார். இப்போது இவருக்குப் பதிலாக சுவலட்சுமி நடிக்கிறார்.

♣ தமிழில் வெற்றி பெற்றுள்ள 'விரலுக்கேத்த வீக்கம்' படம் தெலுங்கில் தயாராகவுள்ளது. தமிழில் ஊர்வசி நடித்த வேடத்தில் தெலுங்கில் ரம்யா கிருஷ்ணன் நடிக்கவுள்ளார்.

♣ சுரேஷ் கிருஷ்ணாவின் 'ஒருவன்' படத்தில் சரத்குமாரின் வளர்ப்பு மகனாக நடித்த மாஸ்டர் விக்கி இப்போது 'சுல்தான்' என்ற இந்திப்படத்தில் மிதுன் சக்கரவர்த்தியின் மகனாக நடித்து வருகிறார்.

♣ ஷங்கர் இயக்கிய 'இந்தியன்' படத்தில் ஊர்மிளாவுக்கு பின்னணிக் குரல் கொடுத்த பானுப்பிரியா, தற்போது ஷங்கர் இயக்கி வரும் 'முதல்வன்' படத்தில் மனிஷாவுக்கு பின்னணிக் குரல் கொடுக்கிறார்.

♣ 'நட்புக்காக' படத்தின், கதையை எழுதியவர் தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னத்தின் மகன் ஜோதி கிருஷ்ணா. இவர் விரைவில் 'காதலர் தினம்' குணாலை வைத்துப் படமொன்றை இயக்கவுள்ளார்.

♣ வி.சி.குகநாதன் இயக்கத்தில் 'மனைவிக்கு மரியாதை' படத்தில் இணைந்து நடித்துள்ள பாண்டியராஜன்-குஷ்பு மீண்டும் வி.சி.குகநாதன் இயக்கத்தில் 'காசு மேல காசு' படத்தில் இணைந்து நடிக்கிறார்கள்.

## டபுள்ஸ்

பிரபுதேவா கதாநாயகனாக நடிக்க திருட்டு முழி முழிப்பதில் பெயர் பெற்ற நடிகர் பாண்டியராஜன் இயக்கும் படம், 'டபுள்ஸ்'.

பெயரைப் பார்த்ததும் பிரபுதேவா இரட்டை வேடம் என்று நினையாதீர்கள். இரண்டு பெண்களிடம் மாட்டிக்கொண்டு அவர் படுகின்ற அவஸ்தைகள்தான் கதை.

இப்படத்தில் இசையமைப்பாளர் தேவா தன் மகனை அறிமுகம் செய்துவைக்கிறார். அவரது ஒரே மகனான ஸ்ரீகாந்த் இசை அமைப்பாளராக அறிமுகமாகிறார். 'கம்பியூட்டர் கீபோர்ட்' வாசிப்பதில் கில்லாடியாம். பாடல்கள்: வைரமுத்து.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## சினிமா விமர்சனம்

நமது விமர்சனக் குழு 42/100

### பெற்றோரோடு போராடும் காதலர்கள்

படம் : ஜோடி
நடிப்பு : பிரசாந்த், சிம்ரான், விஜயகுமார், ரமேஷ்கண்ணா, நாசர், அம்பிகா.
இயக்கம்: பிரவீன்காந்த்
இசை : ஏ.ஆர்.ரகுமான்

பெற்றோரின் சம்மதம் பெறுவதற்காக காதலர்கள் போராடி வெல்வதுதான் தற்போதைய தமிழ் சினிமா படங்களது கதைக் கரு. அப்படியான ரகத்தில் வந்துள்ள மற்றொரு படம் 'ஜோடி'.

சிம்ரான் வீட்டில் 'நல்லவன்' என்று பெயரெடுக்க பிரசாந்த்தும், பிரசாந்த் வீட்டில் அபிமானத்தை சேகரிக்க சிம்ரானும் படாதபாடு படுகிறார்கள். இதுதான் கதை.

இக்கதையை ஆரம்பத்தில் 30 நிமிஷம்வரை ஜெட் வேகத்தில் கொண்டு போகிறார் இயக்குநர். பின்னர் கொஞ்சம் தொய்வு ஏற்படுகிறது.

பாடல்களும், பாடல்காட்சிகளும் படத்தின் வெற்றிக்கு முண்டு கொடுக்கின்றன. சண்டைக் காட்சிகள் செம விறுவிறுப்பு. பிரசாந்த் புகுந்து விளையாடுகிறார். பாடல் காட்சிகளில் சிம்ரான் பிரசாந்தில் பிசினாக ஒட்டிக் கொண்டு ரசிகர்களை இம்சைப்படுத்துகிறார்.

விஜயகுமார், நாசர் இருவரும் பாத்திரத்தோடு ஒன்றி நடித்துள்ளனர். ரமேஷ் கண்ணா சிரிப்பு வில்லன் மாதிரி வந்து கலக்குகிறார்.

அமர்க்களத்தில் ஆரம்பமான இளம் காதல் ஜோடியின் குறுக்கே நந்தியாக நிற்கிறார் தந்தைக்குலம். முதலில் முன்னின்று பச்சைக் கொடி அசைத்தவருக்கு என்னாச்சு? குமார நடிகரும் 'ஷா' நடிகையும் குழப்பத்தில் இருக்கிறார்கள்.

இயக்குநரான ரமேஷ் கண்ணா சமீபகாலமாக நடிப்பில் கொடி கட்டிப் பறக்கத் தொடங்கியுள்ளார். இவரும் மணிவண்ணன் போல பிஸியான நடிகரானாலும் ஆச்சரியமில்லை. மணிவண்ணன் மார்க்கெட்கூட இவரால் பாதிக்கப்படலாம்.

'ரட்சகன்' படத்தை இயக்கி பிரவீன் காந்த்துக்கு இது வெற்றிப் படம். பார்க்கக்கூடிய படம்.




## காதோடு சொல்லுகிறோம்

நகைச்சுவை 'மணி' நடிகர் நோய், நொடிகளில் இருந்து இப்போதுதான் மீண்டுள்ளார். 'மலபார்' படத்தில் ஒல்லிக்குச்சியாக உருமாறி காணப்படுவதும் அதனால்தான்! இப்போது பழையபடி தெம்பாகியதும், நடிகைகளுடன் வம்பு பண்ண ஆரம்பித்துவிட்டாராம். சின்னத் திரையில் பிரபலமாகியுள்ள முன்றெழுத்து நடிகையை தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளாராம்.

மூவேந்தரது பெயர் கொண்ட இயக்குநர் மீன் நடிகையைக் காதலித்து நகமும், சதையுமாக இருந்தனர். பின்னர் வேறு நடிகைகளது பக்கம் இயக்குநரது கவனம் திரும்பியது. ஆனாலும் 'மீன்' நடிகை இல்லாமல் அவர் இயக்கிய ஒரு படம் படு தோல்வி. இன்னொரு படம் பாதியில் தொங்குகிறது. இப்போது மறுபடி 'மீன்' நடிகையை கதாநாயகியாகப் போட்டு புதிதாக ஒரு படம் இயக்குகிறார். பழைய நட்பும் புதுப்பிக்கப்பட்டு விட்டது.

இரண்டெழுத்து 'பூ' நடிகைக்கும் அவரது காதலருக்கும் இடையே சுமுகமான பேச்சுவார்த்தை இல்லையாம். இயக்குநரின் தாய்க்குலம்தான் உறவு முறியாமல் இழுத்துப் பிடித்து வைத்திருக்கிறாராம். இயக்குநருக்கு தொடர் தோல்விகள். அதனால் நடிகை சம்பாதித்த பணமும் கரைந்துவிட்டது. அதுதான் கோபமாம்.



புதுமுகம் உதய்-விந்தியா
படம் : திருநெல்வேலி



கார்த்திக்-ஸ்வேதா மேனன்
படம் : சந்தித்த வேளை

## வில்லை வாசு

'சின்னத்தம்பி', 'வால்டர் வெற்றிவேல்', 'சேதுபதி ஐ.பி.எஸ்', 'மலபார் பொலிஸ்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் பி.வாசு. அந்தக் காலத்தில் சிவாஜி, எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர். போன்ற உச்ச நட்சத்திரங்களுக்கு ஒப்பனைக் கலைஞராக இருந்த பீதாம்பரம் என்பவரின் மகன்தான் வாசு.

இயக்குநர்கள் பலர் நடிக்க வந்து கொண்டிருப்பதும், வரவேற்பைப் பெற்றிருப்பதும் வாசுவுக்கும் ஆசையைக் கொடுத்துள்ளது.

விஜயகாந்த் நடிக்கும் 'வல்லரசு' படத்தில் வில்லனாக அறிமுகமாகிறார் வாசு. 19 வருடங்களாக இயக்குநராக இருந்தவர் இப்போதுதான் முதல் முறையாக கமராவுக்கு முன்பாக நடிக்கப்போகிறார்.

## நிஜப்பெயர் இதுதான்

தமிழ்ப்பட உலகில் முக்கியமான சிலரது நிஜப்பெயர்களது பட்டியல்.

பாரதிராஜா- சின்னச்சாமி
மணிவண்ணன்- அண்ணாதுரை
அகத்தியன்- கருணாநிதி
ராஜ்கிரண்- அப்துல்காதர்
பார்த்திபன்- மூர்த்தி
விக்ரமன்- சுப்பரமணி
வையாபுரி- சீனிவாசன்
இளையராஜா- ராசய்யா
ஏ.ஆர்.ரகுமான்- திலீப்குமார்
விஜய்- ஜோசப் விஜய்
சிவக்குமார்- பழனிச்சாமி
சூர்யா- சரவணன்
சத்யராஜ்- ரங்கராஜ்
ராமராஜன்- குமரேசன்
விவேக்- பெரியசாமி
விக்னேஷ்- ராஜா
ரம்பா- விஜயலட்சுமி
கவுசல்யா- கவிதா
குஷ்பு- நக்கத்
மும்தாஜ்- நக்மா
ரோஜா- ஸ்ரீலதா

## முரளி பார்த்திபன் இயக்குவது சேரன்

படையப்பாவில் வரும் பாடல் வரிகளை ஒரே உருவாக உருவி, படம் ஒன்றுக்குப் பெயர் சூட்டி விட்டனர். படத்தின் பெயர் 'வெற்றிக் கொடி கட்டு.'

இப்படத்தில் முரளி, பார்த்திபன் இருவரும் இணைந்து நடிக்கிறார்கள். ஒரு கதாநாயகி மீனா. இன்னொரு கதாநாயகியாக யாரைப் போடலாம் என்று மண்டையைக் குடைந்து கொண்டிருக்கிறார் சேரன்.

பிரசாந்த் நடிக்க சேரன் இயக்கிய 'விண்ணோடும் முகிலோடும்' அரைகுறையாக நிற்கிறது. அதனை அப்படியே ஒத்திப் போட்டுவிட்டு இப்படத்தை இயக்குகிறார் சேரன்.

'காதல் கோட்டை', 'காலமெல்லாம் காதல் வாழ்க', 'கண்ணெதிரே தோன்றினாள்' போன்ற வெற்றிப் படங்களை தயாரித்த 'சிவசக்தி மூவிஸ்' இதனையும் தயாரிக்கிறது.

பார்த்திபனை வைத்து சேரன் இயக்கிய 'பாரதி கண்ணம்மா' பெரிய வெற்றி. முரளியை வைத்து இயக்கிய 'பொற்காலம்' படமும் வெற்றி பெற்றது. 'தேசிய கீதம்' படுதோல்வி கண்டது.

இப்போது இந்த இருவரையும் ஒன்றாக நடிக்கவைத்து இயக்குகிறார். இசை: தேவா. பாடல்கள்: வைரமுத்து. ஒளிப்பதிவு: பிரியன்.

## பாம்பு உடல்

ஷங்கரின் 'ஜீன்ஸ்' படத்தில் உலக அழகி ஐஸ்வர்யாராயின் நடனத்தை எலும்புக்கூடாக கம்பியூட்டரில் வித்தை காட்டி அசத்தினார்கள்.

இப்போது ஷங்கர் இயக்கும் முதல்வன் படத்திலும் கம்பியூட்டர் கிராபிக்ஸ் விஷமம் உண்டு.

பாடல்காட்சி ஒன்றில் அர்ஜுனும், மனிஷாவும் ஆடும் போது, மணிவண்ணன், ரகுவரன், விஜயகுமார், வடிவேலு, கொச்சி அனிபா ஆகியோர் இடையே தலைநீட்டி காதலர்களை பயமுறுக்கிறார்கள்.

இக் காட்சியில் பயமுறுத்தும் அந்த ஐந்து பேரையும் மனிதத் தலையோடும் பாம்பு உடலோடும் காண்பித்துள்ளார் ஷங்கர்.

## மும்பாய் இறக்குமதி

முரளி, ரோஜா இணைந்து நடித்துவரும் படம் 'ஊட்டி'. இப்படத்தில் கலக்க கவர்ச்சிக் கன்னி ஒருவரை மும்பாயில் இறக்குமதி செய்து ஆட வைத்துள்ளனர்.

இந்தி 'குப்த்' படத்தில் நடனமாடி இந்திப் பட ரசிகர்கள் மனதில் குப்பென்று தீப்பற்ற வைத்தவர் பானு. அவர்தான் 'ஊட்டி' படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் கலக்கோ கலக்கென்று கலக்கியிருக்கிறாராம்.

ஒரு பாடல் காட்சிக்கு மட்டும் அம்மணி வாங்கிய சம்பளம் இந்திய மதிப்பில் ஒன்றரை இலட்சம்.



www.padippakam.com

## வாழ்க மலை!

என்னடா பேய் மகனே இன்னம் விளங்கலையா?
சொன்னாரே மலை என்று தூய சமாதான நகர்!
போடா போய் நீராடு! புத்தாடையும் போட்டு
வாடாமாப் பிள்ளையென, வருவார் மணமகளிர்!

கொண்டாட வேணுமடா, கூத்துண்டு-பாட்டுண்டு!
திண்டாடும் அகதியெலாம் தெருப்பக்கம் வாராமல்
வீட்டோடிருக்கட்டும்! வீடியோப் படமெல்லாம்
காட்டினால் அகதிகளை களங்கமாய்ப்
போய்விடலாம்?

பெரும்போர் தொடரட்டும்! பிணங்கள் கருகட்டும்!
பெருங்காயக்காரரெலாம் பேசாமல் தூங்கட்டும்!
தானத்தில் முக்கியமே சமாதானம்- அதுவந்தால்
மானத்தை விற்றேனும், மதி அடகு வைத்தேனும்
வரவேற்போம், வாழ்கமலை! வைத்தோரும்
வாழ்ந்திடுக!
தரமான சமாதானம் தந்தால் அதை வாங்கிப்
பக்குவமாய் வைத்துப் பாதுகாத்திடுவதுவே
தக்கதடா, சமயத்தைத் தப்பவிடவேண்டாம், போ!

'மலைப் புலவன்'

## தோற்பதற்காகப் போர்



காசிலில் புகுந்து கொண்டதுபோல
என் இதயச் சுவருக்குள்
புகுந்து கொண்டவளே!
⌘⌘
நான் வல்லரசாய்
இருந்தால் படை நடத்தலாம்
உன்னிடம்
என் வளமெல்லாம்
இழந்ததால்
சிற்றரசாகிவிட்டேன்!
⌘⌘
உன் கண்கள்
சுடும் தூரத்தில்
நான் இருப்பதால்
தாக்குதல் நடத்த
முடியவில்லை
தற்காப்புத் தேடுகிறேன்!
⌘⌘
மலைகள் கொண்ட
அரணில் நீயிருப்பதால்
முன்னேற முடியாது
இதயம் விழுந்து
கூந்தலில் சிக்கிக்
கொள்கிறது!
⌘⌘
உன் புன்னகை
பனி மழையில்
நனைந்ததால்
என் இமைக் குழந்தைகள்
ஜலதோஷத்தில்
தூங்க மறுக்கின்றன!
⌘⌘
உன் தாக்குதலின்
வேகத்தில் காயப்பட்ட
இதயப் பேனாவிலிருந்து
கவி வடிகிறது.
மனமோ இன்பத்தில்
வலிக்கிறது!
⌘⌘
அதற்காக போர் நிறுத்தம்
கேட்கவில்லை;
போர் நடக்கட்டும்
முடிவில் நான்
தோற்கட்டும்!!

பி.சி. அன்ரன், மட்டுநகர்.

## தேன் கிண்ணம்

### மரங்களைக் காப்போம்!

மரங்கள் தறித்து
மாடிகள் கட்டி
மின்விசிறி பூட்டி
குளிரூட்டியும்
வைத்தோம்!
வெப்பம் தணியுதில்லை
வெயில் குறையுதில்லை!

பக்கம் நாலும்
வேலி கிளறி
சுற்றுச் சுற்றாய்
ஆறடி மதிலும்
கட்டி
அருகிலே
பிளாஸ்டிக்
பூச்சாடி வைத்தோம்!
கண்கள் குளிருதில்லை
காற்று வீசுதில்லை!

மின்சாரம் நிற்கும்போது
மூச்செடுக்க
காற்றில்லை;
முன்னைப்போல
மரங்களின் கீழே
ஓலைக் குடிலில்
ஒய்யார வாழ்வு
வாழ்ந்திருக்கலாம்!
மூளையில் உண்மை
உறைக்குது இப்போ!

மரங்களை அழித்து
ஒரு கணத்தில்
மாளிகை சமைத்தோம்;
மாளிகை இடித்து
ஒரு பொழுதில்
மரங்களை வளர்ப்பது
முடியுமா?

ராதா, வவுனியா.

## யார் இவர்?



மோனலிசாவின் புன்னகை உலகப் புகழ் பெற்றது. மோனலிசா போல தங்களை கற்பனை பண்ணிக்கொள்ள யாருக்கும் தடையில்லைத்தானே. இங்கு மோனலிசாபோல ஒப்பனை செய்திருக்கும் கற்பனை சுந்தரி யார் தெரிகிறதா? இவர் ஒரு பிரபல நடிகை. கண்டு பிடித்தவர்களும், பிடிக்காதவர்களும் செல்க 18ம் பக்கம்.

## சிரட்டை தேடிய சீவன்

ஊரெல்லாம் பொடியன்கள்
ஜடன்டியோட திரியுது
பாரெல்லாம் காணாப்புதுனம்
தேனகத்தில் நடக்குது.

ஆளுநர் வாறாராம்
அடிசக்க நம்மூராயிது...?
பாழடைந்த நகரப்பார்க்க
அதிகாரிகள் வாறாங்களாம்.

அடைந்திருந்த குப்பையெல்லாம்
ஆளுநர் வரவோட காணோம்!
நடை பாதையெல்லாம் மாலைவரை
பெயின்ற் குளிப்பில் குதூகலம்.

பள்ளி யெல்லாம் சுற்றி நிண்டும்
பார்த்த இடம் சாணுக்கொண்டும்-இன்னும்
அள்ளி யள்ளி பச்ச பஸ்சில்
பாய்ந்திறங்குது ஆமி; பொலிஸ்

பாத நடுவே பலகைபோட்டு
பலகையில் எழுதிவெச்சி
பாதை மாற்றிப்போகவிட்டு
ஆளுநரைப் பாதுகாப்பு!

நல்ல நாள் சகுனம் பாத்து
கல்லுவைப்பர்- நம் வழக்கம்
சமயம் பாதது கல்லுவைத்த
வெபர் அரங்கும் பருக்குமோ?

இரண்டு நாள் நாயகன்
இனியும் வேண்டாமப்பா
ஆளுநரைப் பாரகமுன்னம்
அரைச்சீவன் போகிறது.

தருமசுந்தரம் துஷ்யந்தன்,
மட்டக்களப்பு.

## மீண்டும் வருமா?

கிழிந்துபோன கிராமமும்
இடித்தழித்த இயற்கையும்
இழந்துவிட்ட சுதந்திரமும்
மீண்டு வருமா?
•••
கலைந்து சென்ற
உறவுகளும்
சிதைந்த வாழ்வும்
சீராக்கப் படுமா?
•••
உயிருக்கு அஞ்சி
உருக்குலைந்த எனதூர்
மீண்டும் உயிர்த்தெழுமா?
•••

தி.ரமணி-வவுனியா.

## பேனா நண்பர்கள்



பெயர்:
ஏ. டிறோம் றோக்ஸன்
வயது: 20
முகவரி:
151/9, ஜெம்பட்டா வீதி,
கொழும்பு-13.
பொழுது போக்கு:
பத்திரிகை வாசித்தல்.



பெயர்:
என். தேவி.
வயது: 26
முகவரி:
21/1, பள்ளஞ்சேனை தெற்கு
கொச்சிக்கடை.
பொழுது போக்கு:
முத்திரை சேகரித்தல்.

பெயர்: எஸ். சதாத்
வயது: 20
முகவரி:
354/7, ஹிஜ்ரா வீதி,
முள்ளிப்பொத்தானை,
கந்தளாய்.
பொழுது போக்கு:
பத்திரிகை.



பெயர்: எஸ். கௌரி.
வயது: 17
முகவரி:
சந்தை மேற்கு ஒழுங்கை,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.
பொழுது போக்கு:
பேனா நட்பு, பத்திரிகை.



## நில்-கவனி-முன்னேறு

ஆசையானது மனிதரின் தீய குணம் அல்ல என்று மாண்டெயின் கூறுகிறார். உயர்ந்த மனிதர் தங்களைவிட உயர்ந்தவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து தங்களின் தாழ்ந்த தரத்தை உணர்ந்து தங்களை உயர்த்திக் கொள்ள முனைகிறார்.

ஆனால் அற்ப மனிதர்களோ தங்களை விடத் தாழ்ந்தவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து தங்களைப் பெரிதாக மதித்துக் கொள்கிறார் கள். நாம் இப்போது பெற்றிருக்கும் தன்மையைவிட மேன்மையைப் பெற விரும்பினால், இருக்கும் நிலைமையைப் பற்றி மனக்குறை உடையவர்களாக இருக்க வேண்டும்.

காரணம் நாம் எந்த இடத்தில் மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைந்து விடுகிறோமோ அங்கேயே நிரந்தரமாகத் தங்க நேரிடும். வெற்றி பெற முடியாது. வாழ்வில் ஆசை இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வாழ்வு இனிமையுடையதாக இருக்கும்.



மன நிறைவு கொண்டால் எந்தச் செயலையும் செய்ய முடியாது. மன நிறைவு நூலையோ, காப்பியத்தையோ ஓவியத்தையோ சிற்பத்தையோ செய்யவில்லை என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். இதற்கு மாறாக ஊக்கமும் உற்சாகமும் பேராவலும்தான் பெரும் செயல்களைச் செய்திருக்கின்றன.

உலகில் தோன்றிய பெரியோர்கள் எல்லாம் தங்களுடைய வாழ்க்கையில் கிடைத்த முதல் நிலைமையிலே மனநிறைவு கொண்டோ அல்லது தாங்கள் தொடக்கத்தில் ஆற்றிய செயலில் மனநிறைவு பெற்று இருந்திருப்பின் அவர்களால் பெரிய காரியங்களை ஆற்றி இருக்க இயலுமா?

நாம் செய்த செயலில் மனநிறைவு கொண்டால் வருங்காலத்தில் செய்யும் செயலில் வெற்றியும் புகழும் பெற முடியாது. வருங்காலத்தில் சிறப்பான செயலைச் செய்ய வேண்டும் என்ற ஊக்கம் இல்லாமல் போய் விடும்.

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று கூறி நம்மை நாமே திருப்திப் படுத்திக் கொண்டு நம்முடைய வாழ்க்கையை வீணாக்கிவிடக்கூடாது. 'மனநிறைவு என்பது ஒருவன் தன்னுடைய சோம்பேறித்தனத்தைத் தன் கண்களிலிருந்தும் பிறருடைய கண்களில் இருந்தும் மறைப்பதற்காகப் போடும் திரை' என்கிறார் கோல்டன் என்ற அறிஞர். மனநிறைவு திரையை போட்டுக் கொண்டு வாழ்வதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்? மனநிறைவு என்று கூறி முழங்காலைக் கட்டிக் கொண்டிருப்பதில் என்ன லாபம்? தீர்க்கமான ஆசை கொண்டு அதனை அடைந்தே தீருவது என்று விடாப் பிடியாகச் செயலாற்றும் பொழுது இடையில் ஏற்படும் இடர்பாடுகளை எண்ணி மலைத்து நிற்காமல் தொடர்ந்து சென்றால் வெற்றி உறுதி.

இதற்கு மாறாக நமக்குக் கிடைத்ததில் மகிழ்ச்சியுடன் நிறைவு பெற்றுவிட்டால் மேற்கொண்டு வெற்றியை எப்படிப் பெற முடியும்? உலகில் ஏற்படும் துன்பங்களுக்கு எல்லாம் காரணம் என்னவாக இருக்க முடியும் என்று ஓர் அறிஞரிடம் கேட்டவுடன்- அவர் கூறினார், "ஒரே எட்டில் உச்சியை அடைந்துவிட வேண்டும் என்று மனிதர்கள் ஆசைப் படுவதுதான்" என்று இது உண்மையே! எப்படியென்றால் படிப்படியாக வெற்றி பெற்று முன்னேற்றம் காண வேண்டும் என்ற விருப்பம் கொள்ளாமல் ஒரேயடியாக முழு வெற்றியும் முதலிலேயே பெற்று விட வேண்டும் என்று அடங்காத ஆசை தான் காரணம்.

அதனால்தான் எமிலி ஜோலா கூறுகிறார், "ஒருவன் பெருவாழ்வு வாழ ஆசை கொள்ளலாம். ஆனால் தான் எழுந்து நின்று பெருவாழ்வை நோக்கிப் பறக்கும் காலம் வரும் வரையில் தன்னை அதற்காகத் தயார்படுத்திக்கொண்டு இருக்க வேண்டும்!"

நம்மைவிட தாழ்ந்தவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து பெரிய மனிதர்களாகக் கொள்ளக்கூடாது. நம்மைவிடப் பெரியவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து தாழ்த்த தன்மையை அறிந்து உயர்த்திக் கொள்ள வேண்டும்.

நம்மைவிட தாழ்ந்தவர்களைப் பார்த்து அளவுக்கு மீறிய மனநிறைவு பெற்றுவிட்டால் அது மமதையாக மாறிவிடும். நாம் எதைப் பற்றியிருக்கின்றோமோ அதைப பற்றி மனநிறைவு என்றால் முயற்சி செய்யாமல் சும்மா உட்கார்ந்து கொண்டிருப்பது அல்ல. ஏக்கம்,சோர்வு ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் முயற்சி செய்வதுதான்.

## இந்தவாரம் உங்கள் பலன்

17.10.99 முதல் 23.10.99வரை

ஜோதிடர் 'கர்ணா'

**மேடம்:**
மாற்ற பலம் வக்கிரகிப்பதால் எதிர்பார்த்தவை தடுமாறும். மனதில் சிக்கல் தோன்றும். பண விரயமும் வீண்பழி கேட்டலும், பயணம் முற்று பெறாது இடைநடுவில் சிக்கலும் பலமுடக்கங்களும் காணப்படும். அச்சுவினிப் பெண்களுக்கு ஏமாற்றங்கள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: வெள்ளை: எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 20, 22.

**இடபம்:**
யோகஸ்தானபலம் சனியுடன் இயங்குவதால் நோய்துன்பங்கள் குறைவடையும். பலமான முயற்சிகள் தொடரும். தொழிலில் போட்டி ஏற்படும். நீண்ட நாள் உறவினர்கள் சந்திப்பார்கள். பல வசதிகள் என்பன உருவாகும். ரோகிணி, மிருகசீரிடக்காரர் வசதிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: பச்சை: எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 18, 21.

**மிதுனம்:**
அத்த கிரக பல மாற்றத்தால் தொழில் நிலை சீராக அமையும். உயர்வான செயற்பாடுகளும், பலரின் ஒத்துழைப்புக்கள் உதவிகளும் காணப்படும். கல்வி, பயிர் செய்கை சீராக அமையும். விவாகப் பேறுகள் கைகூடி வரும். பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரமாக அமையும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்: எண்: 05
அதிஷ்ட திகதிகள்: 20, 23.

**கடகம்:**
அர்த்தஷ்ட பார்வையினால் பலகால பிரச்சனைகள் தொடரும். ஆலயத்தரிசனமும், முயற்சிகள் பல விடயங்களில் ஏற்படுதலும், நண்பர்கள் உறவினர்கள் சந்திப்பதும் இடம்பெறும். வார இறுதியில் சிக்கலகள் குறைந்து கும்பராசிக்காரரால் உதவிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்: எண்: 02.
அதிஷ்ட திகதிகள்: 21, 22.

**சிம்மம்:**
பல நாட்கள் எடுத்த முயற்சி வெற்றி. தொழில் தொடர்பான விடயங்கள் வேகமாக நடைபெறும். பணவரவும் பொருளாதார முன்னேற்றமும் காணப்படும். பூர, உத்தரகாரருக்கு யோகமான நிலை உருவாகும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: மருண்: எண்: 01.
அதிஷ்ட திகதிகள்: 23, 19.

**கன்னி:**
வியாழன் வக்கரித்த நிலையில் களத்திரபலம் நன்றாக உள்ளதால் புதிய வாழ்வும், திருமண முயற்சிகள் ஆடை, ஆபரணச் சேர்க்கைகள், உறவினர்கள், சந்திப்பு பல நாட்கள் எதிர்பார்த்த வெற்றியும் கைகூடும். அத்த, உத்தரக்காரர் சந்தோஷமடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: இளம்பச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 21, 23.

**துலாம்:**
உடலில் களைப்பு, சோர்வு என்பன தோன்றும். குடும்பத்தில் நன்மையான கருமங்கள் திட்டமிடப்படும். எதிர்பார்த்த பல விடயங்கள் சீர்பெறும். சுவாதி, சித்திரை நட்சத்திரப் பெண்கள் வசதிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: றோஸ்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 21, 23.

**விருட்சிகம்:**
தூர இடப் பயணம் அலைச்சல் தரும். பிள்ளைகளின் உதவியும் பல முன்னேற்றமான செயல்பாடுகளும் அமையும். எதிர்பார்த்த விடயம் சீர்பெறும். விவசாயம், தொழில் நிலை சீராகக் காணப்படும். கேட்டைக்காரருக்கு வெளிச்சமான காலநேரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 23, 22.

**தனுசு:**
பெரியோரால் கௌரவம் கிட்டும். பயண வெற்றிகளுக்கு இடமுண்டு. தாய்வழி உறவினர்களின் உதவிகள் கிடைக்கும்பணம், தொழில் வசதிகள் பெருகும். உத்திராடக்காரருக்கு யோகமான நேரமாக அமையும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: இளநீலம்: எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 20, 21.

**மகரம்:**
மனதில் ஏமாற்றம். எடுத்த விடயங்கள் முற்றாகத் தடைப்படும். பயண விடயங்கள் சிக்கலடையும். பணப்பிரச்சனைகள் சிக்கலாக உருவாகும். இருப்பிட அமைப்பு வீடுவாசல் மாற்றம் ஏற்படும். திருவோண, அவிட்டக்காரப் பெண்கள் தடைகளை சந்திப்பார்கள்.
அதிஷ்ட நாட்கள்: ஞாயிறு, சனி.
அதிஷ்ட நிறம்: கறுப்பு; எண்: 08.
அதிஷ்ட திகதிகள்: 17, 22.

**கும்பம்:**
வைத்தியச் செலவும் அலைச்சலான நிலையும் பண விரயமும் ஏற்படும். மனதில் திருப்தியற்ற நிலை இருக்கும். தொழில் முயற்சிகளும் கல்வி முன்னேற்றமும் வார இறுதியில் ஏற்படலாம். சதய, பூரட்டாதிக்காரருக்கு பயண, வைத்தியச் செலவுகள் கூடும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், செய்வாய்.
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 18, 20.

**மீனம்:**
சகோதரர்களின் பண உதவி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். முக்கிய விடயங்கள் வார நடுப்பகுதியில் கைகூடும். எதிர்பார்த்த தூர இடப் பயணம் நடைபெறும். உத்திரட்டாதி, ரேவதிக்கு, பொற்காலமானதாகும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்: எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 19, 21.



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கர்ப்பிணிகள் கவனிக்கவும்



கர்ப்பிணிப் பெண்கள் செருப்பு அணிவதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். எப்படி என்கிறீர்களா?

- 'ஹீல்ஸ்' குறைந்த செருப்புக்களே ஏற்றவை. குதிகால் உயரம் செருப்பில் அதிகம் இருந்தால், அதை அணியும் கர்ப்பிணிப் பெண்ணின் இடுப்பு மற்றும் குதிகாலுக்குப் பாதிப்பு ஏற்படும்.
- செருப்பின் 'சோல்' கெட்டியானதாக இருக்க வேண்டும். கெட்டியாக இருந்தால்தான் நடக்கும்போது சரியாக 'பலன்ஸ்' கிடைக்கும்.
- பாதத்தில் நடுப்பகுதியைத் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கும் செருப்புக்கள் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்றவை. ஏனென்றால் கர்ப்பிணிப் பெண்கள் காலை அழுத்தி நடக்கும்போது செருப்பின் அப்பகுதி வளையக்கூடாது.
- எளிதாக அணியவும், எளிதாகப் போட்டுக் கொள்ளவும் வசதியான 'ஸ்லிப் ஒன்' பாதணிகள் கர்ப்ப காலத்திற்கு ஏற்றவை. குனிந்து செருப்பைப் போடுவது, கட்டுவது போன்றவை கர்ப்பிணிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும்.
- குளிர் காலத்தில் பெண்கள் 'சொக்ஸ்' அணிந்தும் செருப்புக்களைப் போட்டுக் கொள்ளலாம்.
- கால்களுக்குப் பாதுகாப்பு உள்ள வீடுகள், அலுவலகங்களில் செருப்பு இல்லாமல் நடக்கலாம். அதன் மூலம் கால்களுக்கு அதிக இரத்த ஓட்டம் கிடைக்கும். பாதத்தின் தசைகளுக்கும் அது வலுவை ஏற்படுத்தும்.

## பெண்களும் புற்றுநோயும்

உலகிலேயே பெரும்பாலான பெண்களை அதிகமாகத் தாக்கும் நோய்கள் மார்பகப் புற்றுநோயும், நுரையீரல் புற்றுநோயும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. 35 வயதிலிருந்து 50 வயதிற்குட்பட்ட பெண்களுக்கு இந்த நோய் வரும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வாழும் சூஸன் மாஸ் என்ற பெண் கான்ஸர் நோயின் அறிகுறி தெரிந்த உடனேயே அதனை வெல்ல தனது வாழ்க்கை முறை, உணவுப் பழக்க வழக்கம் போன்றவற்றை மாற்றிக் கொண்டார்.

தியானம், உடற்பயிற்சி, அளவான உணவு போன்ற முறைகள் மூலம் புற்றுநோயை இவர் கட்டுப்படுத்திக் காட்டினார்.

தனக்கு வந்த மார்பகப் புற்றுநோயை இந்த முறைகள் மூலம் எவ்வாறு வெற்றி கொண்டார் என்பதை ஒட்டாவா நகரில் நடந்த சர்வதேச புற்றுநோய்க் கருத்தரங்கில் அவர் விளக்கினார்.

## எரிபொருள் சிக்கனம்



சமையல் செய்யும்போது எரிபொருளைச் சிக்கனப்படுத்த என்ன வழி?

- அரிசி நன்றாகக் கொதித்து 5 நிமிடம் ஆனதும் தீயை அணைத்து விட்டு பாத்திரத்தை நன்றாக மூடி வைத்து விடுங்கள். அப்படியே இருந்தால் அரிசி நன்றாக வெந்து சோறாகி விடும். அப்படி வேகாவிட்டாலும் மீண்டும் ஒரு 10 நிமிடம் லேசான தீயில் வைத்தால் வெந்துவிடு.
- சம்பா அரிசியைச் சமைக்கும் முன்னால் மூன்று மணி நேரம் தண்ணீரில் ஊற வையுங்கள்.
- அரிசியை தண்ணீரில் கொட்டிப் பிசைந்து பிசைந்து கழுவ வேண்டாம். இரண்டு முறை தண்ணீர் கொட்டி அரிசியைக் கையால் கிளறிக் கழுவினாலே போதும்.
- தண்ணீர் நன்றாகக் கொதித்த பின்பே அரிசியைக் கொட்டவேண்டும்.
- அரிசியை வேக வைக்க அடுப்பில் தண்ணீர் வைத்து நெருப்பைப் பற்ற வைக்கும் போது மேலே இன்னொரு பாத்திரத்திலும் தண்ணீர் வையுங்கள். கீழே இருக்கும் தண்ணீர் கொதிக்கும்போது மேலே இருக்கும் தண்ணீரும் நன்றாகச் சூடாகிவிடும். அந்தச் சுடுநீரை மீண்டும் சிறிது நேரம் கொதிக்க வைத்து குடிநீராகப் பயன்படுத்தலாம்.
- அரிசி நன்றாக வேகும் முன்னால் இறக்கி வைத்து விட்டு எங்கேயாவது செல்ல வேண்டியது இருந்தாலும் கவலை இல்லை. திரும்பி வந்ததும் அரைகுறையாக வெந்த சோற்றில் 2கப் தண்ணீர் விட்டு லேசான தீயில் அடுப்பில் வையுங்கள். மீண்டும் படபடவென கொதிக்கும்போது இறக்கி விடுங்கள்.
- பிரஷர் குக்கரில் அரிசியை வேக வைத்தால் எரிபொருள் சிக்கனமாகும்.
- அரிசி கொதிக்கும்போது ஒரு சிட்டிகை மஞ்சள் தூள் தூவுங்கள். உலை கொதித்து வெளியே வழியாது.
- ஃபிரிட்ஜில் இருக்கும் சோற்றை சூடாக்க வேண்டுமானால், அதனை இரண்டு மணிநேரத்திற்கு முன்பே ஃபிரிட்ஜில் வைத்த சோற்றை ஃபிட்ஜில் இருந்து வெளியே எடுத்து விடுங்கள்.
- ஃபிரிட்ஜில் இருந்து எடுத்துச் சூடாக்கிய சோற்றை மீண்டும் ஃபிரிட்ஜில் வைக்கக் கூடாது. தேவைக்கு மட்டும் எடுத்துச் சூடாக்குங்கள்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GO

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: **23-10-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# வழங்குவது 12 புவனா
# மோனிக்கா என் மோனிக்கா

போட்லண்ட் பல்கலைக்கழகத்தில் மோனிக்காவின் நெருங்கியதோழி கத்தரீன் ஆல்டே டேவீஸ்.

மோனிக்காவின் மனத்துயரத்தைப் போக்குவதற்கு கருத்தரங்குக்குச் அழைத்தாள் டேவிஸ்.

மோனிக்காவும் அவளது அழைப்பை ஏற்றுக் கருத்தரங்குக்குச் சென்றாள். அங்கு ஒருவருக்கான நுழைவுக்கட்டணமாக 40 டொலர் அறவிட்டனர்.

பாலியல் உறவு பற்றிய உரை என்பதால் இளம் பெண்களும், இளைஞர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். நடுத்தர வயதினரும் வந்திருந்தனர். மண்டபம் நிரம்பி வழிந்தது.

உரையாற்றிய நிபுணர் நடுத்தர வயதைத் தாண்டியிருந்தார். அவரது உரை சுவாரசியமாக இருந்தது.

'இளமைப் பருவத்தினர்தான் சிநேகமான துணையைத் தேடத்தக்கவர்கள். நடுத்தர வயதினரும், வயதானவர்களும் ஒரு பக்கத் துணையை மட்டும் தேடிக் கொள்வார்களே தவிர, பாலியல் உறவுக்கு ஏற்ற ஒரு துணையைத் தேடுவது நல்லதல்ல!' என்று அந்த நிபுணர் அறிவுரைகளைக் கூறிக்கொண்டிருந்தார்.

மோனிக்கா அவர் கூறிய அறிவுரைகளை உன்னிப்பாகச் செவிமடுத்தாள். கருத்தரங்கு முடிந்த பின்பாக அந்த நிபுணருடன் தனியாக உரையாட விரும்பினாள்.





அவளைப் போலவே வேறு பலரும் காத்திருந்தமையால் மோனிக்காவால் தன் எண்ணத்தை நிறைவேற்ற முடியாமல் போனது.

பிறிதொரு நாளில் அந்த நிபுணரைச் சந்திக்க முயற்சிக்கலாம் என்று மோனிக்காவின் தோழி கூறியதால் மோனிக்கா சந்திக்காமலேயே திரும்ப வேண்டியிருந்தது.

போட்லண்ட் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் அடிக்கடி சுற்றுலா செல்வார்கள். அந்தச் சுற்றுலாக்களை மோனிக்கா மிக விரும்பினாள். இயற்கையை இரசிப்பதும், புதிய காட்சிகளைக் காண்பதுவும் மோனிக்காவுக்கு விருப்பமான பொழுதுபோக்குகள்.

அதனால் சுற்றுலா என்றால் மோனிக்கா முன்னால் நிற்பாள். ஏற்பாடுகளுக்கு உதவுவாள். இந்தச் சுற்றுலாக்களால் மோனிக்காவின் செக்ஸ் ஆர்வம் தணிந்திருந்தது.

மனதை வேறு திசையில் திருப்பி, பழைய கசப்பான உறவுகளை மறந்து-துறந்துவிடலாம் என்றுதான் மோனிக்காவும் விரும்பினாள்.

ஆனால் அந்த விருப்பத்துக்கு விடப்பட்ட சோதனையாக அவள் கரம் தேடி வந்தது பிளேய்லரின் கடிதம்.

'மோனிக்கா! உன்னை நான் சந்திக்க வேண்டும். சந்தித்தேயாக வேண்டும். தயவு செய்து மறுத்துவிடாதே. நீ இங்கு வர வேண்டாம். நானே அங்கு வந்து சேருகிறேன். எப்போது எவ்விடத்துக்கு வர வேண்டும் என்று மட்டும் தொலைபேசி ஊடாக தெரிவித்துவிடு. உன் நினைவுகள் என்னை சூறைக்காற்றாக பிடித்தாட்டுகின்றன. நீ மறுத்தால் இந்தக் காற்றில் என் உயிரும்கூட அள்ளுப்பட்டுப் போய்விடலாம்.' என்று பிளேய்லர் உருக்கமான வார்த்தைகளை கடிதத்தில் கோர்த்திருந்தான்.

மோனிக்காவுக்கு அக் கடிதத்தைக் கண்டது முதலே இருப்புக் கொள்ளவில்லை. அவள் மன உறுதியை ஒரு உலுப்பு உலுப்பி விட்டது அக் கடிதம்.

இது பற்றி அன்று இரவு தன் தோழியிடம் கூறினாள் மோனிக்கா. அவளோ "பிளேய்லரை நீ மறந்துவிடுவதே நல்லது. உனக்கு ஆண் துணை தேவையானால் உன் வயதை ஒத்த நண்பனைத் தேடிக்கொள். பிளேய்லர் எவ்வளவு தான் கெட்டிக்காரனாக, உன் விருப்பமறிந்து நடந்து கொள்கிறவனாக இருந்தாலும், இந்த உறவு எப்போதோ அறுபடப்போகும் உறவு தானே? அதனால் இப்போதே வெட்டி விடுவதுதான் நல்லது!" என்று யோசனை கூறினாள்.

மனம் ஒரு குரங்கு என்பது மோனிக்கா விஷயத்தில் சரியாகவே இருந்தது. தோழியின் யோசனையை ஏற்றுக் கொண்டு இரவு தூங்கிய மோனிக்கா, மறுநாள் காலை எழுந்ததும் பிளேய்லருக்கு போன் செய்து பேசினாள்.

பிளேய்லரை உடனே புறப்பட்டு வருமாறு கூறிவிட்டாள். பிளேய்லர் அதற்காகவே காத்திருந்தவனாக மறுநாளே மோனிக்கா முன்பாக ஆஜராகிவிட்டான்.

இருவரும் சேர்ந்து சுற்றினார்கள். பிளேய்லருக்கும் அவளைப் பிரிவதற்கு மனமில்லை. "நீ இங்கேயே தங்கிவிடேன்!" என்று கூறினாள் மோனிக்கா.

"தங்கலாம்தான். செலவுக்குப் பணம் தேவையல்லவா? வேலைக்கு எங்கே போவது?" என்று கேட்டான் பிளேய்லர்.

"நான் வாங்கித் தருகிறேன் வேலை!" என்றவளை நம்பாமல் பார்த்தான்.

"இந்த மோனிக்கா நினைத்தால் எதுதான் நடக்காது. நடக்கும்!" என்றாள். நடத்தியும் காட்டினாள்.

மோனிக்கா கல்லூரியில் படித்தபோது அங்கு முக்கிய பொறுப்பில் இருந்த டேவிட் பிளிஸ் அப்போது போட்லண்டில் தனியாக ஒரு நிறுவனத்தை நடத்தி வந்தார்.

அவருக்கு 55 வயது இருக்கலாம். மோனிக்காமீது அப்போதே சபலப் பார்வை வீசுவார். கல்லூரி மாணவிகளிடையே அவரது சபலப் புத்தி பற்றி கேலிகள் உலாவும்.

சில மாணவிகள் வேண்டுமென்றே அவரைச் சீண்டிவிடுவார்கள். நெருக்கமாவது போல பேசி அவரை அசடு வழிய வைப்பார்கள்.

### என்ன தேவை

மோனிக்காவை போட்லண்டில் கண்டதும் அவருக்கு கொள்ளைச் சந்தோசம். "அடிக்கடி இந்தப் பக்கம் வந்துவிட்டுப்போ. நீ என்ன தேவையானாலும் என்னிடம் கேட்கலாம்!" என்று ஒருமுறை கூறினார்.

மோனிக்கா குறும்பாக, "இந்தக் கடையை என் பெயரில் எழுதித் தருவீர்களா?" என்று கேட்க, அவர் ஒருவிதமான தீவிரத்தோடு, "ப்பூ இவ்வளவுதானா? என் சொத்து முழுவதையும்கூட உனக்காகத் தருவேன். நீ எனக்கே எனக்காக சம்மதித்தால்!" என்று கண்சிமிட்டினார்.

மோனிக்கா சிரித்துவிட்டுப் போனாள். அதன்பின்னர் இப்போதுதான் அவரிடம் சென்று பிளேய்லருக்காக ஒரு வேலை கேட்டாள்.

மோனிக்கா கேட்பதை கொடுக்காமல் இருப்பாரா? கொடுத்தார். அவள் நன்றி சொன்னபோது "நன்றி வேண்டாம். எது வேண்டுமோ அதை ஒருநாள் கேட்பேன்; மறுக்காமல் தந்தால் போதும்." என்றார்.

வேலை உறுதியானதும் அறிவிக்குமாறு கூறிவிட்டு பிளேய்லர் திரும்பிப் போயிருந்தான்.

அதனால் அவனுக்கு வேலை கிடைத்த தகவலை அறிவிக்க மோனிக்கா ஒரு தந்திரம் செய்தாள்.

கடிதம் பிளேய்லரின் மனைவியிடம் கிடைத்தால்கூட அவளை நம்பவைக்கும் விதமாக டேவிட் பிளிஸின் நிறுவனத்துக்குரிய கடிதத் தலைப்பை பயன்படுத்தி, "வேலை தயார். உடன் புறப்பட்டு வரவும்!" என்று எழுதி, டேவிட் பிளிஸ் என்று தானே கையொப்பமும் போட்டு அனுப்பிவைத்தாள்.

### கள்ளக் கையெழுத்து காட்டிக் கொடுத்தது

கடிதம் பிளேய்லரிடமோ, அவனது மனைவியிடமோ சேரவில்லை. அவர்கள் இருவரும் அப்போது வேறு நகர் ஒன்றுக்கு ஜோடியாகச் சென்றிருந்தனர்.

இதனால் கடிதம் திரும்பிவந்து, அனுப்புவோருக்கான முகவரியிடப்பட்டிருந்த டேவிட் பிளிஸிடமே சேர்ந்துவிட்டது.

கடிதத்தை உடைத்துப் பார்த்த டேவிட் பிளிஸ் திகைப்படைந்தார். உடனே மோனிக்காவை போனில் அழைத்தார். "அவசர விஷயம் உடனே என் கடைக்கு வா!" என்றார்.

அப்போது நேரம் இரவு ஏழுமணி. டேவிட் தன் ஆசை தாங்காமல் அழைக்கிறாராக்கும் என்று கருதிய மோனிக்கா "நாளை மதியம் வருகிறேன். இப்போது இங்கிருந்து புறப்பட முடியாது!" என்று கூறினாள்.

"அப்படியானால் எனக்கென்ன? டேவிட் பிளிஸ் என்ற பெயரில் நீ கடிதம் எழுதியதை பொலிசில் கூறிவிடவேண்டியது தான்!" என்றார்.

மோனிக்கா திகைப்படைந்தாள். பொலிஸ் என்றதும் பயந்துபோனாள். "இதோ இப்போதே நான் புறப்பட்டு வருகிறேன்!" என்றாள்.

### கிறக்கம்

அடுத்த பத்தாவது நிமிடம் டேவிட் முன்பாக நின்றாள் மோனிக்கா. இறுக்கமான ஜீன்ஸ், இறுக்கமான சட்டையில் நின்றவளை கிறக்கமான பார்வை பார்த்தார் 55 வயதான டேவிட்.

நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள் அனைவரும் போய்விட்டனர். வெளியே காவலர் மட்டும் இருந்தார்.

மோனிக்காவை உள்ளே தனது அறைக்குக் கூட்டிப்போய் கடிதத்தைக் காட்டினார். "உன் எழுத்துத்தானே?" என்றார். மறுக்காமல் மோனிக்கா தலையசைக்க, "இத்தனை தூரம் உரிமை எடுத்துக் கொண்டு என் கையொப்பத்தை நீயே போட்டிருக்கிறாயே!" என்றார்.

மோனிக்கா ஒரே பூாய்ச்சலாக நடிப்புக்குள் பாய்ந்தாள். "ஏன் எனக்கு உரிமை இல்லையா?" என்று கொஞ்சுவதுபோலக் கேட்டாள்.

"இருக்கிறது. அதுபோல எனக்கும் உன்னிடம் உரிமை இருக்கிறதா? இல்லையா?" என்று கேட்டார். மோனிக்காவுக்கு அவர் எங்கே வருகிறார் என்பது தெரிந்துவிட்டது.

"ஏன் இல்லாமல்?" என்றாள்.

அவர் அங்கிருந்த விசாலமான சோபாவில் அமர்ந்துகொண்டு, "அப்படியானால் இங்கே வா டியர்!" என்று அழைத்தார்.

மோனிக்கா எதற்கும் தயாராய் அவர் அழைப்புக்கு ஏற்ப கிட்டப் போனாள்.

(வருவாள்)



## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## கல்லாறு வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | ஏ.மங்கயற்கரசி, பெரியகல்லாறு-1, கல்லாறு. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.






சக்தி தனக்கே கருவி யாக்கு-தோள்
சக்திபெற்று நல்லதொழில் செய்யும்-மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு-எங்கும்
சக்தியருள் மாரிவந்து பெய்யும்!

-சுப்பிரமணிய பாரதியார்.

பாப்பா முரசு சிறுகதை

# நரி வைத்த விருந்து



ஒரு காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. அக் காட்டில் நாரை ஒன்றும் வசித்து வந்தது. நாரையை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டும் என்று நினைத்தது நரி.

ஒருநாள் நாரையைக் கண்ட நரி, "நண்பா! இன்று என் வீட்டில் உனக்குச் சுவையான விருந்து வைக்க எண்ணியுள்ளேன். என் வீட்டுக்கு நீ வரவேண்டும்!" என்று அழைத்தது.

நாரையும் அதன் அழைப்பை ஏற்று நரியின் வீட்டிற்குச் சென்றது. நரி பாயாசம் தயாரித்து இரண்டு தட்டுக்களில் ஊற்றி ஒன்றைத் தனக்கு வைத்துக்கொண்டு, மற்றொரு தட்டை நாரையிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னது.

நரி தட்டில் இருந்த பாயாசத்தை நாக்கினால் நக்கி ருசித்துக் குடித்தது. நாரையோ தனது நீண்ட அலகினால் பாயாசத்தைத் தட்டிலிருந்து குடிக்க முடியவில்லை.

"நாரையே! ஏன் தயக்கம் காட்டுகிறாய்? தயக்கப்படாமல் சாப்பிடு!" என்று கூறியது நரி.

தனக்கு ஏற்பட்ட அவமானத்தை மறைத்துக்கொண்ட நாரை, "நண்பனே! எனக்கு இன்று திடீரென்று வயிறு சரியாக இல்லை. நான் இன்னொரு நாளைக்கு வருகிறேன்!" என்று கூறிவிட்டுப் புறப்பட்டது நாரை.

'நாரையை அவமானப்படுத்தி விட்டோம்' என்று சந்தோஷப்பட்டது நரி. நாரையோ எப்படியாவது நரியைப் பழிக்குப் பழிவாங்க வேண்டும என்று தீர்மானித்துக் கொண்டது.

சில நாட்களின் பின் நரியைக் கண்ட நாரை, "நண்பனே! எனக்கு இன்று பிறந்த நாள். இன்று நீ என்னுடன் விருந்துண்ண வேண்டும்!" என்று கேட்டுக்கொண்டது.

நரியும் நாரையின் அழைப்பை ஏற்று அதன் வீட்டுக்குச் சென்றது. நாரை மிகவும் உயரமானதாகவும், கழுத்துப்பகுதி மிகவும் குறுகியதாகவும் உள்ள இரண்டு ஜாடிகளுக்குள் சுவையான பாயசத்தை ஊற்றி ஒன்றைத் தான் எடுத்துக்கொண்டு, மற்றதை நரியிடம் கொடுத்தது.

பின் நாரை அந்தக் குறுகிய ஜாடியினுள் தன் தலையை விட்டு தன் நீண்ட அலகினால் பாயாசத்தை உறிஞ்சிக் குடித்தது.

ஆனால் நரியினால் அந்த உயரமான ஜாடியை எட்டிப் பார்க்க முடியவில்லை. அத்துடன் அதன் குறுகிய கழுத்துப் பகுதிக்குள் தலையை விடவும் முடியாமல் நரி ஏமாந்து நின்றது.

நாரை அதை நோக்கி ஏளனச் சிரிப்புடன், "என்ன நரியே! எவ்வளவு ருசியாக இருக்கிறது பாயாசம். ஏன் சாப்பிடாமல் இருக்கிறாய்? கூச்சப்படாமல் சாப்பிடு!" என்று சொன்னது.

"இன்று எனக்கு வயிறு சரியில்லை. இன்னொரு நாளைக்குச் சாப்பிடுகிறேனே" என்று கூறியவாறு நரி, நாரையின் வீட்டை விட்டு வெளியேறியது.

**நாம் பிறரிடம் அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொண்டால் மற்றவர்களும் நம்மிடம் அன்புடனும், மரியாதையுடனும் நடந்து கொள்வார்கள். நாம் மற்றவர்களை இழிவுபடுத்தி அவமரியாதை செய்தால் அதே பலன்தான் நமக்கும் கிட்டும்.**

## அதிசயம் - ஆனால் உண்மை!



நோவெட்டரி என்ற ஆங்கிலப் பெண்ணுக்கு அபார மோப்ப சக்தி. வெள்ளி, இரும்பு, பொன் போன்ற உலோகங்களைக் கண்ணைக் கட்டிக் கொண்டு, முகர்ந்து பார்த்தே கண்டுபிடித்து விடுவார். அது மட்டுமன்றி நோயாளிகள் பக்கத்தில் சென்று முகர்ந்து பார்த்தே என்ன வியாதி என்று சொல்லிவிடுவார்.



பிஸ்மார்க் என்பவர் ஜெர்மனியின் தலைமை அமைச்சராக இருந்தவர். இவருக்கும் 3ம் எண்ணுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இவர் 3 பாடசாலைகளில் படித்தார். 3 யுத்தங்களுக்குச் சென்றார். இவருக்கு 3 பட்டங்கள் கொடுக்கப் பட்டன. 3 முறை இவரை கொலை செய்யும் முயற்சிகள் நடந்தன. இவருக்கு 3 குழந்தைகள்.



செவ்விந்தியர்களிடையே ஒரு விநோத பழக்கம் இருந்தது. அவர்களில் யாருக்காவது தடிமன் பிடித்தால் அவரது தலையில் இருந்து 2 முடிகளைப் பிடுங்கி, சாப்பாட்டுடன் சேர்த்து நாய்க்கு கொடுத்து விடுவார்கள். இப்படிச் செய்தால் தடிமன் போய்விடும் என்று நம்பினார்கள்.

## ஏன் தெரியுமா?



குளிர்ப் பிரதேசங்களில் இருக்கும் பாறைகளில் நிறைய விரிசல்கள் விழுந்திருக்கும். இப்படி விரிசல்கள் ஏற்பட என்ன காரணம் என்று தெரியுமா?

காரணம்- பனிக்கட்டிதான். நீர் பனிக்கட்டியாக மாறும்போது விரிவடையும் அல்லவா? பாறை இடுக்குகளில் தேங்கியிருக்கும் தண்ணீர், அதிகக் குளிரினால் பனிக்கட்டியாகிறது. பாறையிலுள்ள நீர் பனிக்கட்டியாகும்போது விரிவடைவதால் ஏற்படும் அழுத்தத்தினால்தான் பாறைகளில் விரிசல்கள் விழ ஆரம்பிக்கின்றன.

பாறைகளைப் பிளக்கின்றது பனிக்கட்டி.

## ஆந்தையின் பார்வை



ஆந்தைக்கு மனிதர்களை விட ஐந்து மடங்கு பார்வைக் கூர்மை உண்டு ஆந்தையின் கண்களில் சிவப்பான ஒரு பொருள் உள்ளது. இது ஆந்தையின் பார்க்கும் திறனுக்குக் காரணமாக இருக்கிறது.

ஆந்தையின் கண்களில் இருக்கும் கருமணிகள், பொருட்களை மிகப் பெரிது படுத்திக் காட்டும் சக்தி கொண்டவை. இதனால் அதன் கண்களில் இருந்து ஒரு நுண்ணிய ஒளிக்கதிர் கூடத் தப்பிக்க முடியாது.

இத்தனை வசதிகள் இருப்பதால்தான் நள்ளிரவில் ஆந்தையால் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **23.10.1999.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 318**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 316

பரிசுக்குரியவர்:
எம். பாத்திம்மா நுஸ்ஹா,
மட்/ அறபா வித்தியாலயம், ஏறாவூர்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சிவபாலசுந்தரம் சகிராம்,<br>புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை. | த. விதுரன்,<br>மட்/ புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. |
| மாணிக்கராசா ஜசோதரன்,<br>விபுலானந்த த.ம.வி., திருகோணமலை. | ஃபர்ஸானா ரவூஃப்,<br>தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. |
| க.ம. பிரியதர்ஷினி,<br>ஹைலண்ட் மத்திய கல்லூரி. ஹட்டன். | இஸ்மத் பானு இக்பால்,<br>முஸ்லிம் வித்தியாலயம், தந்துரை. |
| எம்.ஐ.எம். இர்ஷாத்,<br>நாவின்னை முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம், காலி. | எஸ். ருசிகராஜ்,<br>கதிரேசன் மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி. |
| ஜெ. ஜெரோம் யோசப் கிரிசேந்திரா,<br>திருக்குடும்ப கன்னியர் மடம், கரம்பொன், ஊர்காவற்றுறை. | எம். இஜாஸ்,<br>புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி. |

## அபூர்வ உயிரினங்கள்

உலகில் உள்ள அபூர்வ உயிரினங்கள் இப்போது வேகமாக அழிந்து வருகின்றன. அருகிவரும் இந்த அபூர்வ உயிரினங்களும், அவைகள் வாழும் இடங்களும் வருமாறு:

1. நீலத்திமிங்கிலம்- அண்டாட்டிக் சமுத்திரம்.
2. கறுப்புக்கால் முயல்- வட அமெரிக்கா.
3. இராட்சத பாண்டா கரடி- சீனா
4. கெம்பஸ் ரிட்லி கடல் ஆமை- மெக்ஸிக்கோ
5. ஜாவா காண்டாமிருகம்- தென்கிழக்கு ஆசியா
6. தென்பகுதி நீர்நாய்- அமெரிக்கா
7. உல்லி சிலந்திக்குரங்கு- அமெரிக்கா
8. பறவை இறக்கை வண்ணாத்திப்பூச்சி- பப்புவா நியூகினியா
9. துறவி சீல்- மத்திய தரைக்கடல்
10. யாங்ஷே நதி டொல்ஃபின்- சீனா
11. மேக் பீ ரொபின் குருவி- சீஷெல்ஸ்
12. கலிஃபோர்னியா கழுகு- அமெரிக்கா

## யார் தெரியுமா?

- முதன் முதலாக ஆடும் நாற்காலியைக் கண்டுபிடித்தவர் யார்?
- முதன் முதலாக தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தியவர் யார்?
- முதன் முதலாக இடிதாங்கியைக் கண்டுபிடித்தவர் யார்?
- முதன் முதலாக தெருவிளக்கைக் கண்டுபிடித்தவர் யார்?
- முதன் முதலாக அரசியல் கருத்துப் படத்தினை வரைந்தவர் யார்?
- முதன் முதலாக தெருவைச் சுத்தம் செய்யும் இலாகாவை ஏற்படுத்தியவர் யார்?
- முதன் முதலாக விளம்பரப் படங்களில் படங்கள் போடுவதை அறிமுகப்படுத்தியவர் யார்?
- முதன் முதலாக ஃப்ராங்கிளின் அடுப்பைக் கண்டுபிடித்தவர் யார்?
- முதன் முதலாக செய்தித்தாளை தபாலில் அனுப்பும் முறையைக் கடைப்பிடிக்கச் செய்தவர் யார்?
- முதன் முதலாக அமெரிக்கக் குடியரசுக் கட்சியைத் தொடங்கியவர் யார்?

மேலே உள்ள கேள்விகள் அனைத்துக்கும் விடை:

## ஃபாரோ அரண்மனை



ஃபிரான்ஸ் நாட்டின் மார்செலீஸ் நகர மக்கள் 1860ம் ஆண்டு மூன்றாம் நெப்போலியனுக்கு அன்பளிப்பாகக் கட்டிக் கொடுத்த அரண்மனைதான் ஃபாரோ அரண்மனை.

ஆனால் இந்த அரண்மனை கட்டி முடிவதற்குள் மன்னர் இறந்துவிட்டார். இதனால் அரண்மனை மன்னரின் மனைவி வசமாகியது. அரண்மனையை அரசியிடமிருந்து மீட்க மார்செலீஸ் மக்கள் வழக்குத் தொடுத்தனர்.

ஆனால் வழக்கில் அரசியே வென்றார். பின்னர் ஃபாரோ அரண்மனையை ஆரம்பப் பாடசாலையாக்க அரசியே முன்வந்து அதை மக்களிடம் கொடுத்து விட்டார்.


## முதலில் குதித்தவர்



ஜக் என்ற ஃபிரெஞ்சு நாட்டவர் 1797ல் பாரிஸ் நகரப் பூங்கா ஒன்றில் 80C மீட்டர் உயரத்தில் இருந்து குதித்தார். ஒரு பெரிய பலூனைத் தன் உடலில் உள்ள ஒரு கயிற்றுடன் இணைத்து பலூன் மூலம் இறங்கினார்.

உலகின் முதலாவது பரசூட் குதிப்பு இப்படித்தான் நிகழ்ந்தது. இதன் பின்னர்தான் பரசூட் மூலம் குதிக்கும் வழக்கம் ஏற்பட்டது.

## புதிய கண்டுபிடிப்பு



ஜெர்மன் நாட்டில் ரயில் என்ஜினைத் தயாரிப்பவர்களால் அற்புதமான புகையிரதம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

சக்கரங்கள் இல்லாத இந்தப் ரயில், காந்தப்புலத்தால் உருவாக்கப்படும் காற்றால் 15 மில்லி மீட்டர் உயரத்தில் தண்டவாளத்தின் மேலே மிதந்து செல்லக் கூடியது.

இதுவரை இல்லாத அளவுக்கு அதிவேகமாகச் செல்லக்கூடிய அளவில் அதிவேகமாகச் செல்வதற்காகவே இந்தட் ரயில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு மணித்தியாலத்திற்கு 150 மைல் வேகத்தில் செல்லக்கூடியது.

www.padippakam.com

வர்ணா வியப்பாய் தீபக்கைப் பார்த்தாள்.

"உண்மை கசக்கும்மா...! பரவாயில்லை. இனிக்கிற பொய்யைக் காட்டிலும் கசக்கிற உண்மைகள்தான் எனக்குப் பிடிக்கும். சொல்லுங்க. என்ன உண்மை அது...?"

தீபக் தயங்கி விட்டு மெல்லத் தொடர்ந்தான்.

"நான் ஒரு பெண்ணை உயிருக்கு உயிரா காதலிச்சேன்..."

வர்ணா கேலியாய் புன்னகைத்தாள்.

"ஓ...! காதல் விவகாரமா..! காதலிச்சேன்னு சொல்றீங்க... இப்ப அந்தக் காதல் கிடையாதா...?"

"காதலியே உயிரோடு இல்லாத போது காதல் எப்படி இருக்கும்...?"

"ஏன் என்னாச்சு...? உங்க காதல் விவகாரத்துல ஏதாவது பிரச்சனையா?"

"ஒரு பிரச்சனையும் கிடையாது. ரெண்டு பேர் வீட்லேயும் ஒரே சமயத்துல காதலை டிக்ளேர் பண்ணிக் கல்யாணத்துக்கு சம்மதம் கேட்கலாம்னு நினைச்சிட்டிருந்தோம். பட் எதிர்பாராத விதமா என்னோட பூவிழியை யாரோ கொலை பண்ணிட்டாங்க.."

வர்ணா லேசாய் முகம் மாறினாள்.

"பேர் என்ன சொன்னீங்க பூவிழியா? போன வருஷம் இதே நேரம் எல்லா பேப்பர்ஸிலேயும் பரபரப்பா எழுதப்பட்ட பூவிழியோட மர்டர்தானே நீங்க இப்ப சொல்றது..?

"ஆமா..."

"அந்தப் பெண் கொலை செய்யப்பட என்ன காரணம்..? அவளை யார் கொலை பண்ணினது...?"

"நீ கேட்ட இந்த ரெண்டு கேள்விகளுக்குமே விடை கண்டுபிடிக்க முடியாமே பொலிஸ் திணறிக்கிட்டு இருக்கு.






இன்ஸ்பெக்டர் பலராமன் கடந்த ஒரு வருஷ காலமா பூவிழியோட மர்டரை இன்வெஸ்டிகேட் பண்ணியும் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியலை. கடைசியா பூவிழி ஒர்க் பண்ணின ஆபீஸுக்கு இன்ஸ்பெக்டர் பலராமன் போய் விசாரணை பண்ணினபோது ஒரே ஒரு உபயோகமான தகவல்தான் கிடைச்சுது."

"என்ன தகவல்...?"

"பூவிழியைக் கொலை பண்ண இதே சிட்டியில் இருக்கிற ஒரு பெரிய புள்ளி திரைமறைவிலிருந்து இயங்கியிருக்கார். கூலிப்படையைச் சேர்ந்த ஒரு ஆளை வெச்சு பூவிழியோட கதையை முடிச்ச அந்தப் பெரிய புள்ளி கேஸை பொலிஸ் பார்வையிலிருந்து திசை திருப்புவதற்காக டெலிஃபோன் மூலமாகவே பூவிழியோட ஆபீஸ் ஏ.ஓ. குருமூர்த்தியையும் டைப்பிஸ்ட் அருந்ததியையும் உபயோகப்படுத்தியிருக்கார். இதுக்காக ஒரு பெரிய தொகையும் கை மாறியிருக்கு. பணத்துக்கு ஆசைப்பட்ட குருமூர்த்தியும் அருந்ததியும் கேஸை நல்லாவே குழப்பி இன்ஸ்பெக்டர் பலராமனை அலைய விட்டாங்க!"

"பூவிழியைக் கொலை பண்ணின அந்தப் பெரிய புள்ளி யார்ன்னு குருமூர்த்திக்கும் அருந்ததிக்கும் தெரியாதா?"

"தெரியாது... எல்லாமே டெலிஃபோன் மூலமாகவே நடந்திருக்கு. பணத்தைக் கூட ஒரு இரகசியமான இடத்துல வெச்சுட்டு அதுக்கப்புறம் ஃபோன் பண்ணி எடுத்துக்கச் சொல்லியிருக்காங்க. ஸோ குருமூர்த்தியும் அருந்ததியும் பொலிஸ் கையில் மாட்டியும் பிரயோசமில்லாமே போயிடுச்சு."

வர்ணா கேட்டாள்:

"பூவிழியோட லவ்வர் நான்தான்னு நீங்க பொலிஸ்ல போய் ஏன் சொல்லலை...?"

"என்னோட அம்மாவுக்கு பொலிஸ் கோர்ட்ன்னாலே பயம்... சொத்து தகராறு விஷயமா அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி ஒரு தடவை கோர்ட்ல சாட்சி சொல்லப் போகும்போது கோர்ட் வாசல்ல மயங்கியே விழுந்துட்டாங்க. நோயாளியான அம்மாவுக்கு நான் பூவிழியைக் காதலிச்ச விஷயமும், அவள் கொலை செய்யப்பட்ட விஷயமும் தெரிஞ்சா அதைத் தாங்கிக் கொள்கிற தைரியம் கிடையாது. அதனால விஷயத்தை வெளியே சொல்லாமே மறைச்சுட்டேன். பூவிழியை நான் காதலிச்ச நாட்கள்ல அவகிட்ட ஒரு தடவை எல்லை மீறிப் பழகியிருக்கேன். அதன் விளைவா பூவிழி கர்ப்பமாகி கருவை அபார்ஷனும் பண்ணியிருக்கா."

வர்ணா தன் மனதுக்குள் பரவிய அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் இயல்பாய் தீபக்கைப் பார்க்க அவன் தொடர்ந்தான்.

"நான் நினைச்சிருந்தா இந்த உண்மைகளை எல்லாம் உன்கிட்டேயிருந்து மறைச்சிருக்க முடியும். ஆனா அப்படி மறைக்கணும்னு எனக்குத் தோணலை. காரணம் நீ எனக்கு மனைவியாகப்போறே...ஸோ... நான் மறைக்க விரும்பலை. கல்யாணம்ங்கிறது ஒருத்தரோட விருப்பத்தைப் பொறுத்தது. உன்கிட்ட மத்தவங்களோட நோய்களைக் குணப்படுத்தற சக்தி இருக்கிறதா டாக்டர் ரத்னவேல் என்கிட்ட சொன்னார். கோடியில் ஒருத்தர்க்குத்தான் இது போன்ற அற்புதமான சக்தியைப் பெறமுடியும். இதே மாதிரியான ஒரு சக்தி ஜப்பான் பெண்கிட்ட இருந்ததைப் பத்தி பேப்பர்ல கூட நியூஸ் வந்திருந்தது. இப்படி நோய்களை குணப்படுத்தற முறைக்கு 'ரெய்ச்சி'ன்னு பேர். எனர்ஜி எக்சேஞ்ச் மூலம் நெகட்டிவ் தாட்ஸ் இல்லாமே நீ யாரைத் தொட்டாலும் அவங்க தற்காலிகமா உயிர் பிழைச்சு நோயிலிருந்து தங்களை விடுவிச்சுக்கலாம். இந்த சக்தியும் கூட உன்கிட்ட ஒரு கால கட்டம் வரைதான் இருக்க முடியும். எப்படியோ உயிர் பிரியும் நிலையில் இருந்த என்னோட அம்மாவை எழுந்து உட்கார வெச்சிட்டே. இந்த ஒரு செயலுக்காகவே நான் காலம் பூராவும் உனக்கு நன்றி சொல்லிட்டே இருக்கலாம்."

வர்ணா தன் தோளகளைக் குலுக்கிக் கொண்டாள்.

"இட்ஸ் ஆல்ரைட் மிஸ்டர் தீபக், நான் இப்போ என்ன பண்ணணும்னு நீங்க நினைக்கறீங்க...?"

தீபக் சில விநாடிகள் தயங்கி விட்டுத் தொடர்ந்தான்:

"ஒரு முக்கியமான விஷயத்துக்கு இப்பத்தான் நான் வர்றேன். பூவிழி கொலை செய்யப்பட்டதுக்கு காரணமான பெரும்புள்ளி யார்ன்னு ஆரம்பத்துல நீ கேட்டே. இப்ப சொல்றேன். பூவிழி கொலை செய்யப்பட்டதுக்கு காரணம் என்னுடைய அப்பாதான். எங்க காதலை எப்படியோ ஸ்மெல் பண்ணிகிட்ட என்னோட அப்பா என்னைக் கண்டிக்க தைரியம் இல்லாமே கூலிப்படையைச் சேர்ந்த ஒரு ஆளை வெச்சு பூவிழியை மிரட்டியிருக்கார். பூவிழியை மிரட்டப்போன கூலிப்படை ஆசாமிதான் குடிச்சிருந்த சாராய போதையில் என்ன செய்கிறோம்னு தெரியாமே பூவிழியை கத்தியால குத்திட்டான். ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்த மிதுன் என்கிற பேர்வழி வேற ஒரு காரணத்துக்காக பூவிழியை மிரட்டிட்டு போன சில நிமிஷ நேரத்துக்குள்ளே எங்கப்பா அனுப்பி வெச்ச கூலிப்படை ஆள் பூவிழியைக் கத்தியால் குத்த அது மிதுனோட வேலைதான்னு நினைச்சு பொலிஸ்கிட்ட உயிர் பிரியும் நேரத்துல மிதுனோட பேரைச் சொல்ல நினைச்சு 'மி'ன்னு சொல்லியிருக்கா. இந்தக் கொலையிலிருந்து தப்பிக்க பூவிழி சொன்ன 'மி' எழுத்து ரொம்பவும் வசதியா போயிடுச்சு. பொலிஸ் மிதுனைத் தேடிப்போனபோது கட்சி அலுவலகத்திலேயே அரசியல் எதிரிகளால் மிதுனும் கொலை செய்யப்பட பூவிழியோட கேஸ் எங்கப்பா பக்கமே வராம திசை திரும்பி போயிடுச்சு."

வர்ணா கேட்டாள்:

"பூவிழியோட மரணத்துக்குக் காரணம் உங்க ஃபாதர்ன்னு உங்களுக்கு எப்போ தெரியும்...?"

"போன மாசம்"

"எப்படித் தெரியும்?"

"எங்க கெஸ்ட் அவுஸ் பங்களாவில் எதேச்சையா ஒரு தடவை அப்பா கூலிப்படை நபரோடு பேசிட்டிருந்தப்போ கேட்டுட்டேன். எனக்கு பயங்கர அதிர்ச்சியாயிருந்தது. உடனே பொலிஸ்க்கு ஃபோன் பண்ணி சொல்லிடலாம்னு கூட நினைச்சேன்."

வர்ணா உதட்டோரம் புன்னகைத்தாள்.

"உடனே பாசம் பிரேக் போட்டிருக்குமே?"

"பிரேக் போட்டது பாசம் இல்லை வர்ணா..."

"பின்னே...?"

"என் அம்மாவோட உடல்நிலை. அம்மாவுக்கு அப்பா மேல ஏகப்பட்ட மதிப்பு, மரியாதை. பூவிழியோட கொலைக்காக அப்பா கைது செய்யப்பட்டார்ன்னா அந்த அதிர்ச்சியே அம்மாவோட உயிரைப் பறிச்சுடும். அதுக்கப்புறமும் அம்மாவோட ஆத்மா ஜென்மஜென்மத்துக்கும் சாந்தி அடையாது. அம்மா உயிரோடு இருக்கும்வரை அப்பாவை பொலிஸ்ல காட்டிக் கொடுக்கக் கூடாதுங்கற முடிவுக்கு வந்தேன். அம்மாவோட உடல் நிலை சம்பந்தமா என் ஃபேமிலி டாக்டரை கன்சல்ட் பண்ணிப் பார்த்தேன். அம்மா இன்னும் ஆறு மாசம் வரைக்கும்தான் உயிரோடு இருப்பாங்கன்னு சொன்னார். நான் அம்மாவோட மரணத்துக்காக வெயிட் பண்ணிட்டிருக்கும்போதுதான் நீ வந்து அவங்களைத் தொட்டு தற்காலிகமா குணப்படுத்திட்டே. அம்மா குணமாயிட்ட சந்தோஷத்துல அப்பாவும் உன்னை எனக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறதுக்கான ஏற்பாடுகள்ள மும்முரமா இறங்கிட்டார். என் அம்மாவோட உயிரைத் தற்காலிகமா காப்பாத்தி அவங்களை உட்கார்த்தி வெச்சிருக்கிற உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுல எனக்கும் சந்தோஷம்தான். இருந்தாலும் என் கடந்த கால உண்மைகளை உன்கிட்டேயிருந்து நான் மறைக்க விரும்பலை. சொல்லிட்டேன். என்னோட கல்யாணத்தைப் பார்க்கணும்னு அம்மாவுக்கு ரொம்பவும் ஆசை. அந்த ஆசையை நீ நிறைவேத்தி வைக்கறதும் வைக்காததும் உன்னோட இஷ்டம். பட் அம்மா உயிரோடு இருக்கிற நாள் வரைக்கும்தான் அப்பா சட்டத்தோட பிடியிலிருந்து மாட்டிக்காம இருக்க முடியும். அம்மா உயிர்விட்ட அடுத்த நாளே அப்பாவோட கையில் விலங்கு ஏறும். கடந்த அரைமணி நேரத்துக்குள் உன்கிட்ட என் கடந்த கால வாழ்க்கையையும் சொல்லிட்டேன். நாளைக்கு என்ன நடக்கும்ங்கிறதையும் சொல்லிட்டேன். இனி முடிவு உன் கையில்தான் இருக்கு. இன்னும் ரெண்டு நாளைக்கு நல்லா யோசனை பண்ணு. அதுக்கப்புறமா என்னைக் கல்யாணம் பண்ணிக்கிற விஷயத்துல உன்னோட முடிவைச் சொல்லு!"

தீபக் நீளமாய் பேசி முடித்துவிட்டு வர்ணாவின் முகத்தையே பார்க்க அவள் புன்னகைத்தாள்.

"இதுல யோசனை பண்ண என்ன இருக்கு?"

"அப்படீன்னா உன்னோட முடிவு...?"

"உங்களை கல்யாணம் பண்ணிக்க எனக்கு சம்மதம்."

"வர்ணா..."

"என்ன அப்படிப் பார்க்கறீங்க...?"

"நீ.. என்னைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்க மாட்டேன்னு நினைச்சேன்."

"மிஸ்டர் தீபக்... உங்ககிட்ட எனக்கு ரெண்டு விஷயம் பிடிச்சது. ஒண்ணு தாயோட மரணம் நிகழும்போது அவர் மனநிம்மதியோட இருக்கணும்னு நீங்க நினைச்சது. ரெண்டாவது பெத்த அப்பாவை சட்டத்தோட பிடியிலிருந்து காப்பாத்த நினைக்காமே அவர்க்குரிய தண்டனையை வாங்கித் தர முடிவு பண்ணி வைச்சிருக்கிறது. பூவிழி உங்களுக்கு மனைவியாக இருக்க அவளுக்கு கொடுத்த வைக்கல. அந்த பாக்கியம் எனக்கு கிடைச்சதுக்காக சந்தோஷப்படறேன்..."

"ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன்?"

"என்ன...?"

"இன்னிக்கு நாம ரெண்டு பேரும் சந்திச்ச இந்த நாள்ல ஒரு விசேஷம் இருக்கு..."

"என்ன விசேஷம்...?"

"இன்னிக்கு பூவிழியோட பிறந்தநாள்."

☺ (முற்றும்) ☺

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்

அடுத்த வார முரசில்
மிரட்ட வருகிறது
உங்கள் ராஜேஸ்குமாரின்
சிகப்பு வணக்கம்
வாரா வாரம் திக் திக்

'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.

# தர்ம யுத்தம் 10

ஆட்டோ நண்பரால் பொறுமையாக இருக்க முடியவில்லை. அவர்கள் எதிரில் போய் நின்று, "என்னம்மா நடந்தது? ஏன் இப்படி அழறீங்க?" என்றார்.

பதில் இல்லை. ஆட்டோ நண்பரின் நிலமை தர்மசங்கடமானது. "பாருங்கம்மா, எதிரில இருக்கிறது ஐ.ஜி ஆபீஸ். இங்கு உக்காந்து அழுதுகிட்டிருக்கீங்க. பக்கத்துல நான் நிக்கிறேன். பாக்கறவங்க என்னைத் தப்பா நினைப்பாங்க. தயவு செய்து அழுகையை நிறுத்துங்க!" என்றார்.

அவர்கள் இருவரும் முகத்தைத் துடைத்துக் கொண்டு, வண்டியில் ஏறினார்கள். மூவரில் யாரும், எதுவும் பேசவில்லை. அவர்கள் தங்கியிருந்த லாட்ஜுக்கு வந்தார்கள்.

அவர்களை ரூமில் இருக்கச் சொல்லி விட்டு, எதிரில் இருந்த ஹோட்டலுக்குச் சென்று, இரண்டு காப்பி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார் ஆட்டோ நண்பர்.



அவர்கள் மறுப்பார்கள் என்று எதிர்பார்த்தார். இல்லை, மௌனமாக வாங்கிக் குடித்தார்கள். அந்த இதமான சூடு, அவர்களது இதயத்திற்கு அப்போது தேவைப்பட்டிருக்கிறது.

சிறிது இடைவெளிக்குப் பிறகு, "என்னம்மா, உங்க பொண்ணுக்கு காலேஜில சீட்டு கிடைக்கலையா? அதுக்காகவா அழுதீங்க? வாழ்க்கையில் ஏமாற்றம் தோல்விங்கறது சகஜம்மா. இந்த மாதிரி நேரத்திலதான்



தைரியமாக இருக்கணும்" என்று தனக்குத் தெரிந்த வகையில் அவர்களுக்கு ஆறுதல் சொல்லியிருக்கிறார்.

அந்த அம்மா ஆட்டோ நண்பரை ஏறிட்டுப் பார்த்தார். "தம்பி, நான் உங்களைவிட வயசுல மூத்தவ. நீங்க சொன்ன ஏமாற்றங்களையும், தோல்விகளையும் நிறையவே சந்திச்சிருக்கேன் அந்த நேரத்திலயெல்லாம் நான் கொஞ்சம்கூடக் கலங்கவே இல்லை. ஆனா, அவமானங்கறது எங்களுக்குப் புதுசு.

நான் அந்த அமைச்சர்கிட்ட இவ்வளவு பணம்தான் என்கிட்ட இருக்கிறது என்கிறதையும், அதை எவ்வளவு கஷ்டப்பட்டு ஏற்பாடு செஞ்சிருக்கேன்கிறதையும் சொன்னேன். என் குடும்பச் சூழ்நிலை, என் மகளின் ஆர்வம், எங்களின் இயலாமை, எல்லாத்தையும் விளக்கமா சொல்லி, தயவுசெய்து எப்படியாவது சீட்டு கிடைக்க ஏற்பாடுசெய்யும்படி கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டேன்.

ஆனால் அவரோ, "நாங்க ஒண்ணும் சும்மா இந்த எடத்துல வந்து உக்காந்திரல்லம்மா. இன்னைக்கு நான் இந்த இடத்துல உக்காந்திருக்கேன்னா அதுக்கு எவ்வளவு செலவு பண்ணியிருக்கேன்னு எனக்குத்தான் தெரியும்.

எங்களுக்கு சீட்டு குடுக்குறப்பவே, மேலிடத்துல கேக்குற மொத கேள்வியே, 'எலக்ஷனுக்கு உங்களால எவ்வளவு செலவு செய்யமுடியும்ங்கறதுதான் அந்தக் கேள்வி. உங்க தொகுதியில உங்க சாதி ஒட்டு எவ்வளவு இருக்கு அதில எவ்வளவு நீங்க வாங்குவீங்க.

ஏம்மா நான் கேக்கறேன் எங்க சொந்தப் பணத்துல இருந்து லட்சம் கோடின்னு தேர்தலுக்கு செலவு செஞ்சிட்டு தேர்தலை செய்றதுக்காகவா இந்த நாற்காலியிலே வந்து உட்காந்திருக்கோம்?

நாங்க போட்ட பணத்தை திரும்ப எடுக்க வேணாமா? அப்புறம் எங்க பொண்டாட்டி புள்ளைங்க கதி என்னாகிறது? இங்க நீங்க எங்ககிட்ட கெஞ்சினமாதிரி, நாளைக்கு அவங்க யார்கிட்ட போயி கெஞ்சுவாங்க?

அது மாத்திரம் இல்லேம்மா, நான் வாங்கிற பணத்தை அப்படியே என்வீட்ல பூட்டி வைக்கப் போறேன்னு நெனைக்கிறீங்களா? இதுல யார் யாருக்கு எவ்வளவு பங்கு போகுதுன்னு உங்களுக்குத் தெரியுமா?

அடுத்த மாசம் கட்சி மாநாடு நடக்கப் போகுது. அதுக்கு என் பங்குக்கு ரெண்டு கோடி ரூபா வசூல் பண்ணிக் குடுக்கணும்னு சொல்லிட்டாங்க மேலிடத்தில. நான் எங்கே போவேன்? யார்கிட்ட வசூல் பண்ணுவேன்? நாங்க உங்ககிட்ட வாங்குகிற பணத்துக்குப் பேரு லஞ்சம். ஆனா, மேலிடத்துக்கு நாங்க கட்டற கப்பத்துக்குப் பேரு அன்பளிப்பு.

சில நேரங்களில் அந்தப் பணத்தை தங்கமாவோ, வெள்ளியாவோ மாத்தி, ஏதாவது ஒரு மாவட்டத்துப் பேரைச் சொல்லி, மேடையிலே குடுத்துட்டு, போட்டோவும் எடுத்துக்குவோம். ப்ளாக் அமௌண்ட், ஒயிட் ஆயிடும்.

எங்க நிலைமை எங்களுக்குத் தாம்மா தெரியும். அதனால ஏழு லட்சம் ரூபாய் இல்லாம இந்த சீட்டு உங்களுக்குக் கிடைக்காது!" கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் அமைச்சர்.

## காமப்பார்வை

கடைசி முயற்சியாக அவர் காலைத் தொட்டுக் கும்பிட, அந்த விதவைத் தாய் முயற்சிக்கும்போது, அமைச்சரின் பார்வை அந்த அழகான விதவையின் உடம்பை மேய்ந்திருக்கிறது.

உடனே தன் பேச்சை மாற்றி, "சரிம்மா, இப்ப உங்க கையில இருக்கிற பணத்தை என்கிட்ட குடுங்க. மீதிப்பணத்துக்கு ஒரு ஐடியா சொல்றேன் கேப்பீங்களா?" என்றிருக்கிறார்.

என்ன என்பது போல் தாயும், மகளும் அமைச்சரைப் பார்த்திருக்கிறார்கள். "நீங்க ரெண்டு பேரும் நாலு நாளைக்கு என்னோடு கெஸ்ட்ஹவுசில ஒரே ரூம்ல, ஒரே படுக்கையில இருக்கணும். சம்மதமா?"

இதைக் கொஞ்சமும் எதிர்பாராத அந்தப் பெண்கள், நிலைகுலைந்து போனார்கள். பருவம் வந்த பெண்ணை பக்கத்தில் வைத்துக் கொண்டு தாயைக் கூப்பிடுகிறான். அபலையான விதவை என்ற காரணத்தாலோ என்னவோ அவளிடமே மகளைக் கேட்கிறான். அதுவும் ஒரே நேரத்தில், ஒரே படுக்கையில்.

கடவுளே, இது என்ன வக்கிரம்! அந்தப் பெண்களால் பதில் சொல்ல மாத்திரமல்ல, அங்கு நிற்கவும் முடியவில்லை. உடனே அந்த இடத்தை விட்டு ஓடிவிடவும் தெம்பில்லை. எப்படியோ சமாளித்துக்கொண்டு, கண்கள் கலங்க, கால்கள் தடுமாற, ஆட்டோவில் வந்து ஏறியிருக்கிறார்கள்.

சொல்லி முடித்துவிட்டு ஆட்டோ நண்பர் இறுகிய முகத்தோடு என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். அந்தத் தாயும். மகளும் எப்படிக் குலைந்து போனார்கள் என்பதற்கு சாட்சியாக, நிலை குலைந்தல்ல, நினைவிழந்து நின்றேன் இப்படியும் நடக்குமா? மனித மனம்தானா அது?

இதுவரை தெளிவான குரலில் பேசிக் கொண்டிருந்த ஆட்டோ நண்பர் கரகரத்த குரலில் பேச ஆரம்பித்தார். 'இதுக்கா சார் அந்தப்பாவிகளுக்கு நாம ஒட்டு போட்டு அனுப்பினோம்' இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அரசியல் என்கிற வார்த்தை அசிங்கமாகிப் போய்விட்டது.

சார் சத்தியமாகச் சொல்றேன், வெளிநாட்டுப் பகைவர்களை எதிர்த்து நடக்கிற யுத்தம் மாத்திரம் போதாது சார். இந்த மாதிரியான உள்நாட்டுக் கயவர்களை எதிர்த்தும் நாம ஒரு யுத்தம் நடத்தியாகணும். வரும் சார் அந்த நாள் சீக்கிரமே வரும் என்று உணர்ச்சிவசப்பட்டார்.

(அனுபவங்கள் தொடரும்)

ப லி உ ண ர் வு



படிப்பகம்

www.padippakam.com

ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாளும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில்– 1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது..

**கடந்த வாரம்**

ஐரிஷ் தொண்டர்படை போராளிகள் தான் பிரீன் தலைமையில் பதில் ஆளுநரைக் கொல்வதற்கு தாக்குதல் நடத்துகிறார்கள். ஆளுநர் தப்பிவிடுகிறார். அயர்லாந்தை ஆக்கிரமித்த பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக தொண்டர் படை தொடர்ந்து போராடுகிறது. **இனி...**

# வீரன் தான் பிரீன்

07

தமிழில் ப.ராமஸ்வாமி

அவர்கள் கைகள் ஆயுதந் தாங்கத் துடித்துக் கொண்டிருந்தன. கால்கள் போர்க்களத்திற்குச் செல்ல முனைந்து நின்றன. அந்நிலையில் அவர்கட்டு ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது.

அயர்லாந்தில் அரசாங்கத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சில பணக்காரர்களும் ராஜ விசுவாசிகளும் துப்பாக்கிகளையும், ரிவால்வர்களையும். பட்டாக் கத்திகளையும், ஈட்டிகளையும் தங்கள் மாளிகைகளிலே சும்மாவைத்துக் கொண்டிருந்தனர்.

ராஜவிசுவாசிகளுக்கு இத்தனை ஆயுதங்களும் எதற்கு? புரட்சிக்காரருக்கே அவைதேவை! தொண்டர்கள் இதை அறிந்து கொண்டு, ஊரூராய்ப் பிரிந்து சென்று ஆயுதம் சேகரிக்க ஏற்பாடு செய்தார்கள்.

முதலாவது எந்த ஊரில், யாரிடம், எத்தனை ஆயுதங்கள் உள்ளன என்பதற்குக் கணக்கெடுத்தார்கள். கணக்குப்படி ஆயுதங்களைக் கீழே வைக்கும்படி ஆங்காங்கு இரவில் சென்று கேட்டார்கள்.

பலர் சமாதானமாகவே ஆயுதங்களைக் கொடுத்து விட்டார்கள். பலர் தங்களிடமுள்ள ஆயுதங்களை விரைவாக வந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அழைப்பும் அனுப்பினார்கள். சிலர் மட்டும் மறுத்தார்கள். மறுத்தவர்கள் மார்புக்கு நேராகத் தொண்டர்கள் துப்பாக்கிகளைப் பிடித்தவுடன், அந்த மறுப்பும் ஒழிந்தது.

ஓர் உயிரையும் வதையாமலே தொண்டர்களுக்குத் தேசத்திலிருந்த ஆயுதங்களெல்லாம் வந்து சேர்ந்தன.

ஆனால் அதிகாரிகள் சும்மா இருக்கவில்லை. இந்நிலை ஏற்படும் என்று தெரிந்ததால் அவர்கள் பொலிஸாரை அனுப்பி ஜனங்களிடமுள்ள ஆயுதங்களை வாங்கி வரும்படி பணித்தார்கள்.

போலிஸார் போன இடமெல்லாம் சில நிமிஷங்களுக்கு முன்னதாகவே புரட்சி வாலிபர்கள் ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு போன செய்தியைத் தெரிந்து கொண்டு வெறுங்கையுடன் திரும்பினார்கள். இருக்கும் ஆட்சியாளருக்கும் எதிர்காலச் சுதந்திர ஆட்சியாளருக்கும் எவ்வளவு வித்தியாசம்!

கட்டாய இராணுவச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதால் அயர்லாந்தின் ஜனங்கள் மிகுந்த கலக்கமடைந்தார்கள். பல்லாயிரக்கணக்கான வாலிபர்களும் வயோதிபர்களும் அரசாங்கத்தை எதிர்ப்பதற்காக ஐரிஷ் தொண்டர் படையில் வந்து சேர்ந்துகொண்டனர்.

பதினாறிலிருந்து ஐம்பது வயது வரையுள்ளவர்கள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் ஏதாவதொரு தொண்டர் படையைச் சேர்ந்திருந்தார்கள்.

பெண்கள் தனியாக ஒரு சங்கத்தை வைத்துக் கொண்டார்கள். பையன்கள் வானர சேனைகளை அமைத்துக் கொண்டு தொண்டர் படைக்கு உதவி செய்ய முன்வந்தனர்.

தொண்டர் படையின் முக்கிய அதிகாரிகளில் பலர் சிறையில் இருந்ததால் வெளியிலிருந்த சிலர் இரவு பகலாக உழைத்து அவர்களுடைய வேலைகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டியிருந்தது.

கட்டாய இராணுவச் சட்டம் அயர்லாந்தை " ஒற்றுமைப்படுத்துவதற்காகக் கடவுள் அருளிய ஒரு பாக்கியம் என்று கருதினார்கள். அதன் மூலமாவது வேற்றுமைகள் ஒழிந்து அயர்லாந்து நிரந்தரமான ஒற்றுமையை அடையுமென்று தான் பிரீன் முதலானவர்கள் எண்ணினார்கள்.

இங்கிலாந்து ஐரிஷ் மக்களின் உறுதியைக் கவனித்து வந்தது. கட்டாய இராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதா அல்லது அயர்லாந்தை இழப்பதா என்று பிரச்சினை ஏற்பட்டது.

ஏனெனில் மக்கள் எல்லோரும் கலகத்துக்குத் தயாராக நின்றார்கள். இங்கிலாந்து பேசாதிருந்து நாட்டின் நிலைமையை



ஆராய்ந்து வந்தது. தொண்டர்களும் தீவிரமாகவும் இடைவிடாமலும் தங்களுடைய பிரசாரத்தை நடாத்தி வந்தார்கள்.

தான் பிரீன் இயற்கையான யுத்தம் வருவதற்கு முன்னே தன் படையினருக்குள்ளே ஒத்திகை யுத்தங்களுக்கு ஏற்பாடு செய்தான்.

அவர்களில் சிலர் திப்பெரரி நகரில் ஒரு பாகத்தைப் பாதுகாப்பார்கள். மற்றும் சிலர் அதை முற்றுகையிட்டுப் பிடிப்பார்கள். இரு கட்சியாருக்கும் தீவிரமான போராட்டம் ஏற்படும். அதிலிருந்து அவர்கள் நல்ல பயிற்சி பெற்று வந்தார்கள்.

தொண்டர்கள் திப்பெரரி நகரின் சில பாகங்களைத் தங்களுடைய இராணுவ ஸ்தலங்கள் என்று குறிப்பிட்டு அங்கே ஆங்கிலப் பொலிஸாரும் சிப்பாய்களும் வராமல் பாதுகாத்து வந்தனர். அவர்களுடைய இந்த நடவடிக்கைகளின் போதெல்லாம் அந்நகரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரிட்டிஷ் சிப்பாய்கள் இருந்தனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

சில சமயங்களில் இங்கிலாந்து புத்திசாலித்தனமாக நடந்து கொள்வது வழக்கம். அது தன் கைக்கு எட்டாவிட்டால் குடுமியை விட்டுவிடும்.

கட்டாய இராணுவச் சட்டத்தால் அயர்லாந்திலிருந்து ஒரு மனிதனைக்கூட ராணுவத்திற்குச் சேர்க்க முடியாது என்பதை அது தெரிந்து கொண்டது. ஆதலால் அச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படாமலே ஒழிந்தது.

இதனால் ஐரிஷ் தொண்டர் படைக்கு மிகவும் கஷ்டமேற்பட்டது. பல்லாயிரக்கணக்காக அதில் வந்து சேர்ந்து கொண்டிருந்த மக்கள் படிப்படியாக அதிலிருந்து விலகி விட்டார்கள்.

சட்டம் ஒழிந்தவுடன் அவர்களுடைய கவலையும் ஒழிந்துவிட்டது! அவர்கள் ஆங்கில அரசாங்கத்தின் கட்டாயத்தினால் ஆங்கிலப் படையில் சேர்ந்து பிரான்ஸ், டார்டலனலீஸ் முதலான யுத்த அரங்கங்களிலே சாவதை வெறுத்து அதற்குப் பதிலாகத் தங்களுடைய நாட்டிலே ஆங்கில அரசாங்கத்தை எதிர்த்து மடிய விரும்பினார்கள்.

சட்டம் ஒழிந்த பிறகு அவர்களுக்குத் தொண்டர்படையில் விருப்பமில்லாமல் போய்விட்டது. அவர்கள் அயர்லாந்தின் சுதந்திரத்திற்காக ஆயுதந் தாங்கிப் போராடத் தயாராகவிருக்கவில்லை. சுதந் திரத்திற்காக ஒரு சொட்டு இரத்தம் சிந்துவது கூட அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

பழைய அரசியல் தலைவர்களும் இதே கருத்தைத் தான் கொண்டிருந்தார்கள். ஆனால் வாலிபர்கள் பலர் தங்கள் உறுதியில் சிறிதும் தளராது அயர்லாந்து பூரண சுதந்திரத்தைப் பெறும் வரையிலும் போராடியே தீரவேண்டு மென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தனர். தான் பிரீனும் அதே கருத்தை கொண்டிருந்தான்.

அச்சமயத்தில் ஸீன் டிரீஸி டண்டாக் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வந்தான். பதின்மூன்று நாட்களாக அவன் உணவு உட்கொள்ளவில்லை.

அதிகாரிகள் அவனைச் சாகவிட்டு விடுவார்கள் என்று தோன்றிற்று. வெளியே இருந்த தான் பிரீன் முதலானவர்கள் அச்சமயத்தில் தீரமான ஒரு காரியத்தைச் செய்து அவனை மடியவிடாமல் பாதுகாக்க வேண்டுமென்று கருதினார்கள்.

தான் பிரீனுக்கு ஒரு யோசனை தோன்றியது. ஸீனை அரசாங்கத்தார் சிறை வைத்திருப்பது போல் தானும் அவர்களுடைய பொலிஸ்காரன் ஒருவனைப் பிடித்துக் கொண்டு வந்து ஒரு இரகசியமான வீட்டில் அடைத்து வைத்து, அவனைப் பலவந்தமாய் உண்ணா விரதம் இருக்கும்படி செய்ய வேண்டும் என்றும், ஸீனை விடுதலை செய்தால்தான் பொலிஸ்காரனையும் விடுதலை செய்ய முடியும் என்று அறிவித்து விடவேண்டு மென்றும் அவன் தீர்மானம் செய்தான்.

மற்ற நண்பர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள். அக்காலத்தில் லிமெரிக் ஜங்ஷன் என்னுமிடத்தில் இருப்புப் பாதைப் பக்கம் ஒவ்வொரு நாள் மாலையிலும் சில பொலிஸ்காரர் காவலுக்காக நிற்பது வழக்கம்.

தான் பிரீனும் அவனுடைய தோழர்களும் மொத்தம் 49 பேர்கள் ஒரு நாள் அவ்விடத்திற்குச் சென்று அருகே இருந்த மலையடிவாரத்தில் மறைந்திருந்தார்கள்.

தற்செயலாக அன்றைக்கு ஒரு பொலிஸ்காரனும் அவ்விடத்திற்கு வரவில்லை.

பின்னால் தான் பிரீனுடைய யோசனை ஐரிஷ் குடியரசுச் சகோதர சங்கத்தால் நிராகரிக்கப்பட்டது.

அச்சங்கம் மிகவும் இரகசியமானது. மிகுந்த நம்பிக்கைக்குப் பாத்திரமான தொண்டர்கள் பலர் அதில் இருந்தனர்.

தொண்டர் படையை மேற்பார்க்கும் அதிகாரம் அச்சங்கத்திற்கே உண்டு. இச்சம்பவத்திற்குப் பிறகுதான் பிரீன் சங்கத்திலிருந்து விலகிவிட்டான்.

1918ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஸீன் டிரீஸி விடுதலை செய்யப்பட்டான். அவன் வெளியே வந்தவுடன் தொண்டர் படை சம்பந்தமான பல திட்டங்களைப் பற்றித் தான் பிரீனிடம் விவாதித்தான். தான் பிரீன் திட்டங்கள் போட்டுப் போட்டுச் சலிப்படைந்து இருந்ததால் உடனே சண்டையை ஆரம்பிக்க வேண்டுமென்று கூறினான். ஸீனுக்கும் அவனுக்கும் அபிப்பிராய பேதமேற்பட்டது.

இருவரும் தங்கள் நட்புக்கு எவ்விதக் குறைவும் ஏற்படாதபடி தத்தம் கருத்துப்படி வேலை செய்ய ஆரம்பித்தார்கள்.

தான் பிரீன் பாட்ரிக் கியோக் என்னும் நண்பனுடன் சேர்ந்து ஒரு வெடிமருந்துச் சாலையை ஏற்படுத்தினான். அதன்மூலம் ஏராளமான வெடிமருந்தைத் தயார் செய்ய வேண்டுமென்பது அவன் நோக்கம்.

தொழிற்சாலையில் வேலை செய்தவர்கள் அவனும் கியோர்க்குமே.

அத் தொழிற்சாலை டாம் ஒட்யைா என்பவருடைய குடிசையின் ஒரு பாகத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

தான் பிரீனிடம் வெடி மருந்து செய்வதற்குத் தக்க இயந்திரங்கள் இல்லை. கையாலேயே வெடிமருந்தும் குண்டுகளும் தயார் செய்ய வேண்டியிருந்தது. செய்யப்பட்ட குண்டுகளும் மழையிலும் காற்றிலும் வெளியே கொண்டு போனால் வெடிக்கக்கூடியவையில்லை.

வெடி குண்டுகள் தயார் செய்வதோடு அவர்கள் தோட்டாக்களும் தயார் செய்து வந்தார்கள். அவர்கள் வெளியிடங்களில் இருந்து துப்பாக்கிகளையும் றிவோல்வர்களையும் அபகரித்து வருவதையும் நிறுத்திவிடவில்லை.

அங்காங்கே சிலரிடம் இன்னும் துப்பாக்கிகள் பாக்கியிருந்தன. தான் பிரீன் அடிக்கடி அவர்கள் வீடுகளுக்கு விஜயம் செய்வது வழக்கம்.

(பயணம் ...தொடரும்)

---

# அரங்கம் அந்தரங்கம்

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

32

கவியரசு கண்ணதாசன்

அந்த ஆல்பத்தில் தமிழ் நாட்டிலும் வெளி நாட்டிலும் உள்ள அழகிகளின் படங்களும் விலாசங்களும் இருந்தன.

இவர்கள் சோதனை மிட்டுக் கொண்டிருந்தபோது ஆத்திரமடைந்த கமல், 'அதைத் தொடாதே, இதைத் தொடாதே' என்று சத்தம் போட்டார்.

பதவியிழந்த பருக் மன்னன், பாரீஸ் ஒட்டலில் படுத்தபடி பணியாட்களை மந்திரிகள் என்று கருதி உத்தரவிட்டானாமே, அதுபோல!

பதவி போய் பத்து மணிநேரம் தானே ஆகிறது! பழைய வாடை மிச்சம் இருந்தது.

'ஷட் அப்!' என்றார் ஒரு பெரிய அதிகாரி.

'கெட் அவுட்' என்றார் கமல்.

'பளார்' என்று அறை விழுந்தது.

அறைந்தது வேறு யாருமில்லை; தலைவருக்குக் கீழே வேலை பார்த்துக் கொண்டிருந்த ஓர் அதிகாரி.

தான் நியமித்த மாஜிஸ்திரேட்டாலேயே, தான் விசாரிக்கப்படுவதற்குப் பெயர் தானே, 'விதி.'

யானை குழியிலே விழுந்தால், தவளை எட்டி உதைக்கும்; எலி முதுகில் ஏறி டான்ஸ் ஆடும்.

ஒரு நாள் நாமும் விழுவோம் என்று தெரியாமல், ஆர்ப்பாட்டம் நடத்துகிறவர்கள், தாங்கள் பிறருக்குச் செய்தது போலவே தங்களுக்குச் செய்யப்படுவதைத் தங்கள் கண்ணாலேயே காண்பார்கள்.

'நீயுமா புருட்டஸ்!' என்று கேட்டானாம் சீசர்.

'கமல் சீசர்' அல்ல; ஆனாலும் அவருக்கு இந்தக் கேள்வி ஞாபகம் வந்தது.

எத்தனை முறை அந்த அதிகாரியை 'எருமை மாடு', 'கழுதை' என்றெல்லாம் திட்டியிருப்பார்?

இப்போது அவர் விட்ட அம்புகள் திரும்ப அவரிடமே வந்து சேர்ந்தன.

> இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!
>
> அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.
>
> இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!
>
> நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.
>
> இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.
>
> –கண்ணதாசன்–

அந்த அதிகாரி தன் வஞ்சம் முழுவதையும் தீர்த்துக் கொண்டார்.

'போட்ட முதலீடு வட்டியோடு வருகிறது' என்பது யசோதாவுக்குப் புரிந்தது. ஆனாலும் பிறரை உதைத்தே பழக்கப்பட்ட தன் கணவன், உதை வாங்குவதைக் கண்டு அவள் பொருமி அழுதாள்.

வீட்டில் கைப்பற்றப்பட்ட பொருள்கள் ஒரு லாரிக்குமேல் இருக்கும்.

அவர் கட்டிய வீட்டையும் அதிகாரிகள் அளவெடுத்துக் கொண்டிருந்தார் கள்.

மேலும் ஆறு வீடுகள், நிலங்களுக்கான தஸ்தாவேஜுகளும் கிடைத்தன.

வந்திருந்த அதிகாரிகளுக்குக் கைது செய்யும் அதிகாரமில்லை; ஆகவே அவர்கள் வெளியேறப் போகும்போது ஆத்திரம் தாங்காத கமல், டிராயரைத் திறந்து ரிவால்வரை எடுக்கப்போனார்.

ஒரு முரட்டுக் கை அவர் மீது விழுந்தது.

அது அந்த இன்ஸ்பெக்டரின் கை.

ரிவால்வரையும் எடுத்துக் கொண்டு மூவகை அதிகாரிகளும் புறப்பட்டார்கள்.

திடீர் என்று அன்று இரவு எட்டு மணிக்குக் கமல் வீட்டு முன்னால் பலர் மாரடித்து அழும் சத்தம் கேட்டது.

மாரடித்து அழுது கொண்டிருந்தவர்கள் வேறு யாருமில்லை.

அவரால் 'விலை மாதர்கள்' என்று பிடிக்கப்பட்டவர்கள்– பணம் கொடுக்காமலேயே அதிகாரிகளால் அநுபவிக்கப்பட்டவர்கள்.

கமல் ஆத்திரத்தோடு வெளியே வந்து பார்த்தார்.



அவர்கள் எல்லாம் கும்மியடித்துப் பாடத் தொடங்கினார்கள்.

யசோதா வெளியே வந்து, அவரை உள்ளே போகச் சொல்லிவிட்டு, அந்தப் பெண்களிடம் போய்க் கையெடுத்துக் கும்பிட்டாள்.

"உனக்கு வந்திருந்தாத் தெரியும்மா?" என்று ஓங்கிக் கத்தினாள் ஒரு பெண்.

"இனி உன்னையும் பிடிப்பாங்க பார்த்துக் கொண்டே இரு. தண்டனைக்குத் தண்டனை!" என்று கத்தினாள் ஒரு பெண்.

"பெண் பாவம் சும்மா விடாதுன்னு தெரியாமலா சொன்னாங்க? நல்லா அனுபவி!" என்று கத்தினாள் ஒரு பெண்.

இன்னும் அவர்கள் செய்த அர்ச்சனைகள் யசோதாவின் நெஞ்சிலே ஈட்டி போல் பாய்ந்தன.

காதைப் பொத்திக்கொண்டு, வீட்டுக்குள்ளே நடந்து கதவைத் தாழிட்டுக் கொண்டாள் யசோதா.

அங்கே கட்டிலில் ஆத்திரமாகப் படுத்துக் கொண்டிருந்தார் கமல்.

அவருக்கு ஆறுதல் சொல்வதற்காக அருகிலே போய் உட்கார்ந்தாள் யசோதா.

"எழுந்து போ! போ!" என்று கத்தினார் அவர்.

இப்போதுதான் பேச முடியாது என்று உணர்ந்து கொண்ட யசோதா தானும் போய் ஒரு மூலையில் படுத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

அவர் எழுந்தார், உட்கார்ந்தார், எழுந்தார்.

பிறகு திடீரெனப் போய் அலமாரியைத் திறந்தார். டிராயரைத் திறந்தார்.

"ஐயோ தற்கொலை செய்து கொள்ளப் போகிறாரே?" என்று பயந்தாள் யசோதா.

அவர் ரெப்ரிஜிரேட்டரைத் திறந்த போதுதான் அவளுக்குப் புரிந்தது, 'விஸ்கியைத் தேடுகிறார்' என்பது.

வந்திருந்த அதிகாரிகள்தான் அனைத்தையும் அள்ளிக் கொண்டு போய் விட்டார்களே!

ஒரு சொட்டு விஸ்கி இல்லை.

அப்போது 'டெலிபோன்' மணி அடித்தது.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# ஊருக்குத் திரும்புகிறான்

எல்லையற்ற தொல்லைகளை வென்று, அவன் எண்ணிவந்த பயணத்திற்கான எல்லா வேலைகளுமே இன்று முடிந்து விட்டதாகக் குமணன் மகிழ்ந்து போனான்.

வடக்கு- கிழக்குப் பிரதேசத்தில் வாழ்வோரை வாட்டும் துயரச் சம்பவங்களுக்குள் சிக்காமல் விடுபட்டு-எந்த அரசியலுக்குள்ளேயும் இணைந்து கொள்ளாமல் விலகி இருக்கவே அவன் விரும்பினான்.

அவனும், அவன் பெற்றோரும், தங்கைகளும் மகிழ்ந்திருக்க ஏதாவது ஒரு சுதந்திரமான வேலை தேடுவதிலேயே குமணனின் கவனமெல்லாம் நிறைந்திருந்தது.

வன்னி மண்ணில் எந்த வசதிகளுமே அருகிப் போனநிலையில் இலங்கையை விட்டு. வெளிநாடொன்றுக்குப் போய்விட வேண்டும், என்ற விருப்புடனேயே அவன் கொழும்புக்கு வந்தான்.

ஊரெல்லாம் அமிழ்ந்து போன, யுத்த வேதனைச் சுழிக்குள் தன்னையும் வீழ்த்திவிட அவன் துணியவில்லை. தன் உயிர் காத்து எங்காவது தப்பி இருந்து தன் குடும்பத்தைக் காக்க வேண்டும் என்பதே அவனது கனவாகும். அந்தக் கனவு நனவாகும் நினைவில் கையில் கிடைத்த 'பாஸ்போட்', அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

குறுகிச் சிறுத்துக் கூனிக் கிடக்கும் கோழிக்கூடுகளைப் போன்ற கோலம் சிதைந்த அறைகள், அவற்றில் இலட்சம் இலட்சமாக முற்பணம் கொடுத்துக் கொழும்பில் வாடகைக்கிருக்கும் அவனது உறவினர்கள்; அவர்களோடு ஒருகணமேனும் ஒதுங்கி இருக்க முடியாது.

தன்னால், அவர்களுக்கு ஏற்படக்கூடிய தொல்லைகளையும், துயரங்களையும் எண்ணிப் பார்த்தவன், கொழும்பில் நிலவும் பாதுகாப்புக் கெடுபிடிக்குள் இன்று ஓரளவு பத்திரமான இடமாகத் தோன்றிய அந்தத் தனியார் விடுதியில் குமணன் தங்கிவிட்டான்.

ஊரிலிருந்து புறப்படும்போது தனது தாயாரினதும் தங்கைகளினதும் நகைகளை விற்றெடுத்த காசோடு வந்தவனுக்கு உதவியென்று வேறெதுவும் கிடைக்கவில்லை.

விடுதிக்கும், உணவுக்கும், தான் நோக்கி வந்த வேலைச் செலவுக்கும் கொடுத்தவை போக; எஞ்சியுள்ள பணத்தோடு எண்ணி வந்த வேலைகளை முடித்துவிடலாம் என்று கணக்கிட்டு ஓரளவு மனம் அமைதியடைந்தான்.

கொழும்பில் தொடரும், சோதனைகளும் விசாரணைகளும் குமணனுக்கு ஓரளவு இன்று பழக்கப்பட்டுப் போயின. அவனது மனப்பயம் இன்னமும் குறைந்து போய் விடவில்லை.

கட்டடங்களால் நிறைந்தும், வீதியெல்லாம் அணிவகுக்கும் வாகனங்களால் நெருங்கியும் கிடந்த நகரத்தின் எழில் மிகவும் உயர்ந்ததுதான். அங்கே ஒட்டியும் ஒட்டாமலும் ஊர்ந்து செல்லும் மானிட வாழ்க்கையில் ஊறிப் போன மனங்கள்.

மனந்திறந்து மகிழ்வோடு உறவாடத் தயங்கும் மனிதர்களின் நாகரிக நடமாட்டம். அன்பு, கருணை, பாசம் இவைகளைமீறித் தலைதூக்கும் சந்தேகப் பூதத்தின் கொடிய தோற்றம். எல்லாமே அவனுக்கு இலங்கை மீது வெறுப்பையே ஏற்படுத்தியது.

எப்படியாவது சுழியோடி எஞ்சிய வேலைகளை முடித்துக் கொண்டால், ஓரிரு

**குறுகிச் சிறுத்து கூனிக் கிடக்கும் கோலம் சிதைந்த அறைகள். இலட்சம் இலட்சமாய் முற்பணம் கொடுத்து குடியிருக்கும் உறவினர்கள்...!**

வாரங்களில் ஓர் ஐரோப்பிய நாட்டில் கால்களைப் பதித்து விடலாம் என்று அவன் நம்பினான்.

தங்கைகள் இருவர் இன்னமும் திருமணத்தைக் காணாமல் வயது தொலைய வாடி நிற்கும் காட்சி அவனது மனத்திரையில் துயரக் கோடுகளை வரைந்தன.

அவனது வயது முதிர்ந்த பெற்றோரும் போரின் இருட் படிவுகளால், வேலையற்ற உணவுக்கும் உடைக்கும் உறுதியான வருமானமின்றி ஒடுங்கிக் கிடக்கும் அவலம்.

எல்லாவற்றுக்கும் மேலாகக் கல்வியை விருப்போடு கற்று வந்தவனைக் கருணையின்றிக் கலைத்து வரும் இடப்பெயர்வுகளால் எல்லாமே இழந்து விட்டதான இடர்நிலை.

அமைதியாகத் தனித்திருந்து அழுதழுது. அவனுக்கோ ஆறாத துயர் வாழ்க்கை.

பயணத்தின் முதற்படியாகப் பாஸ்போட் கிடைத்துவிட்ட உற்சாகத்தில் அவன் தங்கி நின்ற விடுதி நண்பர்களுடன் சில பொழுது மகிழ்ந்து போனான்.

நிர்மலமாய் தோன்றும் வானம் திடீரெனப் பரவும் கார் மேகத்தால் இடியும் மின்னலுமாய்க் கோலமிட்டுச் 'சோ'வெனப் பெருமழையாய் பெய்தல் போலக் கொழும்பு மாநகரைத் திடீரெனச் சூழும் சுற்றிவளைப்புக்களும் கைதுகளும், எப்பொழுது- எது நடக்கும் எனப் புரிய வைக்காப் புதிராகத் தொடரும்.

வீட்டுக்குள்ளே இருந்தாலும் வெளியில் அலைந்தாலும் அங்கிங்கெல்லாம் தேடி வந்து வேதனைதரும் சோதனைகளுக்கு யாரைத்தான் குறைகூற முடியும்.

எமது சுதந்திர நாட்டுப் பிரஜைகளின் வாழ்க்கை வடிவழகு இப்படி ஆகிப் போனதில் அனைவருக்குமே துயரந்தான்.

திடீரென எங்கோ கேட்ட குண்டு வெடிப்பின் பேரொலி அந்தப் பிரதேசத்



**நெடுந்தீவு மகேஷ்**

தையே ஒருகணம் பயங்கரமாக அதிரவைத்தது. அத்தனை ஜீவன்களும் ஒருபொழுது அடங்கி அமைதியாயின.

என்ன நடந்தது? எல்லோர் முகங்களிலும் கேள்விக்குறி. அந்த விடுதி அறைகளில் எரிந்து கொண்டிருந்த மின் விளக்குகள் அணைக்கப்பட்டன.

எல்லோரையும் படுக்கைக்குப் போகும்படி விடுதியின் உரிமையாளரின் அறிவித்தல். விடுதியினுள் மௌனம் குடி கொண்டது.

சிறிது நேர இடைவெளிக்குள் அந்த விடுதியை நிறைத்த பாதுகாப்புப் படையினர் அங்கிருந்த அனைத்து இளைஞர், யுவதிகளையும் 'சந்தேகம்' என்ற சட்ட வார்த்தையைக் கூறிக் கைது செய்தனர். குமணனின் கரங்களிலும் விலங்கிடப்பட்டது. ஏதுமறியாமல் விழித்த அவனுக்குக் கிடைத்த அடியும் உதையும் அவனது உடலை மாத்திரமல்ல உள்ளத்தையே பெரிதாய் வருத்தியது.

அந்தப் பிரதேசத்தில் வெடித்த குண்டின் எதிரொலியாக நடத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளால், அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த ஓரினம் பாதுகாப்பின்றிப் பரிதவித்தது.

இத்தனை துயரங்களையும் சுமந்து கொண்டு, எத்தனை காலங்களுக்கு அமைதிக்கும் சமாதானத்துக்குமாக ஊர்வலங்களும், யாகங்களும் செய்வது. விடியும்வரை குமணனுக்கும் அவனுடன் கைதான அனைவருக்கும் கிடைத்த துயரமான, வேதனையான, அர்த்தமற்ற விழிப்பிரவை வார்த்தைகளால் விபரிக்க முடியாது.

சந்தேகத்தில் கைது செய்யப்பட்டாலும் விலங்கிட்டுச் சித்திரவதைக்குள்ளாகி, விசாரணைக்குள் சீரழியும் நமது அவலத்தை என்னென்று வென்றுயர்வது?

காவல் நிலையத்தில் விழித்திருந்து வேதனைப் பட்டவனுக்கு விடிந்ததும் புதிய நோக்கோடு வெளியேறப் போகிறோம், என்பது புரியாமலே இருந்தது.

எந்தக் குற்றச்சாட்டுக்குள்ளேயும் அவனை இணைத்துக் கொள்ள ஆதாரம் கிடைக்காமையால் விடுதலையாகி வெளியே வந்தவனுக்கு வன்னியில் வீழ்ந்த குண்டுகள் அவனது தந்தை தாயாரோடு தங்கைகளையும் பலிகொண்ட கொடுமையான செய்தி கிடைத்தபோது ஓவென்று ஓலமிட்டு அழுதான்.

அங்கங்கள் கொதிக்க ஆத்திரமும் ஆவேசமுமாய்த் தன் தலையைப் பிய்த்துக் கொண்டான்.

குமணனின் வேதனைக்கு எல்லையிட எந்தக் குரல்களுக்கும் சக்தியில்லை. எவரது அறிக்கைகளும், ஆர்ப்பாட்டங்களும் அவனுக்கு ஆறுதல் தரவில்லை.

அவன் உள்ளத்தில் மின்னலிட்ட உறுதியின் சுவடு- வெளிநாட்டுப் பயணத்தை வெறுத்தது. ஊருக்குத் திரும்ப வேண்டும் என்றதோர் வேகம் அவனை விரைவு படுத்தியது.

'பாஸ் போட்'டைக் கிழித்தெறிந்த கையோடு- தன் கைப்பையைத் தூக்கிக் கொண்டான். அவன் மனத்தில் விளைந்த வேதனைகள்; இனியும் இழப்பதற்கு எதுவுமில்லையென்றாகப் புதிய சிந்தனையோடு அவன் ஊருக்குப் போகப் புறப்பட்டான்.

# நேரம்

சில்லென்று ஜன்னல் வழியே வந்த குளிர்காற்று அறைக்குள் பரவி நின்றது. கண்ணாடி முன் நின்று டையைச் சரி செய்து கொண்டு மாடிப் படிகளில் வேகமாக இறங்கி வந்தான் உதவி அரசாங்க அதிபரான சறாக்.



**மீராவோடை முபீதா சக்காப்-குவைத்**

"நூரா, சாப்பாடு ரெடியா? நேரமாச்சு."

"ம் ம் ம் ரெடி வாங்க"

"டாடி இதோ பார்த்தீங்களா! நானே செய்த பொம்மை!" முனஸ்ஸா ஆர்வமாகக் கொண்டு வந்து காட்டினாள்.

"அப்படியா டடாக்கு நேரமில்லை. மம்மியிடம் கொண்டு போய்க் காட்டுங்க!" பதில் சொல்லிய சறாக் அதை திரும்பிக் கூடப் பார்க்காமல் சாப்பிட்டு விட்டு மோட்டார் சைக்கிளில் ஏறிப் போய் விட்டான்.

அன்று-பாடசாலையில் ஆண்டு விழா முடிந்து நாடகத்திலும். போட்டிகளிலும் தனக்குக் கிடைத்த பரிசுப் பொருள்களைச் சுமந்தபடி ஆசையோடு வீட்டிற்குள் நுழைந்தாள் முனஸ்ஸா.

"மம்மி! டாடி எங்கே?"

"இன்னும் வரலை. ராத்திரி நேரமாகும்"

"வந்ததும் என்னை எழுப்புங்கம்மா"

இரவு தூங்கிப் போன முனஸ்ஸாவை, சறாக் வந்ததும் சென்று எழுப்பினாள் நூரா. முனஸ்ஸா அவசரமாக எழுந்து அவற்றைத் தூக்கிக் கொண்டு சறாக் எதிரில் வந்தாள்.

"டாடி! எனக்குக் கிடைத்த பரிசுப் பொருள்கள் எத்தனை இருக்கு பாருங்க!"

"வெரிகுட். மம்மிக்கிட்ட காட்டுங்க. டடா டயர்டா இருக்கேன். காலைல பார்க்கலாம். நேரமாச்சு போய்த் தூங்குங்க."

ஒரு வாரம் கழித்து-

சறாக் வீட்டு வாசலில் வந்து நின்றது ஒரு புதிய வெள்ளை நிற டுயோட்டா கிறஸ் ஸிடா கார். சறாக் அதிலிருந்து இறங்கியவன்,

"நூரா! எப்போ கார் வாங்குவீங்கன்னு கேட்டு சண்டை பிடிப்பியே. வாங்கிட்டேன் வந்து பாரேன். எங்கட முனஸ்ஸா குட்டி எங்கே? டேய் டாடி புதுசா கார் வாங்கி இருக்கேண்டா."

"மம்மிக்கிட்ட காட்டுங்க. எனக்கு நேரமாச்சு. நான் அவசரமா ஸ்கூலுக்குப் போறன்."

அவ்வளவு பெரிய கார் நிற்பதைக் கூடத் திரும்பிப் பாராமல் பாடசாலைக்குப் புறப்பட்டு விட்ட மகள் மனதை புரிந்து கொள்ள முடியாத சறாக் திகைத்துப் போய் நின்றான்.

# 'கிளீனிங்-இன்குளூட் வாஷ்ரூம்'

விஜிதா கனடாவுக்கு வந்து மூன்று கிழமைகள் முழுமையாக ஓடி மறைந்து விட்டன. அறையில் சுற்றிச் சுற்றி நாலு சுவரையும் பார்த்ததில் வாழ்க்கை வெறுத்தது. அவளது அண்ணன் சங்கர் செட்டை கட்டாத குறையாக இரண்டு வேலையென்று பறந்து திரிந்து கொண்டிருந்தான். 'கனடா என்ற சொர்க்க பூமி இதுதானா?' என்று ஆசுவாசப் பெருமூச்செறிந்தாள் விஜிதா.

'ட்ரிங்... ட்ரிங்...' என்ற டெலிஃபோன் மணி கிணுகிணுத்தபோது திடுக்கிட்டு நிமிர்ந்தவள் ஃபோன் ரிசீவரைக் கையிலெடுத்தாள். "ஹாய் விஜியா? நான் மைதிலி... உன்ரை ஃபிரெண்ட் மைதா பேசுறனெடி. எப்படியெடி இருக்கிறாய்?" ஃபோனே கலகலப்பது போல் உயிர்த் தோழி மைதிலியின் குரல் காதில் விழுந்ததைக் கேட்டு விஜிதா குழந்தை போல் கதிரையிலிருந்து குதித்து ஒரு முறை துள்ளினாள்.

பரஸ்பரம் இருவருடைய பழைய ஞாபகங்கள் இரை மீட்கப்பட்டதில் கடிகார முள் வினாடிகள், நிமிடங்களை விழுங்கியது போதாதென்று இரண்டு மணி நேரத்தையே தூக்கிச் சாப்பிட்டிருந்தது.

கதை முடிவில் விஜிதாவின் தனிமையைப் போக்க மைதிலி யோசனையொன்று கூறினாள். "இங்கை புதிசா வந்தவைக்கு வேலை செய்யப் பயிற்சி கொடுக்கிற நிலையமொன்று டௌன்ரவுனுக்கை இருக்கடி. ஃபோன் நம்பர் தாறன். உனக்கு ஆங்கிலமும் ஓரளவு சமாளிக்க முடியும் தானே? கொலிஜுக்குப் போக லாண்டட் பேப்பர் கேப்பினம். உனக்கு அது கிடைக்க நாளிருக்கு. பொழுது போகேல்லை எண்டு சிணுங்காமல் அங்கை போடி!" என்று



அட்வைஸ் பண்ணினாள் மைதிலி.

அடுத்தநாளே சங்கரை நச்சரித்து ஒரு மாதிரி பயிற்சி நிலையம் போக அனுமதி எடுத்து விட்டாள். சங்கர் காரில் கொண்டு வந்து 'சென்ரருக்குள்' விட்டுவிட்டு வேலைக்கு நேரமாகி விட்டதென்று போய்விட்டான்.

விஜிதா தயங்கித் தயங்கி உட்சென்றாள். வாசலில் இருந்த 'றிசெப்சனிஸ்ற்' பெண் நளினமான புன்னகையுடன் வரவேற்று அமரச் செய்தாள்.

பரக்கப் பரக்க விழித்துக் கொண்டிருந்த விஜிதாவை "ஹாய்" என்றபடி சிநேகபூர்வமான புன்னகையுடன் வந்த சீனப் பெண்ணின் முகம் பதட்டத்தை நீக்கிச் சிரிக்க வைத்தது. அவள் கையில் சில படிவங்களைக் கொடுத்து வாசித்து நிரப்பும்படி சொல்லி விட்டு சீனப்பெண் அடுத்த அறைக்குச் சென்று விட்டாள்.

இலங்கையில் ஆங்கிலம் படித்து அறிவு கைகொடுத்ததில் சுலபமாக வாசித்து விளங்கிக் கொண்டு வந்தவளின் கண்கள் அந்த வரியில் நிலை குத்தி நின்றது. 'கிளீனிங்-இன் குளூட் வாஷ்ரூம்'. கண்களை நம்பமுடியாமல் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தாள்.

சந்தேகமே இல்லை. 'கிளீனிங்.. இன் குளூட் வாஷ்ரூம் தான்' 'வ்வாக்' என்று வயிற்றைக் குமட்டிக் கொண்டு வாந்தி வந்து தொண்டைக்குள் அடைத்துக் கொண்டது. முகம் அஷ்ட கோணலாகச் சுருங்க அங்குமிங்கும் பார்த்துப் பேந்தப் பேந்த விழித்தாள் விஜிதா.

"ஆர் யூ ரெடி?" என்று வந்த அதே வெள்ளைத் தோல் சீனப் பெண் 'பாப்பாக வெட்டப்பட்டிருந்த தலையைச் சரித்துச் சிரித்தபடி அவளைக் கூட்டிப் போய் வேலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தினாள்.

அடிக்கடி 'கிளீனிங்-இன் குளூட் வாஷ்ரூம்' நினைவில் மோதியதில் அந்த நாளே அருவருப்புடன் நகர்ந்து கொண்டிருந்தது. கனடாவில் வாஷ்ரூம் என்றால் 'ராய்லெட்'டும் சேர்த்துத்தான் சொல்வார்கள். கை வேலை செய்து கொண்டிருக்க நினைவு கட்டறுத்த குதிரை போல் வேகமாகப் பின்னோக்கி ஓடியது.

**'வீட்டுக்குவரும் சலவைத் தொழிலாளி ஒருநாள் வரப்பிந்தியதும், பாட்டியிடம் மாட்டிக்கொண்டு முழித்ததும்...!'**

இலங்கையில் அவள் பிறந்த அல்வாய்க் கிராமத்தில் விஜிதாவின் தந்தை கந்தையா மாஸ்ரரைத் தெரியாதவர்கள் இருக்கவே முடியாது. அப்படி ஒரு பிரசித்தமான குடும்பம். உயர் குடிப் பெருமை வேறு.

அவர் பாதையில் நடந்தால் தோளில் போட்ட சால்வையை மடக்கிக் கையில் பிடித்தபடி 'ஐயா முன்னுக்குப் போங்கோ' என்று மரியாதையுடன் வழி விடுபவர்கள் தான் அதிகம்.

**காந்தி அருணாசலம்**
**கனடா**

அப்போது விஜிதாவுக்குப் பத்துவயதிருக்கும். ஒருநாள் பனையில் கள்ளிறக்கக் குரங்கு போல் தாவிக் கொண்டிருந்த ஒருவரை விஜிதா "மாமா" என்று கூப்பிட பாம்புக் காதுப் பாட்டி அதைக் கேட்டுப் பத்திரகாளியாகி, விஜிதாவை மட்டுமல்ல அந்த மாமாவையும் சேர்த்துத் திட்டிய திட்டு இருக்கிறதே? இப்போது நினைத்தாலும் காதைக் கூசவைக்கும் திட்டுக்கள்... குற்றம் எதுவும் செய்யாமலே கூனிக் குறுகிப் போய் நின்ற அந்த மாமாவின் பரிதாபமான முகம்...

வீட்டுக்கு வரும் சலவைத் தொழிலாளி ஒருநாள் வரப் பிந்தினதற்கு பாட்டியிடம் மாட்டிக் கொண்டு முழி பிதுங்கியதும், தலையைக் கையால் சொறிந்தபடி 'ஹி...ஹி...' என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்ததும் பசுமையாக நினைவில் ஓடியது. "ஏன்ரா உன்ரை தொழிலை நேரத்துக்குச் செய்ய முடியாதே? வீடே அழுக்கு உடுப்பால் நிறைஞ்சு கிடக்கு!" என்று ஒற்றைச் சுட்டு விரலை ஆட்டிக் குற்றம் சுமத்தினாள் பாட்டி.

"விஜி! படிக்கப் போற இடத்தை கண்ட சாதியட்டையும் ஏதும் வாங்கிச் சாப்பிடாதை. எங்கடை குடும்பப் பெருமையை மறந்து போடாதை!" பாடசாலையில் 'பொய் சொல்லக்கூடாது பாப்பா' என்றும் 'சாதி இரண்டொழிய வேறில்லை, என்றும் வாய் கிழியப் பாடம் சொல்லிக் கொடுக்கும் விஜியின் அம்மா வீட்டில் போதிப்பது எதிர் மாறானது. சின்ன வயதிலிருந்தே இப்படியான சூழ்நிலையில் வளர்ந்த விஜிதாவை 'கிளீனிங்-இன்குளூட் வாஷ்ரூம்' அதிர்ச்சியடைய வைத்ததில் வியப்பெதுவுமில்லையே?

குறிப்பிட்ட நேரம் வர இன்னும் ஓர் இலங்கைப் பெண்ணுடன் 'கிளீனிங்'குக்கு ஆயத்தமானாள் விஜிதா.

"விஜி! என்ன முகம் ஒரு மாதிரியாயிருக்கு? எனக்கும் வந்தவுடனை வாஷ்ரூம், ராய்லெட் கிளீனிங் ஒரு மாதிரித்தான் இருந்தது. இங்கை நான் முதல்லை ஸ்கூல்லை படிக்கேக்கை வாஷ்ரூம் கிளீன் பண்ணின ஆட்கள் ஸ்ரைக் நடந்தது. சொன்னால் ஆச்சரியப்படுவாய். அந்த நேரம் எல்லா வாஷ்ரூமும் கிளீன் பண்ணினது பிரின்சிப்பாலும், வைஸ் பிரின்சிப்பாலும்தான். அதுக்குப் பிறகுதான் எனக்கே தெளிவு வந்தது. சாதி மத, தொழில் பேதம் இலங்கை, இந்தியாவில் நடைமுறைக்கு வராவிட்டாலும் கனடாவில் நிஜமாகுது பாத்தியா?" நீண்ட லெக்சர் அடித்த அந்தப் பெண்ணை வியப்புடனும், மரியாதையுடனும், பெருமையுடனும் பார்த்த விஜிதாவின் சுருங்கியிருந்த மனம் விரிந்து பரந்ததில் வித்தியாசமான ஒரு சந்தோஷத்துடன் கை பரபரவென்று அந்த இடத்தைச் சுத்தமாக்கத் தொடங்கியது.

www.padippakam.com

# நாள் கணக்கு



உன்னில் இருந்து
உதிர்ந்த மலர் நான்!

கண்ணில் இருந்து
நழுவிய துளி நான்!

இதயத்தில் இருந்து
கொட்டிய குருதித் துளி நான்!

நெற்றியில் இருந்து
விழுந்த குங்குமம் நான்!

சிற்பியே! நீ துப்பிய
முத்து நான்!

என் கண்களுக்கு
ஒளியாய் இருந்தவனே!

என் இரவுகளுக்கு
விளக்காய் இருந்தவனே!

என் பகல்களுக்கு
சூரியனாய் சுடர்ந்தவனே!

என் வானத்தில்
நட்சத்திரங்களை தூவியவனே!

என் இதயத்துக்கு
புது இரத்தம் பாய்ச்சியவனே!

எங்கே போனாய்?
ஏன் போனாய்?

என் கதை
இப்போது இருண்டு விட்டது!

என் சரிதத்தை
சோகமெனும்
கரிக்கட்டியால்
எழுதிக் கொண்டிருக்கிறேன்!

என் உதிரத்தை
தண்ணீராய் மாற்றி
உன் நினைவுகளுக்கு
காணிக்கையாக்கிக்
கொண்டிருக்கிறேன்!

தனிமை என்பது
பசிகொண்ட மிருகம்!

அதன் பசிக்கு
என் ஊனும், உடலும்
தீனியாகிக் கொண்டிருக்கின்றன!

நீ வருவதற்குள்
நான் இருப்பேனா?

இந்த மிருகம்
என்னை மீதி வைக்காமல்
புசித்து விடுமா?

இரவும், பகலும்
தூங்கவிடாது துரத்துகிறது!

உனக்காக உயிர்வாழ
உன்ன நினைப்பினும்
என்னைத் தடுக்கிறது!

இந்த மிருகத்தோடு
போராடிப் போராடியே
நான் ஈடாடிப் போனேன்!

நாக்கைத் தொங்கப்போட்டு
இரை தேடும்
கொடு மிருகம் தனிமை!

அதன் பற்கள்
பயமுறுத்துகின்றன!

அதன் கைகள்
அசிங்கமாய் நீள்கின்றன!

அதன் பார்வை
பசியோடு பயமுறுத்துகிறது!

அதன் கண்கள்
வா வா என அழைக்கின்றன!

உன் நினைவுகள்
என்னும் ஆயுதங்களால்
இந்த மிருகத்தோடு
போராடிக் கொண்டிருக்கிறேன்!

இந்தப் போராட்டத்தில்
என்னால் வெல்ல முடியுமா?

என் பலமே நீதானே!
என் பாதி நீதானே!

பாதியாய் நிற்கும்
நான் எப்படி
மோதி வெல்ல முடியும்?

நீ வருவாய் என
எனக்குள் ஒரு குரல்
ஒலித்துக் கொண்டிருக்கிறது!

வருவாய் என்பதால்தான்
என் வாய் விஷம் நாடவில்லை!

இந்த மிருகத்தைவிட
விஷம் மேல்!

ஆனால் உன்னைவிட
எதுதான் மேல்?

அதற்காகத்தான்
உன் பாதி இங்கே
உறங்காமல் இருக்கிறேன்!

காதல்
யாரையும் கைவிட்டதில்லை!

காதலர்கள்தான்
காதலை கைவிட்டிருக்கிறார்கள்!

காதல்
யாரையும் எரித்ததில்லை!

காதலர்கள்தான்
தங்களைத் தாங்களே
எரித்துக் கொண்டிருக்கிறார்கள்!

காதலர் செய்த தவறெல்லாம்
காதல்மீது விழுந்து விடுகிறது!

காதலர் செய்த பாவமெல்லாம்
காதல் சுமந்து கொண்டிருக்கிறது!

நாமும் காதலை
கறைப்படுத்தப் போகிறோமோ!

காதலுக்கு நாமும்
பாவத்தை பரிசளிப்போமோ?

ஆம் எனில்
நீ வர வேண்டாம்!
இல்லை எனில்
நீ வரவேண்டும் உடன்!

இல்லையெனில்
நான் தோற்றுப்போவேன்!

அருகில் வந்துவிட்டது
மிருகம்!

அதன் வாய் பிளக்கிறது
அதன் கண்கள் விரிகின்றன!

பாம்பின் வாய்க்குள்
தவளை போவதைப்போல

இதன் பிளந்த வாய்க்குள்
நான் தொலைந்து போகலாம்!

என் காதலா!
என்னை வதைக்கும் காதகா!
பெண்ணை மயக்கும் பேரழகா!
உன்னவள் குரல் கேட்கிறதா?

நீ சுவைத்த இதழ்களில்
தனிமை விஷம் பூசுகிறது!

நீ தழுவிய மேனியில்
தனிமை தீ வைக்கிறது!

நீ வருடிய அங்கங்களில்
தனிமை பிறாண்டுகிறது!

என் காதலா!
என்னை உண்ட காதகா!
'வெண்ணெய் உருகினால்
நெய்யாகும்.
என்னை உருக்கினால்
நீயாவேன்!'
என்று சொன்னதை மறந்தாயா?

என்னை தனிமை உருக்கையிலே
உன்னை இங்கே காணலையே?

கொப்பரைக்குள்ளே
விழுந்தாற்போல்
படுக்கையறைக்குள்
என் தேகம்!

வெட்கத்தைவிட்டு
சொல்லுகிறேன்:
பக்கத்தில் தலையணை
நசிந்து நன்றாய் வதைந்தாச்சு!

நீ வருவாய் என
நெஞ்சம் சொல்லுகிறது!

நீ வருவாய் என
உன் திசைக் காற்றும் வந்து
என் காதில் சொல்கிறது!

வராது எங்கே போவாய்
கடலைத் தேடிவரும்
நதிதானே நீ!

வருவாய் என நான்
அறிவேன்!
எப்போது வருவாய்
எனத்தான் அறியேன்!

தாமதமாகும்
ஒவ்வொரு நாளும்
இந்தத் தெப்பம்
துடுப்பின்றி அல்லாடுகிறது!

தூரத்தில் கரை இருக்கிறது
வந்து ஒரு கை கொடு
இருவருமாய் கரை காண்போம்!
எந்தக் கரை என்பது
உனக்கா தெரியாது!

என் வாழ்க்கையில்
இதுபோன்றே
நீளமான நாட்கள்
இதற்குமுன் வந்ததில்லை!

தருவது ரதிகன்

## இலக்கிய நயம்

ஒருநாள் என்பது
ஏழு நாளுக்கு இணை!

என்னோடு நீயிருந்தால்
ஏழுநாள் ஒருநாளாகும்.
என்னோடு நீயில்லாத போது
ஏங்கும் ஒருநாள்
ஏழு நாள் போல் நீளும்!

ஏழு நாள் பிரிவு
நாற்பத்தொண்பது நாளுக்கு
சமம்!

ஆகவே காதகா!
நாளையோடு
நாம் பிரிந்து
ஐம்பது நாட்கள்!

இதற்கு மேலும்
என் உள்ளமும் தாங்காது
தேகமும் தாங்காது!"

இந்தக் காதலியின்
நாள் கணக்குத்தான்
எதிர்பார்த்து ஏங்கும் காதலர்
யாவருக்கும் உரிய கணக்கு.
இதோ திருவள்ளுவர் கூறுகிறார்:

**"ஒருநாள் ஏழுநாள் போல்**
**-செல்லும் சேண் சென்றார்**
**வருநாள் வைத்து ஏங்கு பவர்க்கு"**

*அதிகாரம்: 127 பாடல்: 1269*

## சிந்தியா பதில்கள்

**➲ பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் தோல்வி அடைந்ததாக வெளியான செய்திகள் உண்மையா?**

இ.வாகீசன், கொழும்பு-09.

டாக்டர் ராமதாஸ் தேர்தல் எதிலும் போட்டியிடுவதில்லை என்ற கொள்கை கொண்டவர். சில மாதங்களுக்கு முன்னர் பிரதமர் வாஜ்பாய் அவரை பாராளுமன்றம் வந்து தன்னைச் சந்திக்க அழைத்தபோதும் "அங்கு வரமாட்டேன். வெளியே சந்திக்கலாம்!" என்று சந்தித்தவர். வாஜ்பாய்கூட அவரது உறுதி கண்டு வியந்து போனாராம். இப்போது தோல்வி கண்டிருப்பது பேராசிரியர் ராமதாஸ். பெயர் குழப்பத்தால் பிழையான செய்தி வந்திருக்கலாம்.

**➲ இந்தியத் தேர்தல் முடிவுகள் பற்றி உமது கருத்தைக் கூறும்?**

பா.சௌந்திரநாயகம், நீர்கொழும்பு.

இந்தியப் பிரதமராக நேரு குடும்பம் சாராத எவரும் ஒரே ஒரு முறைதான் பிரதமராக இருந்துள்ளனர். அந்த மரபை உடைத்து நேரு குடும்பம் சாராத ஒருத்தர் மேல் இந்திய மக்கள் இத்தனை அபிமானமும், நம்பிக்கையும் வைத்திருப்பது இதுவே முதல்முறை! கார்க்கில் ஊடுருவல்காரருக்கும் பாரதிய ஜனதா நன்றி சொல்ல வேண்டும். அவர்கள் ஊடுருவியதால்தான் வாஜ்பாயின் உறுதி இந்தியாவுக்கே பளிச் பளிச்சென்று தெரிந்தது!

**➲ சிந்தியா! தற்போது நம்நாட்டில் உள்ள தனியார் வானொலிகளில் தங்களைக் கவர்ந்த வானொலி எது?**

மி.உதயா, கொழும்பு-06.

தமிழ் உச்சரிப்பிலும், அதனைப் பயன்படுத்தும் ஆர்வத்திலும் 'சக்தி' எஃப்.எம். முன்னணியில் நிற்கிறது. அடுத்ததாக சூரியன். 'சொர்ண ஒலி' இப்போதுதானே வந்திருக்கிறது! எடுத்த எடுப்பில் விமர்சிப்பது முறையல்லவே!

**➲ சமீபத்திய இந்தியத் தேர்தலில் பரிதாபத்துக்குரியவர்கள் யார் சிந்தியா?**

என்.அருண்மொழி, நுவரெலியா.

சுப்பிரமணியம் சுவாமி. லல்லு பிரசாத் யாதவ். மாட்டுத் தீவன ஊழலில் பெயர் பெற்றவர் லல்லு. இவரை லொள்ளு என்றும் கூறுவர். இவர் பற்றிய தமாஷ் கதை ஒன்று பார்க்கலாம்:

பீகார் மாநிலத்தை பார்வையிட ஜப்பானிய நிபுணர்கள் சிலர் வந்திருந்தனர். அவர்கள் லல்லுவிடம் கூறினார்கள்:

"பீகாரில் இத்தனை அருமையான வளங்கள் உள்ளனவே. எங்களிடம் ஒரு மூன்று வருடங்கள் பீகாரை ஒப்படைத்தால், இன்னொரு ஜப்பானாக மாற்றிவிடுவோம்!"

அதற்கு லல்லு கூறினார்:

"ப்பூ.. இவ்வளவு காலம் தேவையா? நீங்கள் என்னிடம் ஜப்பானை ஒப்படையுங்கள். அதனை மூன்றே நாட்களில் பீகாராக்கித் தருகிறேன்!"

**➲ எதிலுமே மன நிறைவு கொள்ளாது மூக்கால் அழுதபடி தரித்திர வடிவாக இருப்பவர்களுக்கு புத்தி கூறுங்கள்?**

ஆ.குமுதினி, யாழ்ப்பாணம்.

புத்தியால் நாய்வாலை நிமிர்த்த முடியுமா? உங்களுக்காக ஒரு மேல்நாட்டுக் கதை.

எபினேசர் என்று ஒரு விவசாயி இருந்தார். தன் தோட்டத்தில் வரும் விளைச்சலைப் பற்றிக் குறை கூறிக்கொண்டே இருப்பார்.

"இந்த ஆண்டு பலத்த காற்று நாசம் பண்ணிவிட்டது. பூ எல்லாம் உதிர்ந்து விட்டது. ஆப்பிள் விளைச்சல் போச்சுது" என்பார்.

"ஐயய்யோ இந்தப் பருவத்தில் மழை அதிகம். காய் கனிகள் எல்லாம் அழுகி விட்டன" என்பார் இன்னொரு தடவை.

ஒரு வருஷம் அவரது தோட்டத்தில் நல்ல விளைச்சல். தோட்டத்தில் ஆப்பிள் நன்றாக விளைந்தது. நல்ல வருமானம் கிடைத்தது. இப்போது அவர் குறை கூறமாட்டார் என்று அக்கம் பக்கத்தில் உள்ளோர் நினைத்து பேச்சுக் கொடுத்தும் பார்த்தனர்.

அப்போதும் அவர் தலையில் கையை வைத்தபடி சொன்னார்:

"என்ன போங்கள். இந்த ஆண்டு பன்றிகளுக்குப் போட அழுகல் பழங்களே இல்லாமல் போய்விட்டதே!"

**➲ வீரவிதான இயக்கம் இப்போது புதிய புதிய நிபந்தனைகளை முன்வைத்து வருகிறதே?**

பி.செந்தில்குமார், பசறை.

நிறைவேற்று அதிகாரத்தை அவர்களிடம்தானே கொடுத்திருக்கிறார்கள்!

**➲சிந்தியா! பாரதிய ஜனதா பலத்தோடு பதவியில் அமருவதால் இலங்கை இனப்பிரச்சனையில் தலையிடுமா?**

க.பாலச்சந்திரன், வவுனியா.

தற்போதைக்கு அதற்கான வாய்ப்பு இல்லை. சோனியாவும், காங்கிரசும் பதவிக்கு வருவதைவிட பாரதிய ஜனதா வந்திருப்பது மேல். அவ்வளவுதான்! இவர்கள் கண்டிக்கிறார்களோ இல்லையோ, கண்டித்து விடுவார்களோ என்றொரு நினைப்பு நம் நாட்டு அரசுக்கு இருக்கும். அந்த அம்மையார் வந்திருந்தால் கண்டுகொள்ளவே மாட்டார் என்ற நினைப்பில் இங்குள்ள அரசாங்கம் மிதந்திருக்கும்!

**★ சிந்தியா! துக்ளக் சோகூட அ.தி.மு.கவுக்கு செல்வாக்கு கிடையாது. வாஜ்பாயை கவிழ்த்ததால் மக்கள் கோபத்தில் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். நீர் மட்டும் எப்படி ஜெயலலிதா சென்ற தேர்தலில் கிடைத்தளவு ஆசனங்களைப் பெறாதுவிட்டாலும் படு தோல்வி காணமாட்டார் என்று கூறியிருந்தீர். நீர் என்ன ஜோசியரா?**

பி.மகேஸ்வரன், கொழும்பு-10.

அதில் ஒரு ஆச்சரியமுமில்லை. நம் விருப்பு, வெறுப்புக்கு அப்பால் நிலவரங்களை ஆராய்ந்தால் உண்மைக்கு நெருக்கமாகப் போய்விடலாம். சோ சிறந்த விமர்சகர்தான். ஆனால் பாரதிய ஜனதா வெல்ல வேண்டும் என்ற சொந்த விருப்பத்தில் இருந்து விஷயங்களை நோக்கியதால்தான் அவர் கணிப்புக்கள் சென்ற முறையும், இம்முறையும் பொய்த்தன!

தமிழ் நாட்டில் யாகவா முனிவர் என்று ஒருத்தர் இருக்கிறார். அந்த மனிதர் இம்முறை தேர்தல் காலத்தில் கூறிய ஜோதிடம் என்ன தெரியுமா?

"காங்கிரஸ்தான் இம்முறை பெரும்பான்மை பெறும். ஆனால் சோனியா பிரதமராக மாட்டார்"

இப்போது சொல்லுங்கள்! ஆருடக்காரரை நம்பலாமா? இந்த யாகவா முனிவரிடம்தான் ரஜினியும் போய் தவம் கிடந்தார்.

**➲ ஒவ்வொருவர் கண்ணோட்டமும் வித்தியாசப்படுவது ஏன்? கண்கள் ஒன்றுதானே?**

தி.மாதவன், மட்டக்களப்பு.

அறிவும், அனுபவமும் வேறுதானே! இதோ ஒரு தமாஷ்:

தந்தி முறையைக் கண்டுபிடித்தவர் சாமுவேல் மோர்ஸ். இவர் ஒரு சிறந்த ஓவியர். அவரும் ஒரு டாக்டரும் நண்பர்கள்.

ஒரு நோயாளி மரணப் படுக்கையில் இருப்பது போல வரைந்த சாமுவேல் அதனைத் தன் டாக்டர் நண்பரிடம் காட்டினார்.

டாக்டர் அதனை நன்கு உற்றுப் பார்த்து விட்டு சாமுவேலிடம் கூறினார்:

"மலேரியாவாக இருக்கும் என்று நினைக்கிறேன்!"

**➲ சிந்தியா! இந்த உலகில் நான் யாரை, எப்படிப்பட்டவர்களை நம்புவது?**

கி.இந்திராணி, யாழ்ப்பாணம்.

முதலில் உங்களை நீங்கள் நம்புங்கள்!

**➲ தற்போதைய பாரதிய ஜனதா அரசுக்கு ஏனைய கூட்டணிக் கட்சிகள் தலைமிடி கொடுக்காதா?**

ஆர்.பரமநாதன், கொழும்பு-11.

கலைத்ததுக்கு இம்முறை மக்கள் குட்டுக் கொடுத்திருப்பதால், இனிமேல் அவசரமாக கலைப்புச் செய்யமாட்டார்கள். ஆரம்பத்தில் சிறு உரசல்கள் இருந்தாலும் வாஜ்பாய் இம்முறை ஓட்டங்கள் குவிப்பார்.

**➲ 'பூப்பறிக்க வருகிறோம்! எப்படி?**

அ.ஜெயதேவன், ஹெந்தளை.

மாளவிகாதான் பூ!
ஆனால்
வெட்கம் மறந்த பூ!



மாளவிகா

**➲சேது சமுத்திரத் திட்டம் புத்துயிர் பெறுமா?**

மு.பாக்கியநாதன், ஆவரங்கால்.

அதனை நினைத்துத் தான் இங்கு அரச தரப்பே ஆடிப்போய் நிற்கிறது!


**➲ பொலிஸ் பதிவுத் துண்டு தேவை இல்லையாமே?**

அ.குணேந்திரன்.

தொல்லை தவிர்ப்புக்குழுவை நம்பினால், தம்பி எண்ணுவீர் கம்பி!

## ஸ்போர்ட்ஸ்

### முதலிடத்தில் மக்கிராத்



'ஸ்டம் விஷன்' என்னும் நிறுவனம் கிரிக்கெட் வீரர்களின் தரவரிசைப் பட்டியலொன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது. இந்த வருடம் ஜனவரி 1ம் திகதியில் இருந்து செப்டெம்பர் மாதம் வரை நடந்த போட்டிகளின் அடிப்படையிலேயே இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் கிளென் மக்கிராத் 39 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி முதலிடத்தில் உள்ளார். பாகிஸ்தானின் சுழற்பந்துவீச்சாளர் சக்லெய்ன் முஷ்டாக் 32 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி இரண்டாவது இடத்தில் உள்ளார். மூன்றாவது இடத்தில் 29 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே உள்ளார்.

துடுப்பாட்ட வரிசையில் மேற்கிந்தியத் தீவுகளின் கப்டன் பிரையன் லாரா முதலிடத்தில் இருக்கிறார்.

### மேற்கிந்தியத்தீவுகள் வெற்றி

பங்களாதேஷிற்கு குறுகிய கால சுற்றுலா ஒன்றை மேற்கொண்ட மேற்கிந்தியத்தீவுகள் அணி பங்களாதேஷ் அணியை எதிர்த்து விளையாடி 2 ஒருநாள் போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளது.

முதல் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் 73 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 292 ஓட்டங்களை எடுத்தது. சந்தர்போல் 92 ஓட்டங்களையும், ஜிம்மி அடம்ஸ் 46 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 219 ஓட்டங்களை எடுத்தது. அல்ஷாரிடர் 62 ஓட்டங்களையும், காலித் மஷுத் 53 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இரண்டாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் 109 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்களில் 314 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்கு பங்களாதேஷ் 205 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் பிரையன் லாரா 117 ஓட்டங்களைக் குவித்தார். இவர் சதமடிக்க 45 பந்துகளை மட்டுமே எதிர்கொண்டார். இதன் மூலம் ஒருநாள் போட்டிகளில் 48 பந்துகளில் சதமடித்த சனத் ஜெயசூரியாவின் சாதனையைக் கடந்தார் லாரா. எனினும் பாகிஸ்தானிய வீரர் ஷஹிட் அஃப்ரிடிதான் மிகக் குறைந்த பந்துகளில் (37) சதமடித்த சாதனையாளராகத் திகழ்கிறார்.

அத்துடன் ஒருநாள் போட்டிகளில் லாரா 6 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ளார். லாராவுக்கு முன்னதாக மேற்கிந்தியத்தீவுகள் அணியில் விவியன் றிச்சர்ட்ஸ், டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ், றிச்சி றிச்சர்ட்சன் ஆகியோர் மட்டுமே 6 ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டியவர்கள்.

### இந்திய – நியூஸிலாந்துப் போட்டிகள்

இப்போது இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்திருக்கும் நியூஸிலாந்து, இதற்கு முன் 7 தடவை இந்தியாவுக்குச் சென்றுள்ளது. ஆனால் ஒருமுறைகூட அவர்களால் டெஸ்ட் தொடரை வெல்ல முடியவில்லை. எனினும் உலகக்கோப்பைப் போட்டிக்குப் பின் இங்கிலாந்து அணியை அவர்களது மண்ணிலேயே 2-1 என்ற கணக்கில் வென்று, உற்சாகத்தில் இருக்கிறது நியூஸிலாந்து.

இதுவரை இந்தியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் 37 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன. அவற்றில் இந்தியா 13ல் வெற்றியும், 7ல் தோல்வியும், 17ல் வெற்றி-தோல்வி இல்லாமலும் கண்டுள்ளது.

இந்திய-நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெறும் டெஸ்ட் போட்டிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:

முதல் டெஸ்ட் ஒக்டோபர் 10-14 வரை மொஹாலியிலும், இரண்டாவது டெஸ்ட் ஒக்டோபர் 22-26 வரை கான்பூரிலும், மூன்றாவது டெஸ்ட் ஒக்டோபர் 29-நவம்பர் 02 வரை அகமதாபாத்திலும் நடைபெறுகின்றன.

### இவர்தான் அவர்



மாதுரி டிக்ஷித்

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 22

ஆண்டவருடைய திருக்குமாரரான இயேசுபிரானைச் சுற்றலும் எதிரிகள் சூழ்ந்து கொள்கின்றனர். திருச்சட்ட நூல் அறிஞர்கள் எனப்படுவோரும் பரிசேயரும், அதுகாலவரை ஆண்டவரின் பேரைச் சொல்லி யூதா இன மக்களை ஏமாற்றியே வந்தனர். சுயநல நோக்கோடு அவர்கள் வைக்கும் சட்டதிட்டங்களுக்கு மக்களை அடி பணிய வைத்தனர். ஒன்றுமே அறியாத பாமர மக்கள், நல்ல வழிகாட்டலின்றி, இத்தகைய ஏமாற்றுக்காரர்களின் வலையில் சுலபமாக வீழ்ந்து அல்லலுற்று வந்தனர்.

ஆலயக் குருமாரும் இத்தகைய ஏமாற்றுக்கும்பலுக்கு உறுதுணையாக நின்றனர். பரிசுத்தமான நோக்கோடு எருசலேமில் நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தை, ஆண்டவருக்கே அடுக்காத கூத்துக்களின் கூடாரமாக்கி, அதன் புனிதத்தன்மையைக் கெடுக்கும் வகையில், ஆலயத்தை ஒரு வர்த்தக நிலயமாக்கி, அதனால் பெறப்படும் வருமானத்தை, தமது சொந்தக் கேளிக்கைகளில் செலவிட்டும் வந்தனர்.

# எதிரிகளின் சதித் திட்டம்

இவ்வாறான மோசடிகள் ஆண்டவரின் பெயரால் நடைபெற்று வந்ததை இயேசுபிரான் கண்டித்தார். அத்துடன் அவருடைய போதனைகள், அதுவரை காலம், அறியாமை இருளில் கிடந்த பாமரமக்களை விழித்தெழ வைத்தன. மக்கள் இயேசுபிரான் காட்டிய புதுநெறியில் செல்லவும் உண்மையான நடைமுறைகளைப் பின்பற்றவும் தொடங்கிவிட்டால், இந்த ஏமாற்றுக்காரர்களின் வேடம் கலைக்கப்பட்டு, மக்கள் மத்தியிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டுவிடுவார்கள் என்று மேற்படி முத்தரப்பினரும் கவலைப் படலானார்கள். ஆகவே இயேசுபிரானின் வாயை அடைத்து விடவேண்டும்; அவருடைய அறிவுரைகளை மக்கள் கேட்காமல் செய்துவிட வேண்டும், என்று கருதலாயினர்.



இயேசு பிரானை ஒரு போலி வேடதாரி என்று மக்களிடம் நிரூபிக்கும் பொருட்டு அவர் செல்லுமிடங்களுக்கெல்லாம் சென்று, குதர்க்கவாதத்தால் அவரை முறியடித்துவிட பெருமுயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் அவை எதுவுமே வெற்றியளிக்கவில்லை. இயேசுபிரானைப் பிடித்துச் சித்திரவதை செய்து ஒழித்துக்கட்டிவிடலாம் என்றும் திட்டமிட்டனர். இதுகூட சாத்தியப்படவில்லை. இயேசுபிரான் மீது அளவிடற்கரிய பக்தியுடன் கூடிய பிரியம் வைத்து, பல்லாயிரக்கணக்கில் அவரைத் தொடரும் மக்களால் தங்களுக்கே மோசம் ஏற்பட்டுவிடுமோ என்றும் அஞ்சி, ஒதுங்கி நின்றே-தருணம் வரும் வரை காத்திருந்தனர்.

இக்கால கட்டத்திலும் மிகச் சுலபமாக மக்களுக்குப் புரியக்கூடிய உவமைகளைக் கூறி, விண்ணரசு பற்றிய போதனைகளை இயேசுபிரான் மக்களிடம் தொடர்ந்து போதித்து வந்தார்.

விண்ணரசு எத்தன்மையினதாக இருக்கும் என்பதை விளக்க, மணமகன் காலம் தாழ்த்தி திருமணத்துக்கு வந்து சேர்ந்த கதையைக் கூறினார். மண மகனை வரவேற்பதற்காகக் காத்திருந்த தோழியர்கள் இரு சாராரைப்பற்றிய கதையைக் கூறினார். அந்த வைபவத்தின்போது விளக்குகளை ஏற்றி வழி நடத்த வந்திருந்த முன்மதியுடையோர், விளக்குகளுக்குப் பயன்படுத்துவதற்காக மேலதிகமான எண்ணை கொண்டு வந்திருந்தனர். ஆனால் அறிவிலிகள் அவ்வாறு மேலதிகமான எண்ணை எதனையும் எடுத்து வரத் தவறி விட்டனர்.

மணமகன் வந்ததும் அறிவிலிகளின் விளக்குகள் எண்ணை தீர்ந்து அணையும் நிலையில் இருந்தன. ஆகவே முன்மதியுடையோரை அணுகி தங்கள் விளக்குகளுக்கு எண்ணை தந்துதவுமாறு கோரினர். ஆனால் முன்மதியினர் எண்ணெய் கொடுக்க மறுத்து விட்டனர்.

இக்கதையை மேலும் இயேசு பிரான் இவ்வாறு தொடர்கிறார்.

"அவர்களும் எண்ணை வாங்கப் புறப்பட்டுச் சென்றார்கள். அப்போது மணமகன் வந்து விட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடு திருமண மண்டபத்துக்குள் புகுந்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது. பிறகு மற்றத் தோழிகளும் வந்து, 'ஐயா, ஐயா, எங்களுக்குக் கதவைத் திறந்துவிடும்' என்றார்கள். அவர் மறுமொழியாக, 'உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்; எனக்கு உங்களைத் தெரியாது' என்றார். எனவே விழிப்பாயிருங்கள்; ஏனெனில் அவர் வரும் நாளோ வேளையோ உங்களுக்குத் தெரியாது."

### தாலந்து உவமை

இவ்வாறு கூறிய இயேசுபிரான், அடுத்து விண்ணரசு பற்றி தாலந்து உவமை ஒன்றின் மூலம் விளக்கினார்:

"விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சி வாயிலாகவும் விளக்கலாம்: நெடும் பயணம் செல்லவிருந்த ஒருவர் தம் பணியாளர்களை அழைத்து அவர்களிடம் தம் உடைமைகளை ஒப்படைத்தார்.

அவரவர் திறமைக்கு ஏற்ப ஒருவருக்கு ஐந்து தாலந்தும் வேறொருவருக்கு இரண்டு தாலந்தும், இன்னொருவருக்கு ஒரு தாலந்தும் கொடுத்துவிட்டு நெடும் பயணம் மேற்கொண்டார்.

ஐந்து தாலந்தைப் பெற்றவர் போய் அவற்றைக் கொண்டு வாணிகம் செய்து வேறு ஐந்து தாலந்து ஈட்டினார்.

அவ்வாறே இரண்டு தாலந்து பெற்றவர் மேலும் இரண்டு தாலந்து ஈட்டினார்.

ஒரு தாலந்து பெற்றவரோ போய் நிலத்தைத் தோண்டித் தம் தலைவரின் பணத்தைப் புதைத்து வைத்தார்.

நெடுங்காலத்திற்குப் பின் அந்தப் பணியாளர்களின் தலைவர் வந்து அவர்களிடம் கணக்குக் கேட்டார். ஐந்து தாலந்து பெற்றவர் அவரை அணுகி, வேறு ஐந்து தாலந்தைக் கொண்டு வந்து, 'ஐயா, ஐந்து தாலந்தை என்னிடம் ஒப்படைத்தீர்; இதோ பாரும், இன்னும் ஐந்து தாலந்தை ஈட்டியுள்ளேன்' என்றார். அதற்கு அவருடைய தலைவர் அவரிடம், 'நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும்!' என்றார்.

இராஜகுமாரன்

இரண்டு தாலந்து பெற்றவரும் அவரை அணுகி, 'ஐயா நீர் என்னிடம் இரண்டு தாலந்து ஒப்படைத்தீர். இதோ பாரும், வேறு இரண்டு தாலந்து ஈட்டியுள்ளேன்' என்றார். அவருடைய தலைவர் அவரிடம், 'நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும்' என்றார்.

ஒரு தாலந்தைப் பெற்றுக் கொண்டவரும் அவரையணுகி, 'ஐயா, நீர் கடின உள்ளத்தினர்; நீர் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவர்; நீர் தூவாத இடத்திலும் விளைச்சலைச் சேகரிப்பவர் என்பதை அறிவேன். உமக்கு அஞ்சியதால் நான் போய் உம்முடைய தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன். இதோ பாரும், உம்முடையது' என்றார்.

அதற்கு அவருடைய தலைவர், 'சோம்பேறியே! பொல்லாத பணியாளனே! நான் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவன். நான் தூவாத இடத்திலும் போய் சேகரிப்பவன் என்பது உனக்குத் தெரிந்திருந்தது அல்லவா? அப்படியானால் என் பணத்தை நீ வட்டிக் கடையில் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நான் வரும்போது எனக்கு வர வேண்டியதை வட்டியோடு திரும்பப் பெற்றிருப்பேன்' என்று கூறினார்.

'எனவே அந்தத் தாலந்தை அவனிடமிருந்து எடுத்துப் பத்துத் தாலந்து உடையவரிடம் கொடுங்கள். ஏனெனில் உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும். அவர்கள் நிறைவாகப் பெறுவர். இல்லா தோரிடமிருந்து அவரிடமுள்ளதும் எடுக்கப்படும். பயனற்ற இந்தப் பணியாளைப் புறம்பேயுள்ள இருளில் தள்ளுங்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்' என்று அவர் கூறினார்.

### அனைவருக்கும் தீர்ப்பு

"வானதூதர் அனைவரும் புடைசூழ மானிட மகன் மாட்சியுடன் வரும்போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்று கூட்டப்படுவர். ஓர் ஆயர் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்துச் செம்மறியாடுகளை வலப்பக்கத்திலும் வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் நிறுத்துவதுபோல் அம்மக்களை அவர் வெவ்வேறாகப் பிரித்து நிறுத்துவார்.

பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, 'என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள்; உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள்; தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள்; அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்; நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்; நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக் கொண்டீர்கள்; சிறையில் இருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள்' என்பார்.

அதற்கு நேர்மையாளர்கள் 'ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம், அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத்தேடி வந்தோம்?' என்று கேட்பார்கள்.

அதற்கு அரசர், 'மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்' எனப் பதிலளிப்பார். பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, 'சபிக்கப்பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற- என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தணிக்கவில்லை. நான் அன்னியனாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக் கொள்வில்லை. நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை' என்பார்.

அதற்கு அவர்கள், 'ஆண்டவரே, எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ, அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ இருக்கக் கண்டு உமக்குத் தொண்டு செய்யாதிருந்தோம்?' எனக் கேட்பார்கள். அப்பொழுது அவர், 'மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்!' எனப் பதிலளிப்பார். இவர்கள் முடிவில்லாத் தண்டனை அடையவும் நேர்மையாளர்கள் நிலை வாழ்வு பெறவும் செல்வார்கள்!"

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 19 விடை:** திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளை எது?

**பரிசு பெறுவோர்:**

1. ஜி. எனஸ்டாமேரி, அலுத்கேல்ல, இறக்குவானை.
2. கே. சுகிர்தன், பிஸ்மி ஃபாம், வறக்காப்பொல.
3. செ. திலகராணி, களுதாவளை-04, களுவாஞ்சிக்குடி.
4. மொஹமட் இஃப்திகார், காக்கைத்தீவு, கொழும்பு-15.
5. எம்.ஜே. நலீஃபா, அப்புத்தளை வீதி, பண்டாரவளை.

**திருமறை [பு.ஆ] 22 வினா :-** ஒரு தாலந்தைப் பெற்றவர் அதனை என்ன செய்தார்?

ஒக்டோபர் 23 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:
**திருமறை பு.ஆ.22– தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# முத்துத்தம்பியும் கந்தசாமியும்



**கா.பூ.க:** சோனியா காந்தி பெல்லாரியில் வெல்லுவது சந்தேகம் என்ற இந்தியப் பத்திரிகைகள்கூட சொல்லிக் கொண்டிருக்கும்போது, 'முரசு' மட்டும் பெல்லாரி சோனியாவுக்குத்தான் என்று உறுதியாக எப்படிச் சொன்னது?

**மு:** அதற்குப் பெயர்தான் 'முரசு'. அதுமட்டுமோ எங்கட சிந்தியா 'ஜெயலலிதா பற்றி சொன்னதும் பலித்துவிட்டதல்லோ?

**கா.பூ.க:** படுதோல்வி காணமாட்டார். ஆனால் சென்ற முறையைவிட ஆசனங்கள் குறையும் என்றுதானே கூறியிருந்தவர்.

**மு:** கச்சிதமாகப் பொருந்தியிருக்குதல்லோ? ஜெயலலிதா படுதோல்வி காணுவார் என்று ஒரு சாராரும், சேரும் கூட்டத்தைப் பார்த்தால் பெருவரியான வாக்குத் திரளுமோ என்று மற்றொரு சாராரும் சந்தேகப்பட்டவை. 'முரசு' மட்டும் தெளிவாகச் சொல்லிப் போட்டுது.

**கா.பூ.க:** ஜனாதிபதி செய்மதியூடாக மக்களுடன் உரையாடுகிறாராம்?

**மு:** மக்களை நேரில் சந்திக்கவே முடியாதளவுக்கு அம்மையாருக்கே பாதுகாப்பு நெருக்கடி என்பது தெரிகிறது! தகவல் தொடர்பு தொழில் நுட்பம் வளர்ந்திருக்காது விட்டால், இப்படி எட்டத்தில் இருந்து சனத்துக்கு கிட்டத்தில் இருப்பது மாதிரி பேசமுடியுமோ? என்னதான் இருந்தாலும் அதிக உச்சியில் இருப்பவரில் இருந்து உள்ளங்காலடியில் இருப்போர்வரை புலிகளை நினைத்து கிடு கிடுத்துப் போயிருக்கினம்.

**கா.பூ.க:** சுதந்திரம் இல்லாத வாழ்க்கை. ஆள், அம்பு சேனை இருந்தும், ஆயிரம் வசதிகள் இருந்தும் ஓய்வு பெற வெளி நாட்டுக்குத்தான் போக வேண்டிக்கிடக்கு. ஒளித்திருந்துதான் மக்களோடும் பேச வேண்டிக்கிடக்கு.

**மு:** தமிழ் பேசும் சனத்துக்கு தங்கள் தலைவிதியை தாங்களே நிர்ணயிக்கும் சுதந்திரத்தைக் கொடுத்தால், எல்லாருமே இந்த நாட்டில் சுதந்திரமாக இருக்கலாமல்லோ?

**கா.பூ.க:** அது உமக்குத் தெரியுது. தெரிய வேண்டியவைக்குத் தெரியவில்லையே!

**மு:** தெரிந்து என்ன செய்கிறது? தீர்வுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால், பேரினவாதப் பூதம் கொடுக்குக்குள் இருக்கிற விஷத்தை தங்கள்மீது துப்பிப்போடும் என்று பயம்.

**கா.பூ.க:** அப்படியானால், பூதத்திடம் இருந்து தப்பிப்பிழைக்கக்கூடிய வாதங்களைத்தான் கூறிக்கொண்டிருப்பினமாக்கும்.

**மு:** பின்னே வேறு வழி? தேர்தலுக்கு இன்னமும் இருப்பதோ சில மாதங்கள்! பார்த்துக் கொண்டு நிற்குது பூதம்! பயபக்தியோடு கைகட்டி நிற்கினம் சிங்கள அரசியல்வாதிகள்.

**கா.பூ.க:** ரணிலார் ஏதோ கூறியிருக்கிறாரே?

**மு:** அவர் எங்களுக்கு அணில் விடுகிறார். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்றால் அவருக்கும் வேப்பங்காய். ஸியாம் பொக்ஸ் மாதிரி தங்களோடு சேர்ந்து நாடகமாடக்கூடிய அனுசரணையாளர் ஒருவர்தான் அவருக்குத் தேவை.

**கா.பூ.க:** ஸியாம் பொக்ஸ் என்ன செய்தவர்?

**மு:** அம்மையாருக்கும்ரணிலாருக்கும் இடையே தபால்காரர் உத்தியோகம் பார்த்தவர்.

**கா.பூ.க:** 'போஸ்ட்மென் பொக்ஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்லுங்கோவேன்!

**மு:** அதே, அதே! மொத்தத்தில் போஸ்ட்மென் தேடுகிறார் ரணில். யுத்தத்தில் வெற்றி தேடித்தரத்தக்க 'பாஸ்ட்மென்' தேடுகிறது அரசாங்கம்.

**கா.பூ.க:** அதுதான் படை அதிகாரிகளை பிற நாடுகளுக்கு அனுப்பி பயிற்சி பெற வைக்கினமாக்கும்?

**மு:** பயிற்சி என்ன பயிற்சி? தமிழ்க் கட்சிகளிலும் பலர் பயிற்சி எடுத்தவைதானே! கடைசியாக என்ன நடந்தது.

**கா.பூ.க:** ஓட்டப் பயிற்சி மட்டும்தான் கை கொடுத்தது!

**மு:** ஆனால் புலிகளின் தலைவர் எந்த நாட்டிடமும் பயிற்சியும் பெறவில்லை; பாடமும் படிக்கவில்லை. உலகத்திலேயே அதிசிறந்த கெரில்லா உத்திகளை வகுப்பவராகவும், மரபுச் சண்டை தந்திரோபாயங்களில் கை தேர்ந்தவராகவும், பல்லாயிரம் படைகளை சிறுபடை கொண்டு எதிர்த்து நிற்பவராகவும் இருக்கிறார்.

**கா.பூ.க:** உது புலிகளுக்கு சார்பான பேச்சல்லோ?

**மு:** உண்மையைச் சொன்னால் புலிகளுக்கு சார்பான பேச்சோ? புலிகளோடு பல விஷயங்களில் எனக்கு முரண்பாடு இருக்கத்தான் செய்யுது. அதுக்காக பொய்யைச் சொல்லச் சொல்லுகிறீரோ?

**கா.பூ.க:** பட்ஜெட் வரும் பின்னே, அது பற்றிய செய்திகள் வரும் முன்னே. அது ஏன் முன்கூட்டியே கசியவிடுகினம்?

**மு:** அதிர்ச்சியான செய்திகளை மெல்ல மெல்லத்தானே நோயாளர்களிடம் சொல்லவேண்டும். நாட்டு மக்கள் நோயாளிகள். அதுதான் பாதுகாப்பு செலவீனத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகையை மெல்ல மெல்லக் கூறி பக்குவப்படுத்துகினம். பட்ஜெட்டில் இன்னும் எத்தனை அதிர்ச்சிகள் இருக்குதோ. யார் கண்டது?!




## காதிலை பூ கந்தசாமி

www.padippakam.com
Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105. காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEASTREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# தரிசனம்






ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


ஜப்பானியர்களுக்கும், கொரியர்களுக்கும் தொழில் நுட்ப முன்னேற்றத்தில் சபாஷ் சரியான போட்டி. ஜப்பானில் செல்லிடப் பேசிகளை (செல்லுலார் ஃபோன்) ரகம் ரகமாக தயாரித்து சந்தைக்கு விட்டிருக்கிறார்கள். அதற்குப் போட்டியாக கொரியர்களும் செல்லிடப்பேசிகளை சந்தைக்கு விட்டுள்ளனர்.

படத்தில் கொரியப் பெண் வைத்திருப்பது சின்னம் சிறிய நவீன செல்லிடப்பேசி. மறுபக்கம் இருந்து பேசுபவரின் முகம் பார்த்து பேசலாம்.

இரண்டாயிரம் ஆண்டில் இது வர்த்தகச் சந்தைக்கு விற்பனைக்கு வருகிறது.

(பட உதவி அஸாம் அலி- கொரியா)

# அணிநடை



சீனா சோசலிச பாதையில் அடி எடுத்து வைத்து 50 ஆண்டுகள் கடந்து விட்டன. இதனை முன்னிட்டு சீன மக்கள் விடுதலை இராணுவத்தினர் மாபெரும் அணிவகுப்பு நடத்தினார்கள்.

அந்த அணிவகுப்பில் மக்கள் விடுதலை இராணுவ பெண்கள் பிரிவு அணிவகுத்துச் செல்லும் கம்பீரமான காட்சிதான் இது. அச்சம், மடம் நாணம், பயிர்ப்பு என் பவை குணங்கள் அல்ல விலங்குகள்! நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, யாருக்கும் அஞ்சாமை போன்ற அருங்குணங்களே பெண்களுக்குத் தேவை என்றான் பாரதி.

அதுவே இங்கே கண்முன் காணும் காட்சி. ஆகாவென்றெழுந்தது பார் அஞ்சாமை கொண்ட பெண்கள் படை. ■

# விசிறிகள்




ஹொலிவுட் திரைப்படங்களில் 1955ம் ஆண்டு வெளியான இரு பிரசித்தி வாய்ந்த படங்களில் தோன்றி இரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர் நடிகர் ஜேம்ஸ் டீன்.

ஆனால் 1955இல் வாகன விபத்தில் இவர் பலியாகிவிட்டார்.

'ஈஸ்ட் ஒஃப் ஏடன்' படத்தில் அவர் சவாரி செய்யும் அதே காரை அவரே ஓட்டி வருவது போன்ற சுவரொட்டிகள் அவருடைய இரசிகர்கள் மத்தியில் இன்றுவரை பெரும் கிராக்கி.

கடந்த 6 வருடங்களில் இதே சுவரொட்டிகள் மொத்தம் 17 இலட்சத்து 500 பிரதிகளை அச்சிட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன. உலக சாதனை படைத்துள்ளது. வேறு எந்த நடிகரது சுவரொட்டியும் இந்தளவுக்கு அச்சாகி விற்பனையானதில்லை. ■

# ஏற்றம்



நிகில் சோப்ரா-இந்திய கிரிக்கெட் அணிக்கு புதிய நம்பிக்கை நட்சத்திரம். இவர் பிறந்தது 1973 டிசம்பர் 26ம் திகதி. 1997 இல் இந்திய அணியில் இடம்பிடித்தார். கென்யாவுக்கு எதிரான போட்டியில் களமிறங்கினார்.

வலது கை சுழற் பந்து வீச்சாளர், வலது கை துடுப்பாட்ட வீரர். பந்து வீச்சுக்காக அணியில் சேர்க்கப்பட்டுள்ளபோதும், துடுப்பாட்டத்திலும் தற்காப்பு, மற்றும் தாக்குதல் ஆட்டம் ஆடக்கூடியவர். வெங்கட பிரசாத் போன்று பொட்டென்று போய்விடமாட்டார்.

கனடாவின் ரொரன்டோ நகரில் மேற்கிந்திய தீவு அணிக்கு எதிரான போட்டித் தொடரில் இந்தியா வென்றதற்கு சோப்ராவின் பந்துவீச்சும் பிரதான காரணம். அங்கு நடைபெற்ற மூன்று போட்டிகளில் மொத்தம் எட்டு விக்கெட்டுக்களைச் சாய்த்தார். 64 ஓட்டங்கள் மட்டும் கொடுத்தார். இதில் முதல் போட்டியில் 6.2 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைச் சாய்த்தார். இது அவரது சிறப்புப் பந்து வீச்சாகும்.

# சொர்க்கம்



இது உயிருள்ள பறக்கும் பறவையல்ல; விதம் விதமான வர்ணங்களில் ஆபிரிக்கக் காடுகளில் வளரும் ஒருவகைச் செடியின் மலர்.

தென் ஆபிரிக்கன் 'ஸ்ரெலிற்ஸியா' குடும்பத்தைச் சேர்ந்த இச்செடியில் பூக்கும் பூவை எட்டத்திலிருந்து பார்த்தால் உயிருள்ள பறவை போன்று காட்சி தரும்.

இம்மலரின் வர்ணங்களில் தமது உள்ளங்களைப் பறிகொடுத்தோர் தத்தமது இல்லங்களில் நட்டு வளர்க்கிறார்கள். இந்த மலரிடம் மனதைப் பறிகொடுத்தோர் இதற்கு செல்லமாக சூட்டியுள்ள பெயர் என்ன தெரியுமா? 'சொர்க்கத்துக் குருவி'. ■

# 1வது பிறந்த நாள் வாழ்த்து



## டெனியூட்

## 28.07.1999

பலாலி வடக்கை பிறப்பிடமாகவும், இத்தாலி பலர்மோவை வசிப்பிடமாகவும் கொண்ட அருமை-ஆஞ்சலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் டெனியூட் தனது முதலாவது பிறந்த தினத்தை 28.07.99 இல் பலர்மோவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

டெனிக் குட்டியை பாசமிகு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அன்ரன் மாமா, வதனி மாமி, மற்றும் மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், விக்ரர் நிலாஜினி தம்பதிகள், அழகன் சித்தப்பா (இத்தாலி) ஜெயராணி சித்தி, யூலியக்கா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பலாலி ஆரோக்கிய அன்னை அருள்பெற்று பல்கலையும் கற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: சுரேஸ் அத்தான், இலண்டன்.


படிப்பகம்